# கார்காத்தார் ஒப்புரவு

புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல் அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

## KARKATHAR OPPURAVU


| | | | | |
|---|---|---|---|---|
| மலர்–13, இதழ் – 12 | கார்த்திகைத் திங்கள் | விலை ரூ. 25/– | ஆண்டு சந்தா ரூ. 300/– | தமிழ் மாத இதழ் |
| Volume - 13, Issue - 12 | November 2022 | Price Rs. 25/- | Annual Subscription Rs. 300/- | Tamil Monthly |


## தீபத்திருநாள் வாழ்த்துகள்



ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி துணை

# AKP மஹால் & சிவா டிரேடர்ஸ் – மயிலாடுதுறை
# இல்ல சதாபிஷேக விழா



மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி வட்டம், தேத்தாக்குடி பருவுட தெய்வத்திரு. R. வெங்கடேசன் பிள்ளை – V. ராஜாம்பாள் ஆச்சி இவர்களின் மகனும் மயிலாடுதுறை தாலுக்கா, இளந்தோப்பு, நன்னுடை தெய்வத்திரு. G. சரவணன் பிள்ளை – செண்பகம் ஆச்சி இவர்களின் மகளும் எங்களது பெற்றோருமாகிய AKP மஹால் உரிமையாளர் **V. கல்யாணசுந்தரம் பிள்ளை,** திருமதி. **K. பத்மாவதி** இவர்களின் கடின உழைப்புடன் நேர்மையான வழியில் முன்னேறிய எங்களின் தந்தை தாயை வணங்கி மகிழ்கிறோம். எங்களின் வளர்ச்சி மற்றும் வெற்றிக்கு பின்னால் எங்கள் தந்தை & தாயின் கடின முயற்சி, கறைபடாத சிந்தனை, கலங்காத உள்ளம், கனிவான வார்த்தை, ஆடம்பரம் இல்லாத வாழ்க்கை என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். சதாபிஷேக விழாவிற்கு வருகை புரிந்து சிறப்பித்து வாழ்த்திய அனைத்து நல் உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றி !!!

நன்றியுடன்

**B. சபாபதி** – மருமகன்
சிவா டிரேடர்ஸ் – மயிலாடுதுறை.
**S. அமுதா சபாபதி** – மகள்
**S. ஜீவஸ்ரீ** – பேத்தி

**V. நடராஜன்** – மருமகன்
General Sectary Taj Connemara, Chennai.
**N. கீதா நடராஜன்** – மகள்
**N. ரிதிவி** – பேத்தி

**K. வெங்கடாசலம்** – மகன்
**V. சுதா வெங்கடாசலம்** – மருமகள்
**V. ஆகாஷ்** – பேரன்
**V. கௌசிகா** – பேத்தி

**S. ராதாகிருஷ்ணன்** – சம்பந்தி
அவைத்தலைவர்,
அ.தி.மு.க. திருப்பனந்தாள் தெற்கு,
திருலேக்கி.
**R. மல்லிகா ராதாகிருஷ்ணன்**







# வாழ்க மணமக்கள்



## மணமக்கள் : R. ஐஸ்வர்யா B.E., - M. தினேஷ்ராம் B.E.,



M.ராஜசேகரன் - V. சித்ரா
R.அட்சயா, B.E.,
Cell : 9442147519

மயிலாடுதுறை மாவட்டம்,
மயிலாடுதுறை GVM நகர்,
M.ராஜசேகரன் - V.சித்ரா
இவர்களின் அன்பு மகள்
திருவளர்செல்வி
**R.ஐஸ்வர்யா** B.E.,

சென்னை S.கொளத்தூர்,
M.முத்தையன் - M.சுமதி
இவர்களின் அன்பு மகன்
திருநிறைசெல்வன்
**M.தினேஷ்ராம்** B.E.,
Stellantis India, Chennai

இவர்களது திருமணம் மயிலாடுதுறை, நீடூர் **S.J.S. திருமண மஹாலில்** (09.09.2022) வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. திருமணத்திற்கும், திருமண வரவேற்பு விழா விற்கும் வருகைதந்து மணமக்களை வாழ்த்திய அன்பு உள்ளம் கொண்ட உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் எங்களது மனமார்ந்த நன்றியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.



R.முத்தையன் - M. சுமதி
S.கொளத்தூர்
Cell : 9486717181



S.மணிகண்டன் M.Tech.,
Mahindra Research Valley, Chennai.
M. அனுப்பிரியா B.E., Ford GTBC, Chennai

**இதழின் உள்ளே....**


மொபைல் போன் அடிமையாதல் ................................ 7

"கார்த்திகை தீப திருவிழா"......................................... 11

மணமகன் / மணமகள் தேவை........................... 13–16

இரண்டு வகை ஜனநாயகம்......................................17

சங்கப் பலகை.................................................................22

நட்சத்திரங்களும் மரங்களும்................................... 39

திருவிளையாடற்புராணம்........................................... 42

வள்ளலார் 200................................................................ 44

சங்க நிகழ்வுகள்............................................................ 50



**கார்காத்தார் ஒப்புரவு**

**கார்காத்தார் சங்கம் (சென்னை)**

64, சௌராஷ்டிரா நகர் 10வது தெரு,

சூளைமேடு, சென்னை – 600 094.

தொலைபேசி : 044–2472 4882

**ஆயுள் சந்தா ரூ. 2000/-**

**ஆண்டு சந்தா ரூ. 300/-**

வெளியீட்டாளர் : **கைலை. சண்முகம்**

ஆசிரியர் : மேலையூர் **S. அன்பழகன்**

அச்சிடுவோர் :
**மீ. நடராஜன்**
**மயூர் பிரிண்டர்ஸ்**
எண். 1/7, கோபால் தெரு,
சைதாப்பேட்டை ரோடு, வடபழனி,
சென்னை – 600 026. போன் : 4204 6533



கதை, கட்டுரைகள், கவிதைகள் மற்றும் செய்திகள், மணமகன்/மணமகள் பற்றிய விபரங்கள், மற்றும் விளம்பரங்களில் வரும் தகவல்களை வாசகர்கள் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். இவைகளுக்கு "கார்காத்தார் ஒப்புரவு" நிர்வாகம் பொறுப்பேற்காது.


**ஏடு இட்டோர் இயல்**

## வடகிழக்குப் பருவ மழை



இந்த ஆண்டு வட கிழக்குப் பருவ மழை அக்டோபர் மாதம் இறுதி வாரத்தில் துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. வட கிழக்குப் பருவ மழை என்பது தென் இந்தியாவுக்கு மட்டுமே உரியது என்று கூட சொல்லலாம். ஏனென்றால் அந்த கால கட்டத்தில் தான் அதாவது அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான மாதங்களில் தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால், ஏனாம் ஆந்திரப் பிரதேசம், கேரளா, மாஹே மற்றும் உள் தெற்கு கன்னடம் போன்ற இந்தியாவின் தெற்குப் பகுதிக்கு மழையைக் கொடுக்கக் கூடியதாகும்

வட கிழக்கு திசையிலிருந்து இந்த பருவக் காற்று இந்தியாவுக்குள் நுழைவதால் இது வடகிழக்குப் பருவக்காற்று என்று அழைக்கப்படுகிறது. இந்த வடகிழக்குப் பருவக்காற்று அமிஹான் என்றும் தமிழ் நாட்டுக்கு மழை கொடுக்கும் இன்னொரு பருவக் காற்றான தென்மேற்குப் பருவக்காற்று ஹபகாட் என்றும் அறியப்படும். சில காலமாக பொய்த்துப் போயிருந்த தென் மேற்குப் பருவ மழை இந்த ஆண்டு ஓரளவு பெய்துள்ளது. நம்மைப் பொறுத்த வரை நமக்கு அதிக மழை கொடுப்பது இந்த வட கிழக்குப் பருவ மழைதான்.

நம்முடைய அன்றாட வாழ்க்கைக்குத் தண்ணீர் தேவை அதைக் கொடுப்பது இத்தகைய பருவ மழைகள் தான். ஆனாலும் இவை போன்ற மழை காலங்களில் மற்ற பருவ காலங்களை விட நோய் வாய்ப்படுவதற்கு அதிக வாய்ப்புகள் உண்டு. இப்படிப்பட்ட மழைக் காலங்களில் காற்றில் ஈரப் பசை அதிகம் உள்ளது. பாக்டீரியா மற்றும் நோய் கொடுக்கும் கிருமிகள் வாழ்வதற்கு ஏற்றது என்பதால் இந்த காலங்களில் சளி, ஃப்ளூ மலேரியா, டெங்கு, காலரா போன்ற வியாதிகள் பரவ அதிக வாய்ப்புகள் உண்டு.

வறட்சி வெள்ளம் போன்ற இயற்கைப் பேரிடர்களை மனிதர்கள் எதிர்க்கவோ தவிர்க்கவோ இயலாது. ஆனால் அவை வருவதற்கு முன்போ அல்லது வந்த பின்னரோ பாதுகாப்பு நடவடிக்கை எடுப்பது தனி மனிதர்களால் இயலாது. அரசும், உள்ளாட்சி அமைப்புக்களும் அவற்றைச் செய்கின்றன. வரும் முன் காக்கும் நடவடிக்கையாக வீட்டுக்கு அருகில் தண்ணீர் தேங்கி நிற்கும் வாய்ப்புக்கு இடம் கொடுக்கக் கூடாது. மாநகராட்சி சுகாதார துறைகள் அவ்வாறு தண்ணீர் தேங்கி கொசு உற்பத்திக்கு வழி

வகுக்கும் நிறுவனங்களுக்கு அபராதம் விதிப்பதையும் செய்தித்தாள்களில் பார்க்கிறோம். வீடுகளுக்கு அருகிலோ அல்லது வீட்டுத் தோட்டத்திலோ தண்ணீர் தேங்க வைத்து கொசு உற்பத்திக்கு வழி செய்பவர்கள் தாங்களும் பாதிக்கப்படக் கூடிய வாய்ப்பு உண்டு.

ஆனால் இதை விட மோசமாக சிலர் நடந்து கொள்வது நடவடிக்கை எடுக்கத்தக்கது. சென்னை போன்ற மாநகர எல்லைக்குள் அதிகம் இல்லை என்றலும் மாநகரை ஒட்டியுள்ள புற நகர்ப் பகுதிகளில் வீட்டு மனை வாங்கியவர்கள் தாங்களும் வீடு கட்டாமல் பல ஆண்டுகளுக்கு முன்பு சில ஆயிரங்களுக்கு வாங்கிய வீட்டு மனைகளின் விலை தற்போது பல லட்சங்களுக்கு அதிகமாக விற்பனை ஆனாலும் வீடு கட்ட இருப்பவர்களிடம் விற்காமல் காலி மனையாகவே போட்டு வைத்து அக்கம் பக்கத்தாரின் குப்பை கொட்டும் இடமாகவும், பல ஆண்டுகளாக சாலைகளின் உயரம் அதிகரித்து விட்டதால் மழை தண்ணீர் தேங்கும் குட்டைகளாகவும் விளங்குகின்றன. அதனால் அதில் வாழும் பாம்பு போன்ற கொடிய உயிரினங்கள் அக்கம் பக்கத்தில் குடி இருப்பவர்களுக்கு அச்சுறுத்தலாக இருப்பதோடு அல்லாமல் இப்போது கொசு உற்பத்தி ஸ்தலமாகவும் விளங்குகின்றன அந்த மனை உரிமையாளர்களின் முகவரி அல்லது கைபேசி எண் அக்கம் பக்கத்தில் இருப்பவர்களிடம் இருந்தால் அதனை நகராட்சி சுகாதாரத்துறையில் கொடுத்தால் அவர்கள் அந்த மனை உரிமையாளருக்கு அறிவிப்பு அனுப்பி நடவடிக்கை எடுப்பார்கள்

வட கிழக்குப் பருவ மழையின் போது பெரும்பாலான ஆண்டுகளில் தொடர் மழையின் போது வெள்ளப்பெருக்கு எடுத்து சாலைகளிலும் தாழ்வான குடியிருப்புப் பகுதிகளிலும் வெள்ள நீர் அலை கடல் போல் ஓடி மக்களின் வீடுகளில் தண்ணீர் புகுந்து அன்றாட வாழ்க்கை பாதிக்கப்படுவதுண்டு. அந்த நேரங்களில் அரசு சார்பில் நிவாரண நடவடிக்கைகள் எடுக்கப்படுவதும் வாடிக்கைதான். அதனைத் தவிர்த்து வெள்ள நீர் வடிகால்களை முன்னதாகவே சீரமைத்து ஆண்டு தோறும் படும் சிரமங்கள் தொடராமல் அரசு முன் எச்சரிக்கை நடவடிக்கை எடுக்கும் என நம்புவோம். பொது மக்களைப் பொறுத்த வரை வீடுகளில் பெய்யும் மழை நீர் வீணாகாமல் அரசு கூறிய படி மழை நீர் சேகரிப்பு அமைப்புகளை செய்து கொள்ள வேண்டியதும் அவசியமாகும்.


## தி கார்காத்தார் அசோஷியேசன் (மெட்ராஸ்)

**(சென்னை கார்காத்தார் சங்கம்)**

64, சௌராஷ்டிரா நகர் 10வது தெரு, சூளைமேடு, சென்னை – 600 094.
தொலைபேசி : 044–2472 4882

100 நூற்றாண்டு விழா 1922-2022

சென்னை கார்காத்தார் சங்கத்தின் நூற்றாண்டு விழா வருகின்ற 2023 ஆம் வருடம் ஜனவரி மாதம் 8–ந் தேதியன்று ஞாயிற்றுக்கிழமை (08–1–2023) காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை மிகவும் சிறப்புடன் கோலாகலமாக நடைபெற உள்ளது. நூற்றாண்டு விழாவில் கார்குலத்தை சார்ந்த முன்னோடிகள், தொழில் அதிபர்கள், சான்றோர் பெருமக்கள், இளைஞர்கள், மகளீர் உள்ளிட்டோர் கலந்து கொண்டு நூற்றாண்டு விழாவை சிறப்பிக்க உள்ளனர். இவ்விழாவில் தமிழகம் மற்றும் புதுவையை சார்ந்துள்ள நம் சொந்தங்கள் அனைவரும் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கிறோம்.

**நூற்றாண்டு விழா நடைபெறுமிடம்**

**SVV கல்யாண மண்டபம்**

107, 2.A.1, பூந்தமல்லி நெடுஞ்சாலை, பூந்தமல்லி, சென்னை–600056.
(சவீதா பல் மருத்துவ கல்லூரி அருகில் மற்றும் அரவிந்த் கண் மருத்துவமனை எதிரில்).

**– கைலை. சண்முகம்**
செயலாளர்

# மொபைல் போன் அடிமையாதல்

## MOBILE PHONE ADDICTION

**அறிமுகம் :**

இன்று நம் அனைவரின் கைகளிலும் மொபைல் போன் என்று ஒரு கருவி உள்ளது. மொபைல் போன் நம் வாழ்வின் ஒரு அங்கமாகிவிட்டது. அது இல்லாததால் பல முக்கியமான வேலை பாதிக்கப்படலாம். ஒரு நபர் தனது மொபைல் போனில் இருந்து தன்னைத் தானே விலக்கிக் கொள்ள முடியாமல் போனால், இந்த நிலை மொபைல் அடிமையாதல் என்று அழைக்கப்படுகிறது. மொபைல் போன் கண்டுபிடிப்பு தற்போது மனிதனுக்கு ஒரு வரப்பிரசாதம். அதிக இனிப்பு உடல் நலத்திற்கு நல்லதல்ல என்பது போல, வரத்தை அதிகம் பயன்படுத்துவதும் மொபைல் போதை ஆரோக்கியத்திற்கு நல்லதல்ல.

**மொபைல் கண்டுபிடிப்பு :**

மொபைல் போன் கண்டுபிடித்தவர் மார்ட்டின் கூப்பர், அவர் தனது குழுவுடன் சேர்ந்து பல முயற்சிகளுக்குப் பிறகு 1973–இல் மொபைல் வடிவத்தில் ஒரு அழகான பரிசை உலகுக்கு வழங்கினார். முதல் மொபைல் போன் 2 கிலோ எடை மற்றும் மிகவும் விலை உயர்ந்தது. காலப்போக்கில் இது சாதாரண குடிமகனுக்கு பொதுவானதாகிவிட்டது.



**மொபைல் அடிபணிதல் :**

மொபைல் போதையில், நம் மொபைலில் இருந்து நம்மை விலக்கிக் கொள்ள முடியாது. விசேஷ வேலை இல்லாத நேரத்திலும் மொபைலை ஸ்க்ரோலிங் செய்து கொண்டே இருக்கிறோம். இன்றைய காலகட்டத்தில் மொபைல் போன் போதை நம் ஆரோக்கியத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. மொபைலுக்கு அடிமையானவர், அருகில் அமர்ந்திருப்பவர்களிடம் பேசுவதற்குப் பதிலாக, சமூக வலைதளங்களில் நண்பர்களுடன் தொடர்ந்து ஈடுபடுகிறார். இதன் காரணமாக, அவர் தனது அன்புக்குரியவர்களுடனான உறவு பலவீனமடைகிறது. இந்த போதை ஒரு நபரின் வாழ்க்கையின் ஆரோக்கியம், வாழ்வாதாரம், படிப்பு போன்ற பல்வேறு அம்சங்களையும் பாதிக்கிறது.

**மொபைல் போதையின் விளைவு :**

மொபைலை தொடர்ந்து பயன்படுத்துவதால், அதில் இருந்து வெளிப்படும் தீங்கு விளைவிக்கும் கதிர்வீச்சு இதய நோய்களை உண்டாக்கும். இது தவிர, பார்வையில் ஆழமான தாக்கமும் ஏற்படும். தலைவலி, தூக்கமின்மை, நினைவாற்றல் இழப்பு ஆகியவை உடல்நலம் தொடர்பான பிற பிரச்சனைகளும் ஏற்படும். மன அழுத்தம், காது கேளாமை போன்ற நோய்களுக்கு நாம் ஆளாகலாம்.

**மொபைல் ஃபோனின் நம்மைகள் :**

* மொபைல் போன்கள் மூலம் நம் அன்புக்குரியவர்களிடம் எவ்வளவு தொலைவில் இருந்தாலும், அவர்களைப் பார்க்கவும், பேசவும், அவர்களுடன் இணைந்திருக்கலாம்.

* பொபைல் போன் மூலம் வீட்டில் அமர்ந்தபடியே உணவு ஆர்டர் செய்யலாம், டிக்கெட் முன்பதிவு, ஷாப்பிங், மொபைல் பேங்கிங் என சிறப்பான பணிகளை செய்யலாம்.

* மொபைல் ஒரு சிறந்த பொழுதுபோக்கு சாதனம். இது மக்களின் மனநிலையை ஒளிரச் செய்கிறது.

* மொபைல் போன்கள் ஒரு சிறந்த தகவல்தொடர்பு ஊடகம். இதில் உள்ள இணையம் மூலம், ஒரு நபர் எந்த முக்கியமான தகவலையும் பெற முடியும்.

**மொபைல் ஃபோனின் தீமைகள் :**

* மொபைலில் பல அப்ளிகேஷன்கள் உள்ளன. இதன் மூலம் ஒருவர் நாள் முழுவதும் நண்பர்களுடன் வாட்ஸ்அப், ஃபேஸ்புக், இன்ஸ்டாகிராம் போன்றவற்றைப் பயன்படுத்தி பேசிக்கொண்டே இருக்க முடியும். இதன் காரணமாக, குழந்தைகள் படிப்பில் நேரத்தை ஒதுக்குவதில்லை. பெரியவர்கள் தங்கள் வேலையில் கவனம் செலுத்துவதில்லை.

* மொபைலில் உள்ள அனைத்தையும் எளிதில் அணுகுவதால், நம் நினைவில் கொள்ளும் திறன் குறைந்து வருகிறது.

மொபைலுக்கு அடிமையான ஒருவர், காலையில் எழுந்தவுடன் மொபைலை முதலில் செக் செய்துவிட்டு, இரவு தூங்காத வரை மொபைலை உபயோகித்து, தூங்கிய பிறகும் தலையில் வைத்துக்கொண்டு தூங்குவார். நேரம் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. சரியான நேரத்தில் எழாமல் இருப்பது, சரியான நேரத்தில் தூங்காமல் இருப்பது போன்றவை நம் வாழ்வில் ஆழமான பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

* இன்று மொபைலில் பல வகையான கேம்கள் குழந்தைகளுக்குக் கிடைக்கின்றன. இதனால் குழந்தைகள் வெளியில் விளையாடும் விளையாட்டுகளில் இருந்து துண்டிக்கப்படுகின்றனர்.

* சில நேரங்களில் மக்கள் மொபைலில் மிகவும் மூழ்கிவிடுவார்கள், இதன் காரணமாக அவர்கள் ஏதேனும் பெரிய விபத்துக்கு ஆளாகிறார்கள். அவர்களுக்கு முன்னால் ஒரு பெரிய விபத்து ஏற்படுகிறது.

**அளவிடவும் :**

* மொபைல் பயன்பாடு மற்றும் நண்பர்களுடன் பேசுவதற்கு ஒரு குறிப்பிட்ட நேரத்தை அமைக்கவும்.

* மொபைலைப் பயன்படுத்த ஒரு நாள் முழுவதும் மூன்று மணி நேரம் அதிகம், அதைத் தாண்ட வேண்டாம்.

* மொபைலைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, வெளிப்புற விளையாட்டுகள், சுவாரஸ்யமான வேலைகள், நண்பர்கள் மற்றும் உங்கள் குடும்ப உறுப்பினர்களுடன் நேரத்தை செலவிடுங்கள்.

**முடிவுரை :**

மொபைல்களில் நன்மைகள் மற்றும் தீமைகள் இரண்டும் உள்ளன. சரியாகப் பயன்படுத்தினால், அது நம் வேலையை எளிதாக்குகிறது. ஆனால் மொபைல் போதையில், நபர் மொபைலைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, மொபைல் நபரைப் பயன்படுத்துகிறது. எனவே நாம் மொபைல் போனில் அடிமையாகக் கூடாது. மொபைல் போதை நம் வாழ்க்கையை மிகவும் பாதித்துள்ளது. எனவே இந்த அடிமைத்தனத்தை போக்க முயற்சி செய்ய வேண்டும்.

– அர்ச்சனா சுவேதாரண்யம்,
சென்னை–90.
செல்: 9943702054

## வாழ்த்துகிறோம்



சென்னை நீலாங்கரையில் வசித்து வரும் அல்டராகான் நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு. M. கமலகண்ணன் அவர்களை தமிழ்நாட்டிலுள்ள அரசு பொறியியல் கல்லூரிகளின் நிர்வாக குழு தலைவராக (Chairman, Board of Governance forGovermentEngineeringColleges)நியமித்து தமிழ்நாடு அரசு அரசாணை பிறப்பித்துள்ளது. அன்னாரது பணி சிறக்க வாழ்த்துகிறோம்.

**கைலை. சண்முகம்,** செயலாளர்

## வெறும் வயிற்றில் சாப்பிடக் கூடாத உணவுப்பொருள்கள்

**சோடா பானம் :** சோடாவில் கார்போனேட் ஆசிட் அதிகம் இருப்பதால் இவற்றை வெறும் வயிற்றில் குடித்தால் வயிற்றிலுள்ள அமிலத்துடன் கலந்து குமட்டல் மற்றும் கெடுதியைத் தரும்.

**தக்காளி :** தக்காளியில் உள்ள அமிலமானது இரப்பையில் சுரக்கும் அமிலத்துடன் இணைந்து கரைய முடியாத 'ஜெல்' லை உருவாக்கி வயிற்றில் கற்களை உருவாக்கும்.

**மாத்திரைகள் :** வெறும் வயிற்றில் மாத்தரைகளை உண்டால் வயிற்றிறுள்ள படலத்தை அரிப்பதோடு வயிற்று அமிலத்துடன் கலந்து உடலில் பல கோளாறுகளை ஏற்படுத்திவிடும்.

**ஆல்கஹால் :** பொதுவாக ஆல்கஹால் ஆரோக்கியமற்றது. இதை காலையில் வெறும் வயிற்றில் குடித்தால் அதிலுள்ள சேர்மங்கள் வயிற்றுப்படலத்தில் எரிச்சலை ஏற்படுத்தும். இப்படியே நீடித்தால் வயிற்றுப்படலம் அரிக்கப்பட்டு மிகுந்த அபாயம் ஏற்படும்.

**காரமான உணவுகள் :** வயிற்றிலுள்ள அமிலத்தோடு காரம் சேர்ந்து வயிற்றில் கடுமையான எரிச்சலுடன் பிடிப்புகளையும் ஏற்படுத்தும்.

**காபி மற்றும் டீ :** இதை காலையில் வெறும் வயிற்றில் குடித்தால் அதிலுள்ள காபின் நஞ்சு தீவிரமான பிரச்சனைக்கு ஆளாக்கிவிடும். எனவே காலையில் ஒரு டம்ளர் தண்ணீர் குடித்து பின்னர் காபி குடிக்கும் பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும்.

**தயிர் :** தயிரில் நல்ல பாக்டீரியா இருந்தாலும் வயிற்றுப்படலத்துடன் சேர்ந்து வினைபுரிந்து வயிற்று உப்புசத்தை ஏற்படுத்திவிடும்.

**வாழைப்பழம் :** வாழைப்பழத்தின் மக்னீஷியம் அதிகமிருப்பதால் காலையில் வெறும் வயிற்றில் உட்கொண்டால் மக்னீஷியம் உடலில் அதிகரித்து கால்சியம் மற்றும் மக்னீஷியத்தில் ஏற்றத்தாழ்வு ஏற்படக்கூடும். எனவே எக்காரணம் கொண்டும் வாழைப்பழத்தை காலையில் வெறும் வயிற்றில் சாப்பிடுவதை தவிர்த்தால் ஆரோக்கிய வாழ்வு வாழலாம்.

தொகுப்பு
நெ. ஆ. சிவகுருநாதன்,
சிதம்பரம்.

# தி கார்காத்தார் சங்கம் (மெட்ராஸ்)

எண். 64, சௌராஷ்ரா நகர் 10வது தெரு, சூளைமேடு, சென்னை – 600 094.

கல்லூரியில் படிக்கும் பொருளாதாரத்தில் பின்தங்கிய நம்குல மாணவ / மாணவிகளுக்கு நடப்பு கல்வி ஆண்டில் கல்வி உதவித்தொகை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட தகவல்கள் 31.12.2022க்குள் செயலாளர், தி கார்காத்தார் சங்கம் (மெட்ராஸ்), எண். 64, சௌராஸ்டிரா நகர், 10வது தெரு, சூளைமேடு, சென்னை – 600 094. என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறோம். போன் : 044 – 2472 4882

1. மாணவன் / மாணவி பெயர் :
2. தந்தை / தாய் பெயர் :
3. முழுமையான நிரந்தர முகவரி :
4. பெற்றோர் / மாணவ / மாணவி கைபேசி எண் :
5. படிக்கப் போகும் வகுப்பு :
6. கல்லூரியில் பணம் கட்டிய ரசீது (இந்த ஆண்டு) :
7. பெற்றோர் பார்க்கும் தொழில் மற்றும் மாத வருமானம் :
8. வங்கியின் பெயர் மற்றும் கிளை :
9. வங்கியில் கணக்கு வைத்திருப்பவர் பெயர் :
10. வங்கி கணக்கு – வங்கிக் கணக்குப் புத்தகத்தின் முதல்பக்க நகல்.
11. படிக்கும் கல்லூரியின் பெயர் :
12. படிக்கும் கல்லூரியின் துறை தலைவர் / ஆசிரியர் சான்று கடிதம் :
12. மாணவ / மாணவியின் கையொப்பம் :
13. உள்ளூர் கார்காத்தார் சங்க நிர்வாகிகளின் பெயர், பரிந்துரை, செல் நம்பர் அவர்கள் சங்க (Letter Padகளில்) அல்லது சீல்வைத்து தனியாக கடிதம்.

குறிப்பு : CREW கல்வி அறக்கட்டளை, மற்ற சங்கங்களிடம் கல்வி உதவித்தொகை பெற்றவர்கள் விண்ணப்பம் அனுப்புவதைத் தவிர்க்கவும். படிவத்தில் அனைத்து தகவல்களுக்கும் பூர்த்தி செய்யப்பட்டு தேவையான சான்றிதழ்கள், ஒப்புதல் இரசீது இணைக்கப்பட்டால் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். வெள்ளை காகிதத்தில் கடிதம் போல் எழுதி அனுப்பபடுபவை கட்டாயமாக ஏற்றுக்கொள்ளபடமாட்டாது.

**கைலை. சண்முகம்**,
செயலாளர்

## கல்வி உதவித்தொகை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் இரசீது

தி கார்காத்தார் சங்கம் (மெட்ராஸ்) அவர்களிடமிருந்து கல்வி உதவித்தொகையாக கீழ்கண்ட பணம் / காசோலையாக பெற்றுக்கொண்டேன்.

ரூபாய்..............................................................

Revenue Stamp

கையொப்பம்

## “கார்த்திகை தீப திருவிழா”

சிதம்பரம் கிருஷ்ணமூர்த்தி.

புத்தி தரும் தீபம்,நல்ல புத்திரசம்பத்துதரும்
சித்தி தரும் தீபம், சிவதீபம் – சக்திக்கு
உயிராகும், கோணமலை ஓங்கிவளர் ஞானப்
பயிராகும், கார்த்திகைத் தீபம்

படைத்தல் தொழிலை செய்யும் நானே உலகில் உயர்ந்தவன் என்று பிரம்ம தேவரும், உலக உயிர்களை காக்கும் தொழிலை செய்யும் நானே உயர்ந்தவன் என்று மகாவிஷ்ணுவும் சண்டையிட்டு கொள்வதை கண்ட தேவர்கள் பரமசிவனிடம் முறையிட்டனர்.

பிர்மா, மகாவிஷ்ணு சண்டை நிற்கவும் அண்டங்கள் நிலைத்து நிற்கவும் இறைவன் நீண்ட நெடிதுயர் அக்கினி பிழம்பாக உருக்கொண்டு சண்டை போட்டு கொண்டிருந்தோர் நடுவில் எழுந்தருளினார்.

அக்கினி மலையாக காட்சியளித்ததை திருவுருவத்தைக் கண்ட பிரம்ம தேவரும் மகாவிஷ்ணுவும் சண்டையிடுவதை நிறுத்திவிட்டு இவ்வக்கினிமலையின் அடியையோ அல்லது முடியையோ யார் முதலில் கண்டு வருகின்றீரோ அவரே வெற்றி கண்டவராவார். என்று உடன்படிக்கை செய்துக்கொண்டு பிரம்மா அன்னப்பறவை உருவெடுத்தும் மகாவிஷ்ணு வராக உருவெடுத்துக் கொண்டு புறப்பட்டுச் சென்றனர்.



மகாவிஷ்ணுவோ பாதாள உலகம் ஏழிலும் பத்து நாட்களாக தேடியும் அக்கினிமலை தீ பிழம்பின் அடியை காண முடியாமல் திரும்பி வந்தவர் அங்கு குழுமி இருந்தோரிடம் தன்னுடைய தோல்வியை ஒத்துக்கொண்டார்.

அன்னப்பறவை உருவெடுத்து மேலுலகம் ஏழிலும் பத்து நாட்கள் தேடி இறுதியில் அக்கினி மலை உச்சியை வானுலகில் கண்டதாக அங்கு குழுமியிருந்தோரிடம் பொய்யை கூறினார் பிரம்ம தேவர்.

மகாவிஷ்ணுக்கும் பிரம்மதேவருக்கும் இடையில் தோன்றிய சிவபெருமான் ஏ ! பிரம்மதேவா ! உன் அகங்காரத்தினால் அக்கினி மலை உச்சியை காணாமலே கண்டதாக பொய்யுரைத்தாய் அதனால் பூலோகத்தில் உனக்கு கோவில் இல்லாமல் போகக் கடவது என்று சாபமிட்டார்.

இறைவனுடைய சாபத்துக்கு ஆளான பிரம்மதேவர், அக்கினி மலையாக காட்சி தந்த இறைவா ! நான் பந்தயத்தில் தோல்வி அடைந்துவிடக்கூடாது என்ற ஆதங்கத்தினால்தான் பொய் கூறிவிட்டேன் என்னை மன்னித்தருளவேண்டும் என்று சிரம் தாழ்த்தி நின்றார். பிரம்ம தேவன் மேல் மகாவிஷ்ணு மேல் இரக்கப்பட்ட சிவபெருமான் அக்கினி சோதி மலையாக நின்ற என்னுடைய அடிமுடியைத் தேடிய உங்கட்கு ஒவ்வொரு வருடமும் வரும் கார்த்திகை மாதம் பூர்வபட்ச கார்த்திகை நட்சத்திர நாளில் அண்ணாந்து பார்க்கும் உயர்ந்த மலை மேல் சோதி வடிவமாக காட்சி அளிப்பேன். அந்த மலை அடிவாரத்தில், சோதிலிங்கமாக இருந்து தன்னை வணங்கிவரும் பக்தருக்கு அருளாசி வழங்கி வருவேன் என்று கூறி ஆசி வழங்கினார் இறைவன்.

திருவண்ணாமலையில் ஒவ்வொரு வருடமும் கார்த்திகை மாதம் பூர்வ பக்ஷ கார்த்திகை நட்சத்திரத்தன்று தொடங்கி கார்த்திகை தீப விழா பத்து நாட்கள் கொண்டாடப்பட்டு வந்தது என்று திருவண்ணாமலை கோவிலிலுள்ள கல்வெட்டு மூலம் அறிகின்றோம். தமிழ்நாட்டில் சோழ மாமன்னர் இராஜேந்திரன் காலத்திலும் அவருக்கு பின்னால் ஆட்சிக்கு வந்த மூன்றாம் குலோத்துங்கன் காலத்திலும் கோவில்களில் பத்து நாள் கொண்டாடப்பட்ட கார்த்திகை விழா தற்காலத்தில் மூன்று நாள் மட்டிலும் கொண்டாடப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு வருடமும் கார்த்திகை மாதம் பூர்வ பட்சத்தில் வரும் கார்த்திகை நட்சத்திரத்தின் முதல் நாள் வரும் பரணி நட்சத்திரத்தன்று வீடுகளை சுத்தப்படுத்தி மெழுகி மாவிலை தோரணம் கட்டி மாலையில் அகல் விளக்கேற்றி வீடெங்கும் வைத்து விழாவினை தொடங்குவார்கள்.

உள்ளூரில் உள்ள சிவன் கோவில்களில் நடைபெறும் அபிஷேக ஆராதனைகளைக் காணச் செல்வார்கள். அங்கு நடுசாமத்தில் பாலர்களின் கையில் தீபத்தைக் கொடுத்து குறிப்பிட்ட இடங்களில் வைக்கப்பட்டிருக்கும் தீபவிளக்கினை ஏற்றச் செய்வார்கள் பிறகு ஆராதனைகள் நடக்கும் அதற்கு பரணி தீபம் ஏற்றுதல் விழா என்று கூறுவார்கள். (கருங்காட் விழா என்றும் கூறுவர்)

அடுத்த நாள் கார்த்திகை நட்சத்திரத்தன்று

காலையில் வீடுகளைத் தூய்மை செய்த பின் அரிசி மாவு, மஞ்சள் பொடி சேர்த்தரைத்து அச்சாந்தினை கதவு சன்னல்களில் பூசி அழகு படுத்துவர் அதற்கு கைய்யடித்தல் விழா என்று கூறப்படும், அன்று மாலையில் வீட்டின் முற்றங்களில் மாக்கோலம் போட்டும் கிணறுகளில் திண்ணைகளில் அகல் விளக்கேற்றி வைத்த பின் வாலிபர்கள் ஒன்று சேர்ந்து பெரிய அகல் விளக்கில் பெரிய திரியிட்டு கொளுத்தி எடுத்துக்கொண்டு கொட்டு மேளம் முழங்க தெரு தெருவாக சுற்றி வருவார்கள். கோயில் கோபுரவாசல் முன்னால் கோபுரம் உயரத்திற்கு பனைமரத்தை நட்டு அதை பனை மட்டைகளை கொண்டு அழகுபடுத்தி வைத்திருப்பார்கள்.

சூரியன் மறையப்போகும் பிரதோஷ வேளையில் வாலிபர்கள் எடுத்துச்சென்ற அகல் விளக்கை ஆற்றிலோ குளத்திலோ விட்டு விட்டு கோயிலுக்கு வருபவர்கள் கோயில் கோபுரத்தின் முன் அமைந்துள்ள பனை ஓலை கோபுரத்தை தீவைத்து கொளுத்துவர் அப்பொழுது அங்கு கூடியுள்ளவர்கள் அரோகரா! என்று கோஷமிட்டு அண்ணாந்து கன்னத்தில் போட்டுக்கொள்வார்கள் இதை சொக்கபானை கொளுத்தும் விழா என்று கூறுவார்கள்.

அன்று இரவு பனை மரத்தின் பூவை நெருப்பில் சுட்டு கருகச் செய்து அத்துடன் சிறிது உப்பு சேர்த்து பொடியாக்கி அத்துளை புதுத் துணியில் வைத்து உருளைப்போல் சுற்றி கட்டி கவட்டி கிளையில் வைத்து அந்த உருளையில் தீப்பொறி ஒன்றை வைத்தால் அந்த கவட்டி உருளை தீப்பற்றிக்கொள்ளும் அதை கைய்யில் எடுத்து தோளின் இருபுறங்களிலும் மாரி மாரி சுற்றுவார்கள் கவட்டியில் இருந்து தீப்பொரி சிதரி விழும் அதைக் கண்டு மகிழ்ந்து

மாவளிக்காரன் பொண்டாட்டி
மக்குப்புள்ள பெத்தாளாம்
எடுக்கப்போன சீமாட்டி
இடுப்பொடிந்து செத்தாளாம்
பாக்க போன சீமாட்டி
பல்லொடைஞ்சி செத்தாளாம்

என்று பாடி ஆடி மகிழ்வார்கள் பெண்கள்.

மூன்றாம் நாளன்று மாலையில் சிறுவர்கள் கார்த்திகையை சுற்றிக் கொண்டு போய் ஊரின் ஒதுக்குபுறத்தில் போட்டுவிட்டு திரும்பி பார்க்காமல் வீட்டுக்கு வந்துவிடுவார்கள்.

தமிழ்நாட்டில் திருவண்ணாமலையிலும், வடலூரிலும் சோதி தரிசனம் நடைபெறுகிறது.

## ஓய்வூதியர்களின் கவனத்திற்கு

1. ஓய்வூதியர்கள் தங்கள் வங்கி கணக்கில் தனது மனைவியின் பெயரையும் சேர்த்து Joint Account ஆக உடனே சேர்த்து விடவும். ஓய்வூதியர் காலமானால் அவரது மனைவிக்கு குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்கு வசதியாக இருக்கும். எனவே, ஓய்வூதியர் அனைவரும் தனது மனைவியின் பெயரையும் வங்கி கணக்கில் சேர்த்துவிடவும்.

2. ஓய்வூதியர் காலமாவதற்கு முன்பே அவரின் மனைவி இறந்து, அதன்பிறகு கணவன் காலமானால் Lifetime arrears of pension & Family Security Fund Rs. 50,000 பெற தாசில்தாரிடம் வாரிசு சான்று பெற்று தாக்கல் செய்ய வேண்டும். இதைத் தவிர்க்க, ஓய்வூதியர் உயிருடன் இருக்கும்போதே ஓய்வூதியம் வழங்கும் அலுவலர் முன்பு நேரில் ஆஜராகி இரட்டை பிரதிகளில் (In duplicate) Form A (Prescribed in G.O.Ms. 562-Finance, Dt. 15-06-1987 & Nomination for Family Security Fund, ஆகிய இரண்டு படிவங்களிலும் Nominee பெயர் மற்றும் போட்டோ ஒட்டி நேரில் தரவும். இதில் அலுவலர் கையொப்பமிட்டு Nomination accepted என்ற சான்றுடன் ஒரு படிவத்தை திருப்பித் தருவார். அவற்றைப் பெற்று இரண்டு படிவங்களையும் (Nominee for life time arrears Family Security Fund) ஓய்வூதிய புத்தகத்தில் ஒட்டி வைக்கவும். இப்படி செய்தால் ஓய்பூதியதாரார் இறந்த பிறகு Nominee சிக்கலின்றி நிலுவைத் தொகையினைப் பெறமுடியும்.

எனவே, மேற்கண்ட இரண்டு பணிகளையும் ஓய்வூதியர்கள் உடனே செய்து முடித்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசு சிறப்பு செயலாளர் அவர்களது கடித எண் 30948 / ஓய்வூதியம் / 2022–2 நாள் 7–10–2022 ன் படி தமிழ்நாடு அரசு ஓய்வூதியர்கள் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டத்திற்கான நியமனதாரரை ஓய்வூதியரோ அல்லது அவரின் துணைவரோ இருவரும் உயிருடன் இருக்கும்போதே நியமனம் செய்துகொள்ளலாம் எனத் தெரிவித்து ஆணையிட்டுள்ளது.

– தகவல் : P.G. இராமலிங்கம்.

9842054106

# மணமகன் / மணமகள் தேவை

**முக்கிய குறிப்பு :** எங்களுக்கு வரும் விபரங்களின் அடிப்படையில் இப்பகுதியில் வரும் விளம்பரங்கள் தொகுக்கப்படுகின்றன, கொடுக்கப்பட்டிருக்கும் தகவல்களைச் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

| பெயர்<br>நட்சத்திரம் | பிறந்த தேதி<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **B 1/11** செல்வி **T. செல்வபிரியா**<br>ஆயில்யம் 4ம் பாதம்<br>சேவுட<br>பூர்வீகம் : திருப்புங்கூர் | **14.08.96** | B.E., MBA., | ICICI Bank | திரு. K. தாமரைச்செல்வன்,<br>**184, 8**வது குறுக்குத் தெரு,<br>சிவசக்தி நகர்,<br>சிதம்பரம்<br>Cell : **90434 31629, 87607 42498** |
| **B 2/11** செல்வி **கௌ. ரோஷிணி**<br>ரோஹிணி<br>அரசுடையார்<br>பூர்வீகம் : தஞ்சாவூர்<br>விருப்பம் : சமபடிப்பு/சென்னை/பெங்களூரில் நல்ல பணியில் உள்ள வரன் | **16.09.95**<br>155 cm | B.E.<br>(Com. Sci)<br>M.Sc., Cyber Forensics and Information Security | Associate in MNC<br>Bangalore<br>(Top 5 Company) | திரு. N. Gowrishankar,<br>14/47, Valluvar Street,<br>Jagannatha Nagar, Arumbakkam,<br>Chennai - 600 106.<br>Cell : **96772 33791**<br>Phone : **044 – 2363 8284** |
| **B 3/11** செல்வி **Dr. S. சத்திய பிரியா**<br>கேட்டை 3ம் பாதம்<br>களப்பாள<br>பூர்வீகம் : செந்துறை | **21.12.95**<br>160 cm | B.D.S., | Pvt. Clinic,<br>Trichy | திரு. M. சச்சிதாநந்தம்,<br>மேலரத வீதி, நெய்வனம் தெற்கு,<br>செந்துறை (PO),<br>அரியலூர் (DT) **– 621 714.**<br>Cell : **99948 69441** (W),<br>**94864 81712, 63833 93379** |
| **B 4/11** செல்வி **R. சுகன்யா**<br>ரேவதி<br>முதனுட<br>பூர்வீகம் : பெரியகோட்டகம் – காட்டுமன்னார்கோவில்<br>விருப்பம் : நல்ல குணமுள்ள பணியில் உள்ள வரன் | **04.09.93**<br>5' - 4" | B.E. (CSE) | | திரு. K. இராஜேந்திரன்,<br>பெரிய கோட்டகம்,<br>செட்டித்தாங்கள் (அஞ்சல்),<br>கடலூர் மாவட்டம் **– 608 304.**<br>Cell : **99521 55584, 96983 28374** |
| **B 5/11** செல்வி **J. விஜயலெட்சுமி**<br>பூசம்<br>துலானுடை<br>பூர்வீகம் : மணிக்கிராமம்<br>விருப்பம் : நிரந்தர பணியில் உள்ள வரன் | **13.01.98**<br>163 cm | B.Sc.,<br>M.Sc. (Maths)<br>B.Ed., | Maths Teacher<br>Good Samaritan<br>CBSE School,<br>Sirkali | திரு. V. ஜெயகுமார்,<br>கீழத் தெரு, மணிக்கிராமம் (PO),<br>சீர்காழி (Tk) **– 609 114.**<br>Cell : **94431 28605, 94863 12861** |
| **B 6/11** செல்வி **S. பத்மாவதி**<br>அவிட்டம்<br>புதுவிட<br>பூர்வீகம் : சேத்தூர் – வைத்தீஸ்வரன் கோவில் | **12.01.97**<br>176 cm | B.A. | Citi Bank<br>Back Office<br>Chennai | திரு. N. Sundararajan,<br>Thirumullaivoyal,<br>Chennai - 600 062.<br>Cell : **82486 51956** |
| **B 7/11** செல்வி **S. சூர்யா**<br>மிருகசீரிடம் 1ம் பாதம்<br>தென்னபிரிய<br>பூர்வீகம் : தலைஞாயிறு – மயிலாடுதுறை<br>விருப்பம் : சென்னையில் உள்ள வரன் | **05.04.95**<br>5" - 3" | B.Sc.<br>(Computer Science) | TCS<br>Rs. 4.2 Lakhs/PA | திரு. K. சுப்ரமணியன்,<br>**12/68,** கண்ணதாசன் சாலை,<br>முகப்பேர் கிழக்கு,<br>சென்னை **– 600 037.**<br>Cell : **99404 87584, 99401 68835** |
| **B 8/11** செல்வி **P. தரணிப்பிரியா**<br>பூரட்டாதி 4ம் பாதம்<br>பொன்னமுட<br>பூர்வீகம் : வளையமாதேவி (மேல்), சிதம்பரம் TK | **28.05.2000** | M.Com., | | திரு. க. பரமசிவம்,<br>**5/375,** ஓம்சக்தி நகர்,<br>கணபதிபாளையம் (PO),<br>திருப்பூர் **– 5.**<br>Cell : **95784 35990, 99945 76224** |

| பெயர்<br>நட்சத்திரம் | வயது<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **B 9/11** செல்வி **R. ஸ்ரீரச்சனா**<br>ரேவதி<br>நாரணகுடை<br>பூர்வீகம் : மூவலூர்<br>விருப்பம் : உள்நாடு / வெளிநாடு வேலையில் உள்ள வரன் | 11.08.90<br>168 cm | B.Tech.,<br>M.S., | Software Engineer<br>Amazon Sanjose<br>California<br>172000$/PA | திரு. A. ராஜசேகரன்,<br>B3, Aadarsh Apartments, Old No. 567,<br>New No. 918, Poonamallee High Road,<br>Arumbakkam, Chennai - 600 106.<br>Cell : 94425 44989<br>E-mail : rajasekaran.mech.mtech@gmail.com |
| **B 10/11** செல்வி **அ. மதுரநாயகி**<br>பரணி<br>விழுப்பதரைய<br>பூர்வீகம் : விருத்தாசலம் | 06.08.96<br>164 cm | B.E. (EEE) | Vesta Wind<br>Technology<br>India Pvt. Ltd., | திரு. ச. அகில நாயகம்,<br>109, பாரதியார் வீதி,<br>பெரியார் நகர் வடக்கு,<br>விருத்தாசலம் – 606 001.<br>Cell : 94432 49058, 94449 39471 |
| **B 11/11** செல்வி **R. ஆர்த்தி**<br>ரோஹிணி<br>கொங்குராயன்<br>பூர்வீகம் : முளப்பாக்கம்<br>விருப்பம் : படித்த பணியில் உள்ள வரன்.<br>குறிப்பு : மணமகளுக்கு ராகு, கேது தோஷம் பரிகாரம் செய்யப்பட்டது. | 27.01.99<br>160 cm | B.Com.,<br>MBA., | | திரு. N. ராமச்சந்திரன்,<br>22/2, காத்தாயி அம்மன் கோவில் தெரு,<br>மூங்கில் தோட்டம்,<br>மயிலாடுதுறை – 609 305.<br>Cell : 94865 90299, 73736 54154 |
| **B 12/11** செல்வி<br>**Dr. V.S. ஐஸ்வர்யா**<br>மூலம் 2ம் பாதம்<br>நிம்மலுட<br>பூர்வீகம் : மதுராந்தகநல்லூர் – சிதம்பரம்<br>விருப்பம் : நிரந்தர பணியில் உள்ள வரன்,<br>மருத்துவதுறைக்கு முன்னுரிமை | 02.12.97<br>163 cm | Pharm D,<br>(Doctor of<br>Pharmacy)<br>DFN | Asst. Professor | கி. அருள்பிரகாசம் பிள்ளை,<br>6, அப்பாவு பிள்ளை தெரு,<br>சிதம்பரம் (TK).<br>கடலூர் (PO) – 608 001.<br>Cell : 94424 41120, 88072 82201<br>E-mail : saraswathipriya1@gmail.com |
| **B 13/11** செல்வி **K. நிவேத பிரீத்தா**<br>ஹஸ்தம்<br>வில்வராய<br>குறிப்பு : Single Parent (Mother Only) | 05.02.99<br>159 cm | BDS (Dentist) | | திருமதி. L. ஆனந்தி,<br>66, பெருமாள் கோவில் வீதி,<br>புதுச்சேரி – 1.<br>Cell : 87606 61133, 63817 58266 |
| **B 14/11** செல்வி **ப. சங்கீதா**<br>பூராடம்<br>பூவனுட<br>பூர்வீகம் : கொருக்கை<br>விருப்பம் : IT Field ல் வெளிநாட்டில் வேலை பார்க்கும் வரன் | 14.06.95 | B.E., | Consultant Data<br>Science &<br>Analytics, Softcrylic<br>Technology Solutions<br>India Pvt. Ltd.,<br>Chennai | திரு. S. பன்னீர்செல்வம்,<br>51, பட்டமங்கல ஆராயத் தெரு,<br>மரகதமாணிக்கம் அப்பார்மெண்ட்,<br>கூறைநாடு, மயிலாடுதுறை–609 001.<br>Cell : 94884 64659, 75984 52928 |
| **B 15/11** செல்வி **R. வைஷ்ணவி**<br>பூசம் 2ம் பாதம்<br>தூத்துக்குட<br>பூர்வீகம் : ஜெயங்கொண்டம் | 16.07.96<br>173 cm | B.Tech.,<br>(ECE) | | திரு. S. ராஜேந்திரன்,<br>D.No. 45/26, நாணயக்கார தெரு,<br>கும்பகோணம் – 612 001.<br>Cell : 75983 10495 / 94884 23062 |
| **B 16/11** செல்வி **S. ஹரிப்பிரியா**<br>புனர்பூசம்<br>லக்னமுடையான்<br>பூர்வீகம் : கும்பகோணம்<br>விருப்பம் : சென்னையில் பணிபுரியும் வரன் | 25.09.97<br>158 cm | M.Sc.<br>(Physics)<br>DOA T/W<br>Both Higher | Wells Fargo<br>Chennai | திரு. S. சிவக்குமார்,<br>258, ஔவையார் தெரு,<br>பெரியார் நகர், சாக்கோட்டை,<br>கும்பகோணம் – 612 401.<br>Cell : 95008 67108, 98946 38450 |

| பெயர்<br>நட்சத்திரம் | வயது<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| G 1/11 செல்வன் **ப. ஸ்ரீராம்**<br>ஆயில்யம்<br>சாத்தனுட<br>பூர்வீகம் : வயலூர் (குன்னம் வட்டம்)<br>விருப்பம் : சமபடிப்புள்ள வேலைக்குச் செல்லும் (அ) செல்ல விருப்பமுள்ள வரன். | 28.10.94<br>165 cm | B.E. (CSE) | TCS<br>சென்னை<br>Rs. 40,000/PM | திரு. இரா. பரஞ்சோதி,<br>5A/84C-1A, ரோஸ் நகர்,<br>பெரம்பலூர் – 621 212.<br>Cell : 98650 54625 |
| G 2/11 செல்வன் **ஆ. கார்த்திகேயன்**<br>மூலம் 3ம் பாதம்<br>களப்பாள | 30.10.92 | B.E. (Mech) | Project Engineer<br>(UAE)<br>Rs. 1 Lakh / PM | திரு. சபா. ஆறுமுகம்,<br>64, அக்ரஹாரத் தெரு,<br>பெண்ணாடம் – 606 105.<br>திட்டக்குடி, கடலூர்<br>Cell : 98944 88227 / 77081 05999 |
| G 3/11 செல்வன் **கே. மணிவேல்**<br>கேட்டை<br>முதுனுட<br>பூர்வீகம் : மதுராந்தகநல்லூர் (சிதம்பரம்) | 15.02.93<br>6' - 00" | B.E. (EEE), | வணிகவரி துறை,<br>சேலம் | திரு. T. கேசவன்,<br>5/234-2, புதிய அம்பேத்கர் நகர்,<br>ஜாகிர் ரெட்டிபட்டி,<br>சேலம் – 636 302.<br>Cell : 94422 59692 |
| G 4/11 செல்வன் **ம.வினோ பாலாஜி**<br>ரோகிணி<br>விசுவராய<br>பூர்வீகம் : திட்டக்குடி – பெரியகோட்டகம் | 18.06.93<br>174 cm | B.E. M.B.A.,<br>CAIIB | Asst. Manager,<br>City Union Bank | திருமதி. M. விஜயா,<br>பள்ளிக்கூடத் தெரு,<br>சிறுகாலூர் (PO), சிதம்பரம் (TK),<br>கடலூர் (DT), – 608 201<br>Cell : 97515 36158, 96558 35402 (W) |
| G 5/11 செல்வன் **S. முத்துவேல்**<br>திருவோணம்<br>நெப்புகுட<br>பூர்வீகம் : கூடலூர் | 25.05.89<br>5' - 4" | B.E. (Mech), | Lecturer<br>சிதம்பரம்<br>பாலிடெக்னிக் | திரு. G. செல்வம் பிள்ளை,<br>பெருமாள் கோவில் தெரு,<br>கூடலூர் (PO), திட்டக்குடி (TK),<br>கடலூர் (DT) – 606 111.<br>Cell : 95243 25807, 99651 77567<br>63805 66066<br>E-mail : gsm40831@gmail.com |
| G 6/11 செல்வன் **S. விக்னேஷ்**<br>சுவாதி<br>கானுட | 16.10.93<br>172 cm | B.Tech. (IT),<br>MBA., | Manager,<br>Software MNC,<br>Bangalore | திரு. G. சங்கர்,<br>10A, சரவண தோட்டம்,<br>மகிழம் அவென்யூ,<br>அப்பநாயக்கன்பாளையம் ரோடு,<br>துடியலூர்,<br>கோயம்புத்தூர் – 641 034.<br>Cell : 63628 10643 |
| G 7/11 செல்வன் **இரா. பாலமுருகன்**<br>விசாகம்<br>வேளாண் | 27.05.91 | M.Sc.<br>(Software<br>Engineering) | Auditing<br>(Matrix Business<br>Service)<br>Rs. 25,000/PM | திரு. இரா. ராஜசேகர்,<br>2/171, திருமஞ்சன வீதி,<br>மேலப்பெரும்பள்ளம்,<br>மயிலாடுதுறை மாவட்டம் – 609 107.<br>Cell : 85268 57111, 90038 93694 |
| G 8/11 செல்வன் **V. விஷாந்த்**<br>விசாகம்<br>மாயனுடை<br>பூர்வீகம் : திருநெல்வேலி | 13.02.93<br>170 cm | B.E. (ECE). | Amadeus<br>Bengaluru | திருமதி. நீலா வைத்திலிங்கம்,<br>2B, ஹார்மனி சங்கீதா,<br>D118, அழகிரிசாமி சாலை,<br>கே.கே. நகர், சென்னை – 600 078.<br>Cell : 98944 50930, 89399 16906<br>E-mail : neelavaithilingam@gmail.com |

| பெயர் நட்சத்திரம் | வயது உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **G 9/11** செல்வன்<br>**G.K. Venkateshwaran**<br>Chithirai 2<br>Manuda | **19.08.96**<br>165 cm | B.Tech. (IT) | Software Development<br>Senior Analyst<br>Accenture<br>Chennai<br>Rs. 8.75 Lakhs/PA | திரு. G. Krishnakumar,<br>3/406, Sannathi Street,<br>Onbathuveli & Post,<br>Thirukkarugavur,<br>Thanjavur Dt. - 614 302.<br>Cell : **90806 65184, 93455 48703** |
| **G 10/11** செல்வன் **பா. ஆனந்தன்**<br>உத்திரட்டாதி 4ம் பாதம்<br>பஞ்சதரிய<br>பூர்வீகம் : கெளுத்தூர்<br>விருப்பம் : பட்டம் பயின்ற பெண் | **17.08.92**<br>5' - 11" | B.E. (Mech), | Business, BSNL<br>இணைய சேவை<br>Net Business<br>Rs. 12 Lakhs/PA | திரு. அ. பாலசுப்ரமணியன்,<br>23, கரையான் தோப்பு,<br>ராஜா தெரு, திருவிழந்தூர்,<br>மயிலாடுதுறை Tk - **609 001.**<br>Cell : **94873 32726, 94454 53251** |
| **G 11/11** செல்வன் **M. சரவணன்**<br>திருவாதிரை<br>வங்காரமுட<br>பூர்வீகம் : வானமாதேவி–காட்டுமன்னார்குடி<br>விருப்பம் : படித்த குடும்ப பாங்கான பெண். | **08.07.94**<br>170 cm | B.E. (ECE) | HCL Chennai<br>Rs. 30,000/PM | திரு. B. முத்துக்குமரன்,<br>வெள்ளாழத் தெரு,<br>வானமாதேவி & PO,<br>காட்டுமன்னார்கோவில் Tk.–**608 701.**<br>Cell : **91768 40787** |
| **G 12/11** செல்வன் **R. வினோத்**<br>அனுஷம்<br>மாயலுட<br>பூர்வீகம் : உட்கோட்டை – ஜெயங்கொண்டம் Tk. | **08.07.87**<br>182 cm | M.Sc.<br>Electronic<br>Science | Lakshmi Electrical Control Systems Ltd.,<br>Coimbatore<br>Rs. 40,000/PM | திரு. R. இராஜகோபால்,<br>முதல் தளம்,<br>27, உத்திர தெற்கு வீதி,<br>குத்தாலம்,<br>மயிலாடுதுறை Dt - **609 801.**<br>Cell : **98944 16777** |
| **G 13/11** செல்வன் **S. இராமலிங்கம்**<br>பூசம் 2ம் பாதம்<br>வளதரிய<br>பூர்வீகம் : பெரியநெல்லிக்கொல்லை | **06.10.96**<br>5¾" | DCSE | CREW (P) Ltd.,<br>Chennai<br>Rs. 15,000/PM | திரு. S. செல்வராசு பிள்ளை,<br>விநாயகர் கோவில் தெரு,<br>பெரியநெல்லிக்கொல்லை,<br>புவனகிரி வட்டம் – **608 704.**<br>Cell : **98435 92963** |
| **G 14/11** செல்வன் **இர. வெற்றிச்செல்வன்**<br>பூரம்<br>தென்னவராய<br>பூர்வீகம் : பெ.பொன்னேரி/பெண்ணாடம் | **12.04.95**<br>168 cm | B.E. (EEE) | ABPM<br>(Indian Postal Dept.<br>Central Govt.) | திரு. தி. இரவிச்சந்திரன்,<br>6வது குறுக்குத் தெரு,<br>சரோ ரத்தின மகால் அருகில்,<br>பெண்ணாடம் & அஞ்சல்,<br>திட்டக்குடி வட்டம் – **606 105.**<br>Cell : **85085 71741, 94426 56045** |
| **G 15/11** செல்வன் **R. திருவரசன்**<br>பூசம்<br>பாலுட<br>பூர்வீகம் : வையூர்<br>விருப்பம் : படித்த நல்ல குணம் உள்ள வரன். | **13.03.95**<br>5' - 10" | B.E. (CSE) | Expert Solutions<br>Technology<br>Chennai<br>Rs. 8 Lakhs / PA | திரு. T. Ramamoorthy,<br>93, North Street,<br>Vaiyur & PO<br>Chidambaram TK - 608 401.<br>Cell : **9789442746** |
| **G 16/11** செல்வன் **K. ஆனந்த்**<br>அசுபதி<br>சாத்துக்குடையான்<br>பூர்வீகம் : முத்துசேர்வாமடம் | **19.01.94**<br>175 cm | DME | Pvt. Company<br>Rs. 20,000/PM | திருமதி. K. அருள்நாயகி,<br>வெள்ளாழத் தெரு,<br>முத்துசேர்வாமடம் & PO,<br>உடையார்பாளையம் TK - 612 903.<br>Cell : **99420 54379 / 93455 91920** |

## இரண்டு வகை ஜனநாயகம் – பகுதி 1
## TWO TYPES OF DEMOCRACY

மேலையூர் ச. அன்பழகன், 98413 73184

என்னை சந்தித்த ஒரு அன்பர் கேட்டார், "ஏன் சார் நமது நாடு ஜனநாயக நாடு தானே ? " என்றார். ஆமாம் அதில் என்ன சந்தேகம் என்றேன் அப்படியானால் அமெரிக்கா என்ன நாடு என்றார் அதுவும் ஜனநாயக நாடுதான் என்றேன். அப்படியானால் அங்கு எல்லா விஷயங்களையும் ப்ரெசிடெண்ட்டே சொல்கிறார் செய்கிறார் பிரதமர் பெயரே வருவதில்லை நம் நாட்டில் எல்லாம் பிரதமரே சொல்லவும் செய்யவும் செய்கிறார் குடியரசுத் தலைவர் ஏதும் சொல்வதில்லையே அது எப்படி என்றார்.

**அதிபரைச் சார்ந்த அரசாங்கம்**

அதற்கு பதிலளித்த நான், ஜனநாயக அரசாங்கம் என்பது இரண்டு வகையில் உள்ளது – ஒன்று ப்ரெசிடெண்ட் என்னும் அதிபரைச் சார்ந்த அரசாங்கம் இன்னொன்று பார்லிமெண்ட் என்னும் நாடாளும் மன்றத்தைச் சார்ந்த அரசாங்கம். அமெரிக்கா பின்பற்றுவது ப்ரெசிடென்ஷியல் ஃபார்ம் ஆஃப் கவர்ன்மெண்ட் என்னும் வகை. அங்கு எல்லா அதிகாரமும் ப்ரெசிடெண்ட் என்னும் அதிபருக்குத் தான் அங்கு பிரதமர் என்ற பதவியே கிடையாது.

**நாடாளும்மன்றம் சார்ந்த அரசாங்கம்**

நம் இந்திய நாட்டில் பார்லிமெண்ட் ஃபார்ம் ஆஃப் கவர்ன்மெண்ட் என்னும் நாடாளும் மன்றத்தைச் சார்ந்த அரசாங்க முறையைப் பின் பற்றுகிறோம். இதில் எல்லா அதிகாரமும் நாடாளுமமன்றம் அதாவது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளும் மன்ற உறுப்பினரான பிரதமர் வசம் தான் இருக்கும்.

**இரண்டுமே ஜனநாயகம் தான்**

இரண்டுமுறையிலும் அதிகாரமையமாக இருப்பவர்கள் அதாவது அமெரிக்கா போன்ற அதிபரைச் சார்ந்த அரசாங்கத்தில் அதிபரும், இந்தியா போன்ற நாடாளும் மன்றத்தைச் சார்ந்த அரசாங்கத்தில் பிரதமரும் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தான். இரண்டு முறையுமே ஜனநாயகம் தான் இரண்டு முறையைப் பற்றியும் சற்று விரிவாகப் பார்ப்போம்

**அதிபரைச் சார்ந்த அரசாங்கம் Presidential Form of Government**

அமெரிக்கா போன்ற அதிபர் சார்ந்த அரசாங்க முறை யில் அரசின் தலைவர் அதிபர் ஒரு நிர்வாகியாக செயல்படுவார். அதாவது அரசு மற்றும் நிர்வாகம் இரண்டுக்கும் ஒரே தலைவர். இதில் முக்கியமாக அறிய வேண்டியது அந்த நிர்வாகி அதிபர் லெஜிஸ்லேசர் என்னும் சட்டமன்றத்துக்கு நாடாளும் மன்றத்துக்கும் கட்டுப்பட்டவர் அல்ல. அங்கு செனட் மற்றும் பிரதி நிதிகள் சபை ஆகிய இரண்டு அவைகள் தான்.

**முக்கிய அம்சங்கள் ;–**

1. நிர்வாகியான அதிபர் President நாடாளும் மன்றத்தின் செயல்களை இரத்து செய்யலாம்.

2. ப்ரெசிடெண்ட் என்னும் அதிபர் ஒரு குறிப்பிட்ட காலம் அமெரிக்காவில் 4 ஆண்டுகள் பதவி வகிப்பார் சட்ட, நாடாளுமன்றத்தில் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்து அவரைப் பதவி நீக்கம் செய்ய முடியாது.

3. பொதுவாக அதிபர் குற்றவாளிகளை மன்னிக்கவும் அவர்களுக்கு நீதிமன்றம் கொடுத்த தண்டனையை மாற்றவும் அதிகாரம் படைத்தவர். அதிபர் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

**இதர அம்சங்கள்;–**

அதிபர் முறையில் நாடு மற்றும் அரசாங்கத்தின் தலைவரான அதிபர் அரசின் தலைவர் மற்றும் தலைமை நிர்வாகி தனியான தேர்தல் மூலம் அதாவது சட்ட மன்றமாகிய பிரதிநிதிகள்சபை மற்றும் செனட் போல் அல்லாமல் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுவார். அதாவது அதிபர் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப் படுவார். நமது பிரதமரைப் போல் அவரைத் தேர்ந்தெடுத்த வாக்காளர்களுக்குப் பதிலளிக்கக் கடமைப்பட்டவராவார்.

அதிபர் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு தன்னுடைய அமைச்சரவைக்கான சக அமைச்சர்களை நியமனம் செய்வார். அமெரிக்காவில் அவர்கள் அமைச்சர்கள் என அழைக்கப்பட மாட்டார்கள். செயலாளர்கள், செக்ரடரிகள் என அழைக்கப்படுவார்கள். அவர்களை நியமனம் செய்வதற்கு சட்டமன்ற ஒப்புதல் வேண்டும் என்றாலும் அவர்கள் அந்த மன்றத்தில் உறுப்பினர்களாக இருக்க மாட்டார்கள்.

**நாடாளும் மன்றம் சார்ந்த அரசாங்கம் Parliamentary Form of Government**

இந்தியா இந்த முறையைப் பின்பற்றி நாடாளும் மன்றத்தைச் சார்ந்த அரசாங்கமாக இருக்கிறது. இந்திய அரசியல் சாஸனத்தை உருவாக்கிய நம் முன்னோர்கள் நாடாளும் மன்றத்தைச் சார்ந்த முறையைப் பின்பற்றும் இங்கிலாந்து நாட்டால் கவரப்பட்டு நமக்கும் அந்த முறையையே விட்டுச் சென்றுள்ளார்கள். இந்தியா இந்த முறையைப் பின்பற்ற நம் முன்னோர் கூறும் மற்றொரு காரணம் நம் நாட்டைப் போல் பல மதங்கள் இனங்கள் மொழிகள் என பல

பிரிவுகளாக வேற்றுமையில் ஒற்றுமை காணும் மக்கள் இருக்கும் நாட்டிற்கு நாடாளும் மன்றம் சார்ந்த ஜன நாயகம் தான் சரி வரும் என்பதாகும்.

உலகில் அதிபர் சார்ந்த ஜனநாயக அரசாங்கங்களை விட நாடாளும்மன்றம் சார்ந்த அரசாங்கங்கள் தான் அதிகமாக உள்ளன, இந்த முறையில் பொதுவாக நாடாளும் மன்றம் அதிக சக்தி வாய்ந்தது. நிர்வாகியே சட்ட மன்றத்துக்குப் பொறுப்பாவார்.

**நாடாளும் மன்றம் சார்ந்தததன் முக்கிய அம்சங்கள்**

**1. நாடாளும் மன்றத்துக்கும் நிர்வாகத்துக்கும் நெருங்கிய தொடர்பு.**

இந்த முறையில் பிரதமர் தன்னுடைய அமைச்சரவை அமைச்சர்களுடன் சேர்ந்து நிர்வாகத்தை உருவாக்குவார். நாடாளும்மன்றம் தான் சட்டம் உருவாக்கும் சட்ட மன்றம், பிரதமரும் இதர அமைச்சர்களும் நாடாளும் மன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் ஆவர். அதன் பொருள் சட்ட மன்றத்திலிருந்துதான் நிர்வாகம் உருவாகிறது என்பது பொருளாகும் ,

**2. நிர்வாகம் சட்ட மன்றத்துக்குப் பொறுப்பாகும்.**

இதில் நிர்வாகம் சட்டமன்றத்துக்குப் பதில் சொல்லக் கடமைப் பட்டதாகும். இரண்டுக்கும் கூட்டுப் பொறுப்பு உண்டு அதாவது ஒவ்வொரு அமைச்சரின் பொறுப்பும் மொத்த அமைச்சரவையின் பொறுப்பாகும்.

**3. இரட்டை நிர்வாகம்**

இதில் இரண்டு நிர்வாகிகள் உண்டு 1. உண்மையான நிர்வாகி. 2 தலைப்பு நிர்வாகி.

பெயரளவுக்கு நிர்வாகி நாட்டின் தலைவர் அதாவது குடியரசுத் தலைவர். ஆனால் அரசாங்கத்தின் தலைவரான பிரதமரே உண்மையான நிர்வாகியாக இருப்பார்.

**4. நடவடிக்கைகளின் ரகசியம்**

இந்த முறை அரசாங்கத்துக்கு ஒரு முன் தேவை அவசியமாகும் அதாவது அமைச்சரவைக் கூட்ட நடவடிக்கைகளில் ரகசியம் காக்கப்பட வேண்டும் அவை அப்படியே வெளியிடப்படக் கூடாது.

**5. பிரதமரின் தலைமை**

இந்த நாடாளும் மன்றம் சார்ந்த ஜன நாயகத்தில் எந்தக் கட்சி மக்களவையில் அதிக இடங்களில் வெற்றி பெறுகிறதோ அந்தக் கட்சியின் தலைவரே பிரதமராக நியமிக்கப்படுவார். அவையின் தலைவரான பிரதமரே அரசு அமைப்பார்.

**7. இரட்டை அவை சட்ட மன்றம்**

பெரும்பாலான நாடாளும்மன்றம் சார்ந்த ஜன நாயகங்கள் இரட்டை அவை சட்ட மன்றங்களைக் கொண்டிருக்கும்.

**8. குறிப்பிட்ட பதவிக்காலம் கிடையாது.**

இந்த முறையில் அரசாங்கத்தின் பதவிக்காலம் அந்த அமைச்சரவைக்கு கீழ் சபை என்னும் மக்களவையில் பெரும்பான்மை ஆதரவு இருக்கும் வரைதான், மக்களவையில் அரசாங்கம் ஒரு நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெறவில்லை என்றால் அமைச்சரவை பதவி விலக வேண்டும். அதன் பிறகு தேர்தல் நடைபெற்று புதிய அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும்.

**எந்த முறை சிறந்தது ?**

நாடாளும் மன்றம் சார்ந்த ஜனநாயகம் மற்றும் அதிபர் சார்ந்த ஜனநாயகம் என இரண்டு முறை உண்டு என்றால் பொதுவாக எல்லோருக்கும் எழும் கேள்வி எந்த முறை சிறந்தது என்பதுதான். அதனை ஆணித் தரமாக சொல்ல இயலாது ஏனென்றால் ஒவ்வொரு முறையிலும் நல்லவைகளும் இருக்கின்றன நல்லவை அல்லாதவைகளும் இருக்கின்றன. அவற்றைப் பற்றி இப்போது பார்ப்போம்.

**அதிபர் சார்ந்த முறையில் உள்ள நிறைகள்**

**அதிகாரத்தைப் பிரித்தல்**

அரசாங்கத்தின் நிர்வாகம், நீதித்துறை மற்றும் சட்டமன்றம் என்ற மூன்று முக்கிய அங்கங்களும் தனித் தனியே செயல்படுவதால் நிர்வாகத்தில் திறமை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

**அரசாங்கத்தில் வல்லுநர்கள்**

நிர்வாகத்தில் உள்ளவர்கள் சட்ட மன்ற உறுப்பினராக இருக்க வேண்டிய அவசியம் இல்லாததால் அதிபர் தன் ஆட்சியில் பல துறைகளிலும் வல்லுநர்களாக விளங்குபவர்களை தனது அமைச்சர்களாகவும் அரசின் பல பிரிவுகளிலும் தலைமைப் பொறுப்பிலும் அமர்த்திக் கொள்ளலாம். அதனால் பல்வேறு துறைகளில் அனுபவமும் ஆற்றலும் படைத்த திறமைசாலிகள் அரசாங்கத்தில் பங்கு பெற்று சேவை செய்ய வாய்ப்பளிக்கும்.

**ஸ்திரத்தன்மை**

இந்த வகையான அரசாங்கம் ஸ்திரமாக இருக்கும். அதிபரின் பதவிக் காலம் சட்டமன்றத்தில்

பெரும்பான்மை பலத்தைச் சார்ந்து இல்லாமல் குறிப்பிட்ட காலத்துக்கு இருப்பதால் அவர் அரசு கவிழ்ந்து விடுமோ என்று அச்சுறத் தேவை இல்லை. அதாவது அரசு கவிழும் அபாயம் இல்லை. அதிபர் ஆட்சியில் முடிவு எடுப்பதில் அவருக்கு அரசியல் ரீதியாக அவர் சார்ந்துள்ள கட்சி மூலம் அழுத்தம் / நெருக்கடி கொடுக்கப்பட வாய்ப்பில்லை.

அதிபரும் நேரடியாக மக்களால் குறிப்பிட்ட காலத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதால் அதாவது அவரது பதவிக் காலம் குறிப்பிட்ட ஆண்டுகள் உண்டு என்பதால் அரசியல் கட்சிகள் அவரைப் பதவியிலிருந்து நீக்க முயற்சிக்க மாட்டார்கள்.

**கொள்கையை நல்ல முறையில் செயல் படுத்துதல்**

அதிபரின் பதவிக்காலம் குறிப்பிட்ட ஆண்டுகளுக்கு நிரந்தரம் என்பதால் அவர் நினைக்கும் கொள்கைகளை எந்த வித அச்சமும் இல்லாமல் அமுல்படுத்தலாம். குறிப்பிட்ட காலம் பதவியில் இருப்பது உறுதி என்பதால் அவரது கொள்கைகளும் தொடர்ந்து கைப்பிடிக்கப்படும் நிர்வாகத்தின் தரமும் உயர்வாக இருக்கும் .

**மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதன் எதிரொலி**

அதிபர் சார்ந்த அரசாங்கத்தில் அதிபர் மக்களால் நேரடியாகவே தேர்ந்தெடுக்கப்படுகிறார். நாடாளும் மன்றம் சார்ந்த அரசாங்கத்தில் பிரதமர் மக்களால் நேரடியாக நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். ஆனால் பிரதமராகத் தேர்வு செய்வது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளும் மன்ற உறுப்பினர்களால் தான்.

**விரைவாக முடிவுகள்**

அதிபர் சார்ந்த அரசாங்கத்தில் அரசின் முடிவுகளில் அமைச்சரவை, நாடாளுமன்ற உறுப்பினர்கள், போன்ற தலையீடு எதுவும் இல்லாமல் அதிபர் மட்டுமே முடிவு எடுப்பதால் முடிவுகள் விரைவாக எட்டப்படும்.

இந்த முறையில் உள்ள குறைகள் பற்றி அடுத்த பகுதியில் பார்ப்போம்.

சம்பந்தப்பட்ட சட்டம் மற்றும் பைஜஸ்.காம், ஜக்ரன் ஜோஷ்.காம் ,ப்ளாக். ஃபாமியாஸ் .காம் மற்றும் லாடீச்சர் .நெட் போன்ற இணைய தளங்களிலிருந்து தொகுத்து வழங்கியவர் மேலையூர் ச.அன்பழகன், துரைப் பாக்கம் சென்னை 97 போன் 98413 73184

## சென்னை கார்காத்தார் சங்கம்

### நூற்றாண்டு விழா அறிவிப்பு

100 நூற்றாண்டு விழா 1922-2022

சென்னை கார்காத்தார் சங்கத்தின் நூற்றாண்டு விழா 08.01.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று சென்னை – 600 056, பூந்தமல்லி, எண். 107, 2.A.1, பூந்தமல்லி நெடுஞ்சாலை **SVV கல்யாண மண்டபத்தில்** மிக சிறப்பாக நடைபெற உள்ளது. விழாவினை சிறப்பிக்கும் வகையில் மலர் வெளியிட ஏற்பாடுகள் செய்யபட்டு வருகின்றன. விழா மலரில் விளம்பரம் செய்ய கீழ்கண்ட கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| கலர் முழுபக்கம் | – | ரூ. | **10,000/-** |
| கலர் அரைபக்கம் | – | ரூ. | **5,000/-** |
| கலர் கால்பக்கம் | – | ரூ. | **2,500/-** |
| கருப்பு வெள்ளை முழுபக்கம் | – | ரூ. | **5,000/-** |
| கருப்பு வெள்ளை அரைபக்கம் | – | ரூ. | **2,500/-** |
| கருப்பு வெள்ளை கால்பக்கம் | – | ரூ. | **1,500/-** |

**விளம்பரம் சம்பந்தமாக தொடர்பு கொள்ள**

திரு. **கோ. தியாகராஜன்,** விளம்பரக்குழு தலைவர்

**Mobile : 90429 57792, E-mail : kkam100advt@gmail.com**

**- கைலை. சண்முகம்,** செயலாளர்.

## வாழ்க்கை தரும் அனுபவங்கள்

Dr. D. Kalyanakumar, Trichy-18.

எனக்கு இரண்டு கோடி ரூபாய் சொத்து இருக்கு, எனக்கு யாருமே தேவை இல்லை– இப்படித்தான் அந்த 65 வயது பெரியவர் ஆரம்பித்தார். கொஞ்சமா ஆல்கஹால் எடுத்திருந்தார் போல. நிலையில்லாமல் இருந்தார். ஒரு 15 நிமிடம் அவரோட 65 ஆண்டு கால வாழ்க்கையை பெருமிதத்தோட சொல்லி முடித்தார். சின்னவன் ஆஸ்திரேலியா வில இருக்கான். பொண்ணுங்க 2 பேர். ஒருத்தர் சென்னைல குடுத்திருக்கேன். இன்னொருத்தி பூனேல இருக்கா. மாப்பிள்ளை மிலிட்டிரில இருக்கார். பெரியவன் என் கூட இருக்கான். நிறைவான வாழ்க்கை என்றார்.

இவர் என் மருத்துவமனைக்குள் நுழைந்த நாள் நன்றாக நினைவில் இருக்கிறது. மனைவியுடன் வந்தார். ஏதோ விசேஷ வீட்டுக்கு போய்விட்டு வந்திருப்பார்கள் போல. நிறைய நகைகளும் பட்டுபுடவை, வேஷ்டியுமாக ஒரு செழிப்பு அவர்கள் உடையில் இருந்தது. மிகுந்த கனிவுடன் பேசினார்கள். தங்கள் உடல் உபாதைகளை சொன்னவர்கள், பின் தாங்கள் ஒரு ஆசிரியர் குடும்பம் என்றார்கள். மகன்கள், மகள், மனைவி, பெரியவர் என அனைவரும் ஆசிரியர்கள். சர்க்கரை நோய்க்கு மருந்தெடுப்பதால் அவரை தொடர்ச்சியாக பார்த்து வந்தேன். ஊரில் ரியல் எஸ்டேட் சூடு பிடிக்க தொடங்கிய காலம் அது. அவர் முன்னாளில் எப்பொழுதோ வாங்கிய நிலம் நல்ல மதிப்பு மிக்கதானது தன்னை வெல்ல யாரும் இல்லை என்றும் மற்றொரு நாள் சொல்லி சென்றார் பெருமிதமாகவே இருந்தார்.

23 வருடங்களுக்குள்ளாகவே அவருடைய பேச்சில் சின்ன மாற்றங்கள் தெரிந்தது. எதையோ தொலைத்தது போல வெறிச்சிட்ட கண்கள். ''என்ன சார் எப்படி இருக்கீங்க'' என்ற கேள்விக்கு, முன்னைப் போல பளீர் சிரிப்பு இல்லை. ''இருக்கிறேன் டாக்டர்'' என்ற ஒற்றை வரி பதில் வந்தது. அவரை தேற்றும் விதமாக அப்பறமா, பிள்ளைகள் எல்லாம் எப்படி இருக்காங்க. என்ன பண்றாங்கன்னு ஆரம்பித்து வைத்தேன் எல்லோரும் நல்லா இருக்காங்க சார். ஆனால் ரொம்ப பிஸியா இருக்காங்க. நமக்கு கூட ஒரு ஆள் இல்லேன்னு வருத்தமா இருக்கு. அவங்களுக்குன்னு ஒரு வாழ்க்கை இருக்குல சார். பாவம் என்ன சூழ்நிலையில் இருக்காங்களோ.... எல்லோரும் ரொம்ப பாசக்காரங்க தான் சார். ஆனால் காலம் எல்லோரையும் கட்டி போட்டு வச்சிருக்கு. ஒருத்தரோட ஒருத்தர் நேரம் செலவழிக்க முடியாம பஞ்சா பறக்குறாங்க, கேட்டால் அமெரிக்கா வா. பூனே வாங்குறாங்க. நமக்கு எதுவும் செட் ஆகுறதில்ல சார். இப்படியே ஓட்டிட்டிருக்கேன் என்றார். அவங்களும் சம்பாரிக்கணும் செட்டில் ஆகணும்னு ஒரு எண்ணம் இருக்கும்ல சார்...? அதான் சார் புரியல. அவங்க வாழ்க்கை முழுக்க ஓடி சம்பாரித்தாலும் சேர்க்க முடியாத சொத்து எங்கிட்ட இருக்கு நானே கொடுத்தாலும் அது இப்போ அவங்களுக்கு தேவைப்படாது போல. எதன் பின்னால ஓடுறாங்கன்னே தெரியல. எல்லோரும் ஒரே ஓட்டமா ஓடுறாங்க, வாழ்க்கையை புரிந்து கொள்ள எல்லோருக்கும் 65 வயது ஆகணும் சார் என்று சிரித்தார்.

நடுவில் பார்க்கின்சோனிசம் பாதித்தது. அப்பொழுதும் மனிதர் அசரவில்லை. வயதானால் வருவது தானே இதெல்லாம் பிரச்சனை இல்ல சார் என்பார். பெரிய வேடிக்கை என்னவென்றால் மனம் சோர்வடையும் போதெல்லாம் இந்த நோயின் தாக்கம் மிக கடுமையாக இருக்கும். அவரின் மன உறுதிக்கு முன்னால் நோய் கொஞ்சம் தோற்று தான் போனது சில காலத்துக்கு பின் முன்பு மிகவும் தளர்ந்து போய் இருந்தார் அவர் மனைவி துணையாக கூட்டி வந்தார். தன்னுடைய மூத்த மகன் பைக் ஆக்சிடென்ட்டில் திடீரென்று இறந்ததை சொன்னார். பாவமாக இருந்தது என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. சார் பையன் திடீர்னு போய்ட்டான் சார். ரொம்ப கஷ்டமா இருக்கு சார் என்றார். நான் அவர் மனைவியிடம் அவரை எப்படியாவது தேற்றுங்கள் இல்லையென்றால் நோயின் கடுமை அதிகரிக்கும் என்பதை சொன்னேன். அவர் மனைவி மார்பக புற்று நோயால் பாதிக்கப்பட்டு மார்பகத்தை இழந்திருந்தார். அவரை ஆதரித்து அணைத்து கூட்டி சென்றதை பார்க்கும் போது சிறிது நிம்மதியாக இருந்தது. எதிர் பார்க்காத அளவில் மிக விரைவாக அந்த பாதிப்பில் இருந்து மீண்டார். மகனின் மனைவியை டீச்சர் டிரைனிங் படிக்க வைத்தார் மகனின் வேலையை மருமகளுக்கு வாங்கி குடுத்தார். தன் பேத்திக்கு (இறந்த மகனின் மகளுக்கு) திருமணம் முடித்து வைத்தார். மருமகளிடம், ''வேலை வாங்கி கொடுத்தாயிற்று இனி உன் வாழ்க்கையை நீயே பார்த்து கொள். நீ திருமணம் முடித்தாலும் எங்களுக்கு சம்மதமே'' என்று அவர்களுடைய தந்தை வீட்டுக்கு அனுப்பி வைத்தார். எல்லாம் சரியாக தான் இருந்தது.

மூன்று மாதம் முன்பு மறுபடி தம்பதி சமேதராக வந்தார்கள். மகன் தங்களுக்கு விசா அனுப்பி உள்ளதாகவும், ஆஸ்திரேலியா போவதற்கு முன் உடம்பை செக் அப் செய்ய வந்தோம் என்றார்கள் மகிழ்ச்சியாக அனுப்பி வைத்தேன். அப்போது சென்ற வரை வெகு காலத்திற்கு பின் தான் மீண்டும் பார்த்தேன். நடுங்கியபடி அமர்ந்தார். என்ன செய்கிறதென்று கேட்டேன் பதில் இல்லை ஏதோ தப்பு இருக்கிறது என்று புரிந்தது. அவர் அழுதால் என்ன சொல்வது என்று என் மனதின் மூலையில் ஒரு

கேள்வியும் இருந்தது. அதனாலேயே என்னால் அவர் முகம் பார்க்க முடியவில்லை. மீண்டும் கேட்டேன், என்ன சார் உடம்புக்கு ரொம்ப முடியலையா என்று? என்னை சில நிமிடங்கள் உற்று பார்த்து விட்டு பிறகு சொன்னார் டீச்சர் என்னை விட்டு போய்ட்டா அதனால் திரும்ப தண்ணி அடிக்கிறேன் உடம்புக்கு முடியல என்றார். அந்த அதிர்ச்சியை என்னால் உள்வாங்கி கொள்ள முடியவில்லை 7 வருடங்களாக அவரை ஆட்கொண்டும் ஒன்றும் செய்ய இயலாமல் இருந்த பார்கின்சோனிசம் நோய் இப்பொழுது 2 மாதங்களில் அவரை முழுமையாக சேதபடுத்த ஆரம்பித்திருப்பது தெரிந்தது. தொடர்ச்சியாக பேச இயலவில்லை. நேராக நிற்க இயலவில்லை. நடுங்காமல் தடுமாறாமல் நடக்க இயலவில்லை அனைத்தும் 2 மாதங்களில், தனிமை இனி இவரை என்ன செய்ய போகிறதோ தெரியவில்லை.

மனைவி இருக்கும் போது தெரியல சார். பேப்பர் எடுத்து குடுக்க ஆள் இல்லை, தண்ணி குடுக்க ஆள் இல்லை, தனியா இருக்கேன் டாக்டர். மக கல்யாணம் பண்ணி போய்ட்டா, மருமகளுக்கு இப்ப என்ன பாக்க முடியாது. மகன் ஆஸ்திரேலியால இருக்கான். என்ன பண்றதுன்னு தெரியல என்றார். எனக்கு தெரிந்த ஆறுதல் வார்த்தைகளை சொன்னேன்.... இவரால் இனி நடக்க இயலாது. இவருக்கு கவலை அதிகமாக ஆக இவர் நோய் இவரை மெல்ல ஆட்கொண்டு ஆள் கொல்லும் அதனால் இவரை பத்திரமாக பார்த்து கொள்ளுங்கள் என்று யாரிடம் இப்போ நான் சொல்வது?? நல்ல வேலை அவர் அழவில்லை. நானும் உடன் அழுது விடுவேன் என்று நினைத்தாரோ என்னவோ? அனைவரும் டீச்சர் என்றாரே முதுமை நமக்கும் வரும் என்று டீச்சர்களுக்கு யார் பாடம் எடுப்பது? இவரால் இனி இது போல் மீண்டும் ஒரு முறை என் மருத்துவமனைக்கு வர இயலுமா தெரியவில்லை. வாழ்க்கை ஒரு ரோலர் கோஸ்டரை போல மேலே எழும்பி கீழே இறங்கி நமக்கு பல்வேறு அனுபவங்களை தருகிறது. அதில் மகிழ்ச்சியும் இருக்கும் அதிர்ச்சியும் இருக்கும் அனைத்திற்கும் தயாராக இருக்கு பணம் மட்டும் போதுவதில்லை. அன்பான அரவணைக்க ஆறுதலாக பேச சக உயிர் வேண்டும். உறவுகளில் மட்டுமே அது சாத்தியமாகிறது.

உடன் பிறந்தவர்களோ.... கை பிடித்தவர்களோ ஒருவருக்கு ஒருவர் ஆறுதல் அளிக்காமல் வாழ்க்கை முழுதும் எதன் பின்னால் ஓடுகிறோம்...? யாருக்காக ஓடுகிறோம்?? வாழ்க்கையை துவங்கும் போது எல்லோருக்கும் ஒரு தேடல் இருக்கிறது. சக மனிதனை விட ஒரு படி முன்னேறி விடும் வெறி இருக்கிறது. எல்லோரும் வெற்றியை நோக்கி ஓடுகிறோம். இலாக்கை அடைந்தோமா?? எது தான் இலக்கு?, நமது ஓட்டத்தை எப்போது நிறுத்துவது?? ஓடிக் களைத்து, சோர்ந்து நிற்கும் போது எல்லையில்லா ஒரு பெருவெளியில் மாட்டிக்கொண்டதை உணர்வோம். நமது அனுபவத்தை கேட்க யாரும் இருக்க மாட்டார்கள். இதுவரையிலும் பலர் சொல்வதை நாமும் கேட்கவில்லையே...??

ஒரு கதையின் முடிவையோ, சினிமாவின் முடிவையோ அவ்வளவு ஏன் ஒரு எலெக்ஷன் முடிவைக்கூட யூகித்து சொல்ல முடியும் நமக்கு. நமது வாழ்வின் இறுதி எப்படி இருக்கும் என்று யூகித்து அதற்கு தயாராவதில் என்ன தயக்கம்? நமக்கு கிடைத்திருப்பது ஒரு வாழ்வுதான். அது பெரும்பாலும் எப்படி முடியும் என்பதை யூகிக்க நமக்கு பெரிய கஷ்டம் எதுவும் இருக்க போவதில்லை. ஆனாலும் நாம் அதற்கு துணிவதில்லை. நம் முடிவுக்கு நாம் தயாராக இருந்திருந்தால், இன்று பல்வேறு நகர்புறங்களில், பூட்டிய வீட்டினுள் வாரக்கணக்கில் கண்டுகொள்ளப்படாமல் இறந்து, நாறிக் கிடக்கும் பெரியவர்களை பற்றி கேள்விப்படுவோமா?? அவர்களை பற்றி விசாரித்தால் வசதியானவர்களாகவும், அவர்களின் சொந்தக்காரர்கள் வெளிநாட்டில் இருப்பதாகவும் தெரிகிறது. எனில், இந்த முதியவர்கள் ஓடிய ஓட்டத்தின் பலன் என்ன?

கிராமங்களில் முதியோரை அரவணைக்கும் இடமாக சாவடிகள் இருந்தன. ஒரு வயதுக்கு மேல் முதியோர் ஒன்று கூடும் இடமாக அவர்களுக்கு சமூகம் புகலிடம் அளித்திருந்தது. இன்று அவையும் வழக்கொழிந்துவிட்டன. மருத்துவ வசதிகளால் பெருகி வரும் முதியோர்களுக்கு அவர்களின் உயிர்த்திர்த்தலே பெரும் பிரச்சனையாகி இன்று அவர்களை தனிமையில் இருந்து மீட்க முதியோர் காப்பகங்களே மிச்சமிருக்கின்றன. நாம் ஓட்டத்தை முடித்து எல்லைக்கோட்டை தொடும் போது, போதுமான ஓய்வும், தாங்கி பிடிக்க உறவுகளும் இருக்க பயணம் முடிய வேண்டும். அப்படியில்லை என்றால், நன்றாக ஓடிய ஒரு மாரத்தான் வீரர் எல்லைக்கோட்டருகே சறுக்கிய கதையாக தான் நம் பயணம் முடியும்.

வாழ்வதற்கான திட்டமிடல் போல வாழ்க்கையின் இறுதிக்கான திட்டமிடலும் அவசியம் காசு பணம் சேர்ப்பது போல நண்பர்களையும் உறவுகளையும் சேர்க்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மேல், சமூகத்துக்கு பங்களிக்க வேண்டும் அதுவே இறந்த பின்னும் நம்மை பலர் மனதில் வாழ வைக்கும்.

மனதை தொட்ட "டாக்டர் Sarav Urs அவர்களின் "உறவுத்திரைகள்" கட்டுரையில் படித்தது".

## சங்கப் பலகை

**பங்கு பெறுவோர் ;** மங்களம், அலமேலு, ஆண்டாள், சித்ரா, வசுமதி, தீபிகா, கோமதி, பிரியா, கௌரி, பவித்ரா

**இடம் :–** வள்ளுவர் கோட்டம்

அலமேலு – என்னம்மா இன்னைக்கு யார் ஆரம்பிக்கப் போறீங்க ? எதைப் பத்தி சொல்லப் போறீங்க.

மங்களம் – போன தடவ சித்ரா ஆரம்பிச்சுது அதனால் இந்த முறை வசுமதி ஆரம்பிக்கட்டும்.

வசுமதி – ஐயோ மாமி திடீர்னு சொன்னா நான் எதப் பத்தி சொல்றது.

சித்ரா – முதலில் பேச ஆரம்பிக்கிறவங்கா எதைப் பத்தி வேணும்னாலும் பேசலாம் எதப் பத்தியாவது ஆரம்பிடி.

வசுமதி – ஓ.கே ஆரம்பிக்கிறேன் இத யாராவது ஏற்கனவே சொல்லி இருக்கீங் களான்னு தெரியாது.

மங்களம் – பரவாயில்ல சொல்லும்மா யாராவது சொல்லி இருந்தாலும் நாங்க மறந்திருப்போம்.

வசுமதி – பண்ணியால மானத்தைப் பாக்க முடியாதாம்.

அலமேலு – இதை யாரும் ஏற்கனவே சொல்லலை நீதான் புதுசா சொல்றே.

தீபிகா – ஏண்டி பன்னி மானத்த பாத்தா என்னா பாக்க முடியாட்டி என்னா அதனால் யாருக்கு என்ன வந்தது ஆஃப்டர் ஆல் பன்னி

ஆண்டாள் – என்ன தீபிகா ஆஃப்டர் ஆல் பன்னி ன்னு சாதாரணமா சொல்லிட்டே மகா விஷ்ணுவோட 10 அவதாரங்களில இந்த பன்னி மூணாவது அவதாரம். வராக அவதாரமான இதில அவர் காட்டுப் பன்றியா அவதாரம் எடுத்தார். ஹிரண்யாக்ஷன் ங்கற அரக்கன் பூமியைக் கைப்பற்றி கிட்டு கடலுக்கடியில எடுத்துகிட்டு போனப்ப மஹா விஷ்ணு இந்த வராக அவதாரம் எடுத்து அவன் கூட ஆயிரம் வருடம் போரிட்டு வென்றார் என்பது ஐதிகம்.

சித்ரா – ஓ பன்றிக்கு அவ்வளவு பெருமை இருக்கா.

வசுமதி – சபாஷ் ஆண்டாள் மாமி ரொம்ப தாங்க்ஸ் நல்ல சமயத்ல தகவல் குடுத்து என்ன காப்பாத்தினீங்க

அலமேலு – பாத்தியா வசுமதி நீ சொன்ன விஷ்யத்லேர்ந்து நாங்க பெருமாளோட தசாவதாரத்ல ஒரு அவதாரத்த பத்தி தெரிஞ்சுக்க வாய்ப்பு கெடச்சுது சரிம்மா அடுத்து யாராவது ஒரு தகவல் குடுங்க.

கோமதி – நான் ஒரு தகவல் குடுக்றேன் மாமி.

மங்களம் – சொல்லும்மா இப்பிடி எல்லாம் தகவல்கள தெரிஞ்சுக்கத்தானே நாம் கூடறோம்.

கோமதி – ஒருத்தராலேயும் அவுங்களோட முழங்கையை நக்க முடியாது.

அலமேலு – நாக்கால மூக்க தொடற மாதிரியா ?

கோமதி – அது கூட சில பேரு செஞ்சுறுவாங்க ஆனா முழங்கையை யாராலும் நக்க முடியாது.

கௌரி – ஏதோ ஆரம்பிக்க முயல.

மங்களம் – என்னம்மா கௌரி உன் முழங்கையை உன்னால நக்க முடியும்னு சொல்றியா ?

கௌரி – அதில்லை மாமி அதைப் பத்தி ஒரு தகவல் சொல்ல வந்தேன்.

அலமேலு – சொல்லும்மா. இப்பிடிதானே பேச்சு வளரணும்.

கௌரி – இந்த தகவலை முழங்கையை நக்க முடியாது புஸ்தகத்துல படிக்கிற வங்கள்ள 99 பேரு அப்பிடி முழங்கையை நக்க முயற்சிப்பாங்கன்னு சொல்லு வாங்க.

ஆண்டாள் – அது க்காகத்தான் கௌரி ஒண்ண முடியாதுன்னு சொன்னா நாம ஏன் அத செஞ்சு பாக்கக் கூடாதுன்னு முயற்சிப்பாங்க.

மங்களம் – அப்பிடி விடாம முயற்சி பண்ணினா தான் வெற்றி பெற முடியும் அப்பிடி விடாமா முயற்சி பண்ணிதானே அம்மா ரஜினி முகமது 17 ஆவது தடவையில போரில ஜெயிச்சான்.

பவித்ரா – சபாஷ் மாமி அந்த காலத்ல படிச்ச சரித்ரத்த எல்லாம் ஞாபகம் வச்சிருக்கீங்க ஆனா அந்த ராஜா பேரத்தான் மறந்துட்டீங்க அவுரு பேரு கஜினி முகமது ரஜினி முகமது இல்லே.

மங்களம் – சரிதான் அம்மா இந்த ரஜினி பேர அடிக்கடி பேப்பர்ல பாத்து கன்ஃப்யூஸ் ஆயிட்டேன்.

சித்ரா – ஓ.கே மாமி இப்ப இங்கே இருக்ற மூணு மாமிக்கும் ஒரு கேள்வி இது எங்க பாட்டி எனக்கு சொன்னது.

வசுமதி – கேள்விய சொல்லேண்டி.

சித்ரா – மாமி நீங்கள்ளாம் சின்னதா இருக்றச்சே விளையாடுவீங்கள்ள அதாவது எந்த வாக்கியத்த சேந்தார்போல சொல்றச்சே நாக்கு கொளறும் அத சொல்லுங்க.

அலமேலு – இது யாரு தச்ச சட்டை எங்க தாத்தா தச்ச சட்டைன்னோ என்னவோ வரும் அம்மா.

சித்ரா அதே தான் மாமி அதைப் போல இங்க்லீஷ்ல ஒரு வாக்கியத்தை சொல்றதுக்குள்ள நாக்கு கொளறும்.

மங்களம் – இங்க்லீஷா அத நாங்க கேக்கறோம் நீங்க யாராவது சொல்லுங்க.

சித்ரா – "sixth sick sheik's sixth sheep's sick" இந்த வாக்கியத்துக்கு ஆங்கிலத்ல நாக்கு குளரக் கூடிய கடினமான வார்த்தைன்னு பேரு.

கௌரி – மாமி அத சொல்லி பாத்தாதான் அந்த கஷ்டம் புரியும் அந்த வாக்கியத்த தமிழல் நான் சொல்றேன் கேளுங்க.

ஆறாவது வியாதி வந்த ஷேக்கின் ஆறாவவது ஆட்டுக்கு வியாதி இதை இங்க்லீஷ்ல வேகமா சொல்றது கஷ்டமா இருக்குமாம்

வசுமதி – மாமிகளுக்கு இதில அவ்வளவு இன்ட் ரெஸ்ட் இல்லைன்னு நினைக்கிறேன்.

கௌரி – அவுங்களுக்கு interest உள்ள விஷயமா நீதான் ஒண்ணு சொல்லேன்.

வசுமதி – மாமி நீங்கள்ளாம் சீட்டு விளையாடுவீங்களா.

அலமேலு – நான் விளையாடுவேன்.

மங்களம் – எனக்குத் தெரியும் ஆனா நான் விளையாட மாட்டேன்.

வசுமதி – பரவாயில்லை மாமி ஆண்டாள் மாமி காலேஜில படிச்சிருக்காங்க அவுங்களுக்கு நிச்சியம் தெரிஞ்சிருக்கும்.

கௌரி – சரி விஷயத்துக்கு வா வசு.

வசுமதி – மாமீஸ் சீட்டு கட்டில உள்ள நான்கு ஜாதிய சொல்லுங்க மங்களம் மாமி.

மங்களம் – அது தெரியும் அம்மா இஸ்பெட். க்ளாவர். ஆடுதன் டைமண்ட்.

வசுமதி – சபாஷ் மாமி இது தெரிஞ்ச உங்களுக்கு ஒவ்வொரு ஜாதியிலும் ஒரு ராஜா இருப்பது தெரிஞ்சிருக்கும் அந்த ஒவ்வொரு ராஜாவும் ஒவ்வொரு நிஜ ராஜாக்களை குறிக்கும் அந்த ராஜாக்கள் யாருன்னு தெரியுமா.

ஆண்டாள் – சீட்டுக் கட்டில் இருக்ற நாலு ராஜாக்களும் நாலு நிஜ ராஜாக்களை குறிக்கும் ங்கறதே இப்ப நீ சொல்லிதாம்மா எங்களுக்கே தெரியும்.

பவித்ரா தீபி கா – ஏய் வசு எங்களுக்கும் இவ்வளவு நாளா அது தெரியாதுடி நீயே சொல்லு.

வசுமதி – ஓ.கே சொல்றேன் கேட்டுக்கோங்க.

இஸ்பெட் – கிங் டேவிட்

க்ளாவர் – அலெக்ஸாண்டர்

ஆடுதன் – சார்லே மேகன்

டையமண்ட் – ஜூலியஸ் சீஸர்

ஆண்டாள் – சபாஷ்மா இது வரை தெரியாத ஒரு தகவலை சொல்லி இருக்கே.

கோமதி – ஏய் வசு நிஜந்தானா எங்களுக்கெல்லாம் தெரியாதுன்னு ஏதாவது ரீல் சுத்றியா.

வசுமதி – ப்ராமிஸ் டி நான் நெட்ல படிச்சத தான் சொன்னேன்.

கௌரி – வசு சொல்றது ரைட் நான் கூட படிச்சிருக்கேன்.

அலமேலு – கௌரி சொன்னா சரியாதாம்மா இருக்கும் சரி அடுத்த தகவலுக்கு வாங்க.

கௌரி – சரி நான் இப்போ ஒரு கணக்கு சொல்றேன.

பவித்ரா – ஐயோ அக்கா கணக்கா ?

கௌரி – இது ஒரு வேடிக்கைக் கணக்கு தான் பவி.

மங்களம் – சரி சொல்லும்மா – எங்களுக்குத் தெரிலேன்னா நீதான் சொல்லப்போறே.

கௌரி – சரி மாமி 111 ங்கற எண்ணை ஆறுதரம் பயன்படுத்தி ஒரு பெருக்கல் கணக்கு அதாவது பதினோரு கோடியே பதினோரு லட்சத்து பதினோரு ஆயிரத்து நூத்தி பதினொன்றை அதே எண்ணால் பெருக்கினால் வரும் விடை என்ன ?

பவித்ரா – அம்மாடியோவ் அக்கா அவ்வளவு பெரிய பெருக்கலைப் போட கேல்குலேடர் இருந்தா கூட அவ்வளவு சீக்கிரம் போட முடியாதே.

கௌரி – கஷ்டம்தான் ஆனா விடை வேடிக்கையாய் இருக்கும்.

அலமேலு – கௌரி நீயே விடையைச் சொல்லும்மா.

கௌரி – சொல்றேன் மாமி அந்த பெருக்கல் தொகை 12,345,678,987,654,321 தான் மாமி.

மங்களம் – கௌரி நீ சொன்னபடி இது நிஜமாவே வேடிக்கையான கணக்குதான் அம்மா.

பிரியா – அக்கா நீங்க சொன்ன ஆன்ஸர் கரெக்டா இருக்குமா.

கௌரி – நீ வேணும்னா பெருக்கி பாத்துட்டு சொல்லு எல்லோரும் சிரிக்கிறார்கள்.

தீபிகா – இப்ப மாமில்லாம் ஈசியா சொல்ற ஒரு கேள்விய நான் கேக்கறேன். கெட்டே போகாத உணவு எது.

கோமதி – பழைய சாதமா.

தீபிகா – தவறு.

ஆண்டாள் – நான் சொல்றேன் தேன் சரியா.

தீபிகா – சபாஷ் ஆண்டாள் மாமி மிகச் சரி.

ஆண்டாள் – இதுக்கான க்ரெடிட் உங்களுக்குத் தான் முந்தி ஒருதரம் எகிப்து பிரமிடுக்குள்ளே ரொம்ப வருஷமா தேன் கெட்டுப் போகாமல் இருந்ததை கண்டு பிடிச்சது பத்தி நீங்கள் தான் ஒரு தரம் சொன்னீங்க.

தீபிகா – அதை இவ்வளவு நாள் ஞாபகம் வச்சுஇருந்தீங்கள்ள அதுக்கு ஒரு சபாஷ்.

சித்ரா – கெளரி அக்கா உங்கள ஒண்ணு கேக்கணும்னு நினைச்சேன்.

கெளரி – கேளு சித்ரா.

சித்ரா – என் ஃப்ரண்டு ஒருத்தி பெட் அனிமலா பூனைய வளக்கிறா அவ சொன்னா இனிமே பெட் அனிமலே வளக்க முடியாதாமே அது வாஸ்தவமா.

கெளரி – இல்லே இல்லே அப்பிடி ஒண்ணுமில்லே கடந்த 4000 வருஷங்களில புதுசா எந்த வித பெட் அனிமலும் வளக்கப்படவில்லை ங்கறத ஒரு பத்திரிகையில படிச்சேன் அத தப்பா புரிஞ்சிகிட்டிருப்பாங்க.

அலமேலு – ஏம்மா பெட் அனிமல்ங்கறது வீட்டில வளர்க்கிற வளர்ப்புப் பிராணிகள் தானே.

தீபிகா – சரியா சொன்னீங்க மாமீ அதே தான்.

மங்களம் – ஏம்மா எல்லா பிராணிகளையும் செல்லப் பிராணியா வளர்க்கக் கூடாதா.

கெளரி – ஆமாம் மாமி காட்டில் வாழும் வன விலங்குகளை வீட்டில் வளர்க்கக் கூடாது வன இலாகா ஆட்சேபிப்பாங்க.

கோமதி – நாய் பூனை முயல் எல்லாம் வளப்பாங்க.

பவித்ரா – சில பேர் எலி கூட வளப் பாங்க இல்லியா அக்கா.

கெளரி – அதில ஒரு சிக்கல் இருக்கு.

ஆண்டாள் – அதில் என்ன சிக்கல் அது ஒண்ணும் வன விலங்கு இல்லியே.

கெளரி – அதில்லை மாமி எலிகள் மிக விரைவில் இனப் பெருக்கம் செய்து விடும் இரண்டு எலிகள்: சேர்ந்து '18 மாதத்துக்குள்ள லட்சக் கணக்கில குட்டி போட்டு டுமாம்.

அலமேலு – அய்யோ ஒரு எலி இருந்தாலஏ வீடு தாங்காது ஆயிரக் கணக்கில இருந்தா என்னா ஆவறது.

பிரியா – கெளரி அக்கா நான் எறும்பை பத்தி ஒரு தகவல் படிச்சேன் அது சரியான்னு சொல்லுங்க.

கெளரி – என்னா படிச்சே அதைச் சொல்லு .

பிரியா – எறும்பு எல்லாம் மயக்க நிலை வந்தா அதுங்களோட வலது பக்கம் தான் கீழே விழுமாமே.

கெளரி – ஆமாம் பிரியா நா கூட படிச்சிருக்கேன்.

மங்களம் – கடவுள் படைப்பிலே எத்தனை வினோதங்கள்.

அலமேலு – அதுக்கு ஏதாவது ஒரு காரணம் இருக்கும் அது நமக்குத் தெரியாது.

கெளரி – அதே மாதிரி போலாரில் உள்ள கரடி எல்லாம் இடது கைப் பழக்கம் உள்ளதாம் அதுக்கும் காரணம் தெரியல.

மங்களம் – யாரோ ஒரு அமெரிக்க அதிபர் கூட இடது கைப் பழக்கம் உள்ளவரா இருந்தார்ல.

பிரியா – அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஒபாமா கூட இடது கைப் பழக்கம் உள்ளவர்தான்.

கெளரி – கரெக்ட் பிரியா. அதே போல் ஜூலியஸ் சீசர், விக்டோரியா மஹாராணியார் போன்றவர்களும் இடது கைப் பழக்கம் உள்ளவங்கதான்.

அலமேலு – இந்த காலத்துல யாராவது இருக்காங்களா.

தீபிகா – ஓ. இருக்காங்களே பில்கேட்ஸ், ஹென்ரி ஃபோர்ட் போன்றவங்கள்ளாம் left hand பழக்கம் உள்ளவங்கதான் சரிதானே கெளரி அக்கா.

கெளரி– எஸ் யு ஆர் ரைட்.

அலமேலு – எப்படி அம்மா இவ்வளவு தகவல்கள சேகரிக்கிறீங்க.

மங்களம் – அதை விட முக்கியம் எப்படி எல்லாத்தியும் ஞாபகம் வச்சுகிட்டு இருக்கீங்க.

கெளரி – நாங்க படிச்சது சேகரிச்சது எல்லாத்தியும் அவ்வப்போது எங்களுக்குள்ளே பரிமாறிப்போம் இப்பிடி உங்க கிட்ட எல்லாமும் சொல்லி பகிர்ந்துப்போம்.

கோமதி – சில சமயம் கம்ப்யூடரில் சேமிச்சு வச்சுப்போம்.

ஆண்டாள் – சபாஷ்ம்மா உங்களை எல்லாம் பாராட்டுணும்.

அலமேலு – உங்க கூட நாங்களும் வந்து சேர்ர தாலே எங்களுக்கும் நல்ல தகவல்கள் கிடைக்குது.

மங்களம் – சரிம்மா – டைம் ஆயிட்டுது இதோட இன்னைக்கு நிறுத்திப்போம் மீதிய அடுத்த சந்திப்பில பார்ப்போம்.

**அத்துடன் எல்லோரும் சிரித்துக் கொண்டே கலைகிறார்கள்.**

# பாராட்டி மகிழ்வுறு விழா

திருமதி. **G. கலைவாணி,** M.Sc., MEd., M.Phill. H.M. G.G. Hr. Sec School, Chidambaram, 1/37, திருநகர், வாணி இல்லம், சிதம்பரம். Ph: 94866 28862




அரசு பள்ளி துறையில் பல்வேறு நிலைகளில் பணிபுரிந்து தற்போது சிதம்பரம் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியை பணியில் உள்ள திருமதி. **கலைவாணி குணசீலன்,** M.Sc., M.Ed., M.Phill., அவர்களின் கல்வி சேவையினை பாராட்டி 17–09–2022–ல் “கல்விச்சேவையில் வாழ்நாள் சாதனையாளர்” விருது வழங்கப்பட்டதை பாராட்டி அவர் தம் குடும்ப உறவுகள் 02–10–2022–ல் சிதம்பரம் R.M. நகர் சிவமதி குடிலில் விழா நிகழ்தினர். அன்னாரின் தாயார் திருமதி. சிவகாமி ஞானதேசிகன் அவர்களின் 80–ம் ஆண்டு துவக்க விழா நிகழ்வும் இணைந்து ஆசிகள் பெறப்பட்டது. விழா நாயகிகள் இருவருக்கும் திருமதி. தமிழ்செல்வி நடராஜன், திருமதி. மல்லிகா மதிவாணன், M.Sc., B.Ed., M.Phill., பொன்னாடை அணிவித்து கௌரவித்தனர். திரு. கிருட்டிணமூர்த்தி, M.A., M.Phill., (ஏ.வி. கல்லூரி முன்னை தமிழ்துறை தலைவர்) சிறப்புரை மற்றும் ஜானகி ஞானசம்பந்தர், M.Sc., M.Ed., M.Phil நன்றியுரையுடன் விழா நிறைவுற்றது. விழா ஏற்பாடுகள் M. சிவகுரு, B.E., M. சிவசங்கரி, M.O.T., N. இலட்சியவதனி, M.Com மற்றும் ஞானியின் சிறப்பு கவிதை, இசைவாணி செல்வகுமார் அவர்களின் இன்சுவை விருந்துகளுடன் முடிவுற்றது.

**“கல்விச் சேவையில் விருதுகள் பலபெற்ற கலைவாணியே களிப்புடன் உம்மை வாழ்த்துகிறோம், எம்குலப் புகழே கனிவுடன் உம்புகழ் சிறக்க பாராட்டிடுவது மகிழ்ச்சியே கருத்துடன் உம் சேவை தொடர கடவுள் உன் அருகிலே கார்குலம் போற்றிட பணிகள் பலசெய்திடுவீர் பாங்குடனே கற்றோரும் மற்றோரும் உம்பணித்திறமை சிறக்க போற்றுவரே.”**

# மணமகள் தேவை

பெயர் செல்வன் **M. சத்தியகுமார்**
படிப்பு B.Tech.,
வேலை Koyo Engineering (S.E. Asia)
Pvt. Ltd., சிங்கப்பூர்
Rs. 3,00,000 / PM



பிறந்த தேதி 15.02.1992
நட்சத்திரம் புனர்பூசம்
கோத்திரம் அரங்குட
தகப்பனார் **S. மதியழகன்**
தாயார் **M. ஷிலாராணி**
முகவரி தெற்குத் தெரு,
திருப்புன்கூர் – **609 112.**
சீர்காழி – Tk.
மயிலாடுதுறை–Dt.
Cell : 80982 50145, 98403 03591 (W)
விருப்பம் சிங்கப்பூர் செல்ல விருப்பமுள்ள வரன்.

---

பெயர் செல்வன் **குகன்**
படிப்பு B.E., M.S., (USA)
வேலை Clock Works Analytics,
Boston, USA



பிறந்த தேதி 26.12.1990
உயரம் 5' - 9"
நட்சத்திரம் ரேவதி
கோத்திரம் கனகராய
தகப்பனார் **த. வேல்முருகன்,** B.Sc., B.L.,
தாயார் **வே. விமலா,** B.Sc., B.Ed.,
முகவரி 1A/1, சக்தி நகர்,
அஜீஸ் நகர் முதல் தெரு,
கோடம்பாக்கம்
சென்னை – **600 024.**
Cell : 94424 24787 (W)
94420 62275
விருப்பம் வெளிநாட்டில் பணிபுரிய விருப்பமுள்ள வரன்

---

பெயர் செல்வன் **அருண் பாலாஜி ரவிச்சந்திரன்**
படிப்பு B.Tech (IT)
வேலை Senilr Engineer, Forto, Berlin,
Germany
Rs. 5,00,000/PM



பிறந்த தேதி 11.01.1994
உயரம் 6' - 0"
நட்சத்திரம் பூராடம் 4ம் பாதம்
கோத்திரம் வில்வராய
பூர்வீகம் மாடாகுடி, கும்பகோணம்
தகப்பனார் **B. ரவிச்சந்திரன்,**
B.Com., Ex Indian Army
தாயார் **R. ரத்னா,** B.Sc.,
முகவரி பாலா ட்ரீம்ஸ், பிளாட் எண். 122,
கதவு எண். S1 ,12வது மெயின் ரோடு,
ராம் நகர், மடிப்பாக்கம்,
சென்னை – **600 091.**
Cell: 9788556262, 9488938132,
9600088024
விருப்பம் சமபடிப்பு, ஜெர்மன் செல்ல விருப்பமுள்ள வரன்

---

பெயர் **செல்வன் சதீஷ்குமார் .S**
படிப்பு MCA (Master of Computer Application)
வேலை Tech Lead at MetaSoft Tech
Systems Pvt. Ltd.
Chennai
Rs. 20 Lakhs / PA



பிறந்த தேதி 29.05.1989
உயரம் 180 cm
நட்சத்திரம் பூரட்டாதி
கோத்திரம் மலுவுட
தகப்பனார் **சீனிவாசன் .S** (TNSTC-CI-Rtd.),
விவசாயம்
தாயார் **விஜயகுமாரி .S** (இல்லத்தரசி)
முகவரி 24/27, வடக்கு வுல் வீதி,
தேவர் காலனி,
திருவானைக்கோவில்
திருச்சி – **620 005.**
Cell : +91 9786 414 605
Whatsapp : +91 9952 517 778

# மணமகள் தேவை



| | |
|---|---|
| பெயர் | செல்வன் **V. வினோத்** |
| படிப்பு | MCA |
| வேலை | Sclerawork Inc. (Work from Home) |
| | Rs. 17.6 Lakhs/PA |
| பிறந்த தேதி | 26.08.1988 |
| உயரம் | 184 cm |
| நட்சத்திரம் | திருவோணம் |
| கோத்திரம் | விளந்துட |
| பூர்வீகம் | வரகடை |
| தகப்பனார் | **S. வாஞ்சிநாதன்** |
| தாயார் | **D. அன்னபூரணி** (புலவனூர்) |
| முகவரி | 21/35, Big Street, |
| | மதுரா நகர், சேந்தங்குடி, |
| | மயிலாடுதுறை – **609 001.,** |
| , | Cell : 99650 45888 / 95974 76716 |
| விருப்பம் | Any Degree |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் **கா. வருண் நேரு** |
| படிப்பு | B.Tech (IT) |
| வேலை | Specialist - Software Engineering |
| | L & T Infotech, Chennai |
| | Rs. 12 Lakhs / PA |
| பிறந்த தேதி | 22.11.1986 |
| உயரம் | 166 cm |
| நட்சத்திரம் | பூசம் |
| கோத்திரம் | எரவுட |
| பூர்வீகம் | இறையூர் (பெண்ணாடம்) |
| தகப்பனார் | **மு. கார்த்திகேயன்** |
| தாயார் | **கா. தனலட்சுமி** |
| | (செந்துறை) |
| முகவரி | 174/2, கொத்தட்டை ரோடு, |
| | இறையூர் – **606 111.** |
| | கடலூர் மாவட்டம் |
| | Cell : 99419 38426 / 91763 27234 |
| | E-mail : dhanamkarthi76@gmail.com |

| | |
|---|---|
| பெயர் | செல்வன் **Dr. K. கௌதம்** |
| படிப்பு | M.S., ENT |
| வேலை | Senior Resident, |
| | Sri Sathya Sai Medical College, Thiruporur |
| பிறந்த தேதி | 26.10.1992 |
| உயரம் | 5' - 8" |
| நட்சத்திரம் | ஸ்வாதி |
| கோத்திரம் | வாணாதிராய |
| பூர்வீகம் | பெண்ணாடம் |
| தகப்பனார் | டாக்டர் **M. குலோத்துங்கன்,** MBBS |
| | Retd. Govt. Medical Practitioner |
| தாயார் | **K. எழிலரசி,** விருத்தாசலம் |
| முகவரி | எண். **88,** தெற்கு தெரு, |
| | விருத்தாசலம் – **606 001.** |
| | Cell : 94436 67386, 98408 97878 |
| விருப்பம் | M.D. / M.S. படித்த வரன். |

# மணமகள் தேவை



| | |
|---|---|
| பெயர் | செல்வன் **ந. சாய் சரண்** |
| படிப்பு | B.E., P.G.D.J., (Post Graduate Diploma in Journalism) |
| வேலை | Journalist, The Hindu, Coimbatore<br>Rs. 4 Lakhs / PA |
| பிறந்த தேதி | 29.05.1995 |
| உயரம் | 178 cm |
| நட்சத்திரம் | ரோகிணி |
| கோத்திரம் | பெண்ணாகட |
| பூர்வீகம் | பொய்கைக்குடி, மயிலாடுதுறை |
| தகப்பனார் | **S.P. நடராஜன்,** PG Asst. (Rtd.) |
| தாயார் | **G. ஜெயபாரதி,** B.T. English<br>PUMS முளப்பாக்கம்<br>மண்ணிப்பள்ளம், மயிலாடுதுறை |
| முகவரி | 12/20, பாரதி நகர்,<br>சித்தர்காடு, மயிலாடுதுறை **– 609 003.**<br>Cell : 94427 41969, 88708 80465 |
| விருப்பம் | கோவையில் பணிபுரியும் / பணி மாறுதல் பெறும் வரன். |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் **M.S. PRASHANTH** |
| படிப்பு | B.Tech (Mech). MS (Mech) - USA |
| வேலை | PTD Integrated Device Yield Engineer,<br>Intel Corporation, Hillsboro, Oregon, USA<br>USD 1,07,000/ PA, H1B Visa Holder |
| பிறந்த தேதி | 20.07.1994 |
| உயரம் | 168 cm |
| நட்சத்திரம் | Moolam 2nd Patham |
| கோத்திரம் | Pudhuvuda |
| பூர்வீகம் | Ponmasanallur (Mayiladuthurai) |
| தகப்பனார் | **V. Mohanasundaram,**<br>Retd. Vice President - TATA Projects Ltd., |
| தாயார் | **K. Akhila** (Homemaker)<br>Mullukudi (Kuttalam - Mayiladuthurai) |
| முகவரி | F-J, B-1, Nutech Tulips, 12, Bharathi Salai,<br>Ramapuram, Chennai - 600 089.<br>(Opp. to SRM University - Ramapuram Campus)<br>Cell : +91 84483 84995 / +91 73973 96873 |

# மணமகள் தேவை

பெயர் செல்வன் **குத்தால ரத்னம்**

படிப்பு B.E. (EEE).,

வேலை Software Engineer - London

Rs. 73 Lakhs / PA

பிறந்த தேதி 27.07.1991

உயரம் 176 cm

நட்சத்திரம் திருவோணம் 1ம் பாதம்

கோத்திரம் உலகுடை

பூர்வீகம் பாப்பான்குளம், திருநெல்வேலி

தகப்பனார் **சண்முக சுந்தரம்**

தாயார் **சங்கரலதா**

முகவரி திருநகர், மதுரை

Cell : +91 72006 10321

விருப்பம் படித்த பெண்



பெயர் செல்வன் **T. லோகேஷ் அரவிந்தன்**

படிப்பு B.Tech (IT)

வேலை Business Analyst,

Rs. 12 - 13 Lakhs / PA

பிறந்த தேதி 07.11.1995

நட்சத்திரம் பரணி

கோத்திரம் தென்னவராய

பூர்வீகம் குடவாசல் வடமட்டம்

தாயார் **G. கிருத்திகா** (இல்லத்தரசி)

முகவரி **A. திருமலைவேலு**

Flat No. 3A, Shanthiniketan Westcliff Apartments,

Durga Nagar, Sanitorium, Tambaram,

Chennai - 600 047.

Cell : 90809 98023, 94434 84596

விருப்பம் Very fair good looking, Working in Govt / IT Chennai



மயிலாடுதுறை மாவட்டம் மணல்மேடு தாலுகா காருகுடி - பெரிய பண்ணை -

## தெய்வத்திரு. G. சண்முகம் பிள்ளை அவர்களின்

## நூற்றாண்டு நிறைவு விழா



தோற்றம்
21.08.1921

மறைவு
16.05.1988

**அன்பின் திருவுருவாய்**
**பாசத்தின் பிறப்பிடமாய்**
**உண்மையின் உறைவிடமாய்**
**நேர்மையின் இருப்பிடமாய்**
**எளிமையில் காந்தியவாதியாய்**
**வாழ்ந்துகாட்டிய தங்களின் வழித்தடத்தை**
**என்றும் பின்பற்றும் உறவுகள் மற்றும் நண்பர்கள்**

மனைவி தெய்வத்திரு. **S. ஜெயம் அம்மாள்**

# தெய்வத்திருவாளர்கள்.G.சண்முகம் பிள்ளை - S.ஜெயம் அம்மாள்

தெய்வத்திருவாளர்கள்.S.கிருஷ்ணமூர்த்தி (எ) திராவிட மணி
K.வான்மதி
மயிலாடுதுறை

திருமதி.B.இந்திரா
Prof.Dr.S.பாலகுமார்
சிதம்பரம்

செல்வன்.B.சக்தி

திரு.K.கார்த்திகேயன்
திருமதி.K.கோப்பெருந்தேவி
மயிலாடுதுறை

திருமதி.R.விஜயலெட்சுமி
தெய்வத்திரு.Prof.K.P.இரத்தினம்
சென்னை

திரு.S.விசுவநாதன்
திருமதி.V.மாலதி
சென்னை

திருமதி.V.நந்தினி
திரு.O.R.ரவிராமன்
சென்னை

செல்வன்.O.R.வேதன்

திரு.V.விமல்பாலாஜி
திருமதி.M.சுஷரிதா
சென்னை

செல்வன்.V.மித்ரன்
செல்வன்.V.நேத்ரன்

திரு.S.அசோகன்
திருமதி.A.ஆனந்தி
மயிலாடுதுறை

திருமதி.A.மஹாலெட்சுமி
திரு.K.யுவராஜ்
USA

செல்வன்.Y.கபிலேஷ்
செல்வி.Y.ஹேஷ்மிதா

திரு.A.வினோத் கணபதி
திருமதி.S.எழிலரசி
USA

செல்வன்.V.பவித்ரன்
செல்வி.V.சஹானா

திரு.R.பரமசிவம்
திருமதி.S.சுஜாதா
சென்னை

செல்வி.P.மிருணாளினி

திரு.R.இளங்கோ
திருமதி.A.மீரா
சென்னை

செல்வன்.E.யுவன்குமார்

திரு.R.சுந்தரபாண்டியன்
திருமதி.R.சுஜாதா
சென்னை

செல்வன்.S.அபிஷேக்
செல்வி.S.அக்ஷயா

திரு.R.ரவிசண்முகம்
சென்னை

# வாழ்க மணமக்கள்







வரவுகுடி சாத்துக்குட கோத்திரம் தெய்வத்திரு. N. முத்தையாப்பிள்ளை – நலமுடன் லோகாம்பிகை மற்றும் வள்ளுவக்குடி தெய்வத்திரு. M. வேணுகோபாலன் பிள்ளை – நலமுடன் நீதி ஆகியோரின் பேரனும் மும்பை திரு. M. ஷண்முகநாதன் – S. செல்வராணி தம்பதியரின் அன்பு மகனுமாகிய திருநிறைச்செல்வன் **S. ரங்கேஷ்,** B.Tech., M.S., (Qualcomm, San Diego), நெடுங்குளம் சாத்தனுட கோத்திரம் தெய்வத்திரு. M. கோவிந்தராஜன் பிள்ளை – மாலதி மற்றும் மணல்மேடு தெய்வத்திரு. பஞ்சநாதம் பிள்ளை – நலமுடன் உமாராணி ஆகியோரின் பேத்தியும் G. சங்கர் – S. சுஜா அவர்களின் மகளுமாகிய திருநிறைச்செல்வி **S. ஹரிஷினி கனகம்,** B.Tech., (Deloitte USI, Bangalore), இவர்களின் திருமணம் **9.9.2022** அன்று திருச்சி, ஸ்ரீரங்கம் "அரங்கன் அரங்கம் மஹாலில்" சிறப்பாக நடைபெற்றது. வருகை தந்து வாழ்த்திய உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

**M. ஷண்முகநாதன்**
**S. செல்வராணி**
மும்பை

**G. சங்கர்**
**S. சுஜா**
**S. ஹரிநிதி**
திருச்சி

# C. சொக்கலிங்கம் பிள்ளை திருமதி. C. கஸ்தூரி தம்பதியினரின் சதாபிஷேக விழா.



ஸ்ரீமுணணம், சன்னதி தெருவில் வசித்து வரும், எண்ணநகரம், மருங்குட, தெய்வத்திருவாளர்கள், P. சிதம்பரம் பிள்ளை – C. அம்புஜம்மாள் அவர்களின் மகன் – மருமகளும், குணமங்கலம், தெய்வத்திருவாளர்கள், பழனிவேல் பிள்ளை – மதுராம்பாள் அவர்களின் மகள் – மருமனும், எங்களது பெற்றோருமான திரு. **C. சொக்கலிங்கம் பிள்ளை** திருமதி. **C. கஸ்தூரி** தம்பதியருக்கு, கீரமங்கலம் தெய்வத்திருவாளர்கள் நாராயணசாமி பிள்ளை – மனோன்மணி அம்மாள் ஆசியுடன், ''சதாபிஷேக விழா'' சிதம்பரம் ஸ்ரீ நடராஜர் கோவில் சன்னதியில் வைகாசி மாதம் 20–ம் தேதி (03–06–22) அன்று சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு வருகை தந்தும், வாழ்த்து அனுப்பியும் சிறப்பித்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றி.

**பேரன் பேத்திகள்**

செல்வன் **B. அரவிந்த்**

செல்வி **K. பிரியங்கா, K. பிரீத்திகா**

செல்வி **R. காயத்திரி**

செல்வி **N. ஷ்வேதா, N. சுப்ரியா**

**C. பாஸ்கர் – B. சந்திரவித்யா**

**C. கண்ணன் – K. இராதை**

**K. ராமநாதன் – R. சரஸ்வதி**

**M. நமசிவாயம் – N. ஜெயந்தி**




SOLAR ROOF TOP POWER GENERATING SYSTEM
SOLAR POWER PLANT - DESIGN, ERECTION & INSTALLATION

WHY MARUTHI ?

- INTERNATIONAL STANDARD PANEL WITH 25 YEARS WARRANTY.
- 24 YEARS OF EXPERTISE IN POWER MANAGEMENT.
- END TO END SOLUTION.
- 24 X 7 SUPPORT.

CUT DOWN YOUR ELECTRICITY COST

MARUTHI POWER CONTROL SYSTEM
CALL US @ 9841828077
Email - senthil@maruthipower.com
www.maruthipower.com



S.SELVAKUMAR - C.E.O

# கண்ணீர் அஞ்சலி







மலர்ந்தது:
29–11–1950

உதிர்ந்தது:
25–10–2022

கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், பெண்ணாடம், சாத்தநத்தம், தெய்வத்திருவாளர்கள் மாணிக்கம்பிள்ளை & ஜெகதாம்பாள் ஆகியோரின் மகனும், சென்னை – 600 063, புதுபெருங்களத்தூர், முத்துசாமி தெரு, 14–ல் வசித்தவருமான

திரு. **மா. சந்திரசேகரன்** (CMDA ஓய்வு) அவர்கள்

**25.10.2022**, செவ்வாய்கிழமை பிற்பகல் **12.40** மணியளவில் இறைவனடி சேர்ந்தார்கள். அன்னாரது ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வணங்கி வேண்டுகிறோம். அன்னாருக்கு இறுதி மரியாதை செய்தும், பிற சடங்குகளில் பங்கேற்றும் எங்களது துயரத்திலும் பங்கேற்ற அனைத்து நல்உள்ளங்களுக்கும் எங்களது மனமார்ந்த உணர்வுகளை உரித்தாக்குகிறோம்.

என்றும் தங்களின் இனிய நினைவில்

**மனைவி : ச. மங்களம்**

**மகள் : ச. ரேவதி**

**மகன் : ச. பிரகாஷ்**

**மருமகன் : ச. அஜய்**

**பேரன்கள் : அ. ஹர்சாந்த், அ. ஹர்சித்**

# கண்ணீர் அஞ்சலி







தோற்றம்
18–6–1940

மறைவு
14–09–2022

திரு. **M. இராமநாதன்** (ஆசிரியர் ஓய்வு)
முன்னாள் செயலர் S.K.S.D.H.S.S., திருப்பனந்தாள்
நிர்வாகக்குழு உறுப்பினர் பாணாதுறை மேல்நிலைப் பள்ளி
முன்னாள் தலைவர் கும்பகோணம் ஓய்வூதியம் சங்கம்.

திருப்பனந்தாள் நடுப்பண்ணை தெய்வத்திரு. T.R. மாணிக்கம் பிள்ளை – செல்லம்மாள் அவர்களின் மகன் M.R. என்று அழைக்கப்பட்ட M. இராமநாதன் அவர்கள் **14–09–22** அன்று சிவலோக பதவி அடைந்தார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்து கொள்கிறோம்.

உன் முகத்தில் தவழும் சாந்தம்
இந்த மண்ணில் எப்படி வாழ வேண்டும்
என்பதற்கு நீ ஓர் உதாரணம்
தெய்வத்திரு என்ற வார்த்தையின்
வலி உணர்ந்தோம் இப்போது
மாணிக்கம் பிள்ளை பெற்றெடுத்த மாணிக்கமே
மடியுறங்கு மடியுறங்கு
பூமித்தாயின் மடியுறங்கு

அவர்கள் நினைவில் வாழும்
மனைவி – **R. பானுமதி.**

பேரன்கள் – பேத்திகள்
**A. அபிநயா**
**M. ரிஷிநாத்**
**A. தர்ஷணி**
**M. சந்தோஷி**

மகன்கள் – மருமகள்கள்
**R. அருணராஜவேல்**
**A. கவிதா**
**R. மகேந்திரன்**
**M. ஹேமா**

## வியப்பூட்டும் பிரபஞ்சம்
## சூரியன் எனப்படும் நட்சத்திரம்

அக்ரி த. இராமலிங்கம்
முன்னாள் கூடுதல் இயக்குநர்,
சென்னை–91. செல் : 9445102249

சூரியக் குடும்பத்தின் மையத்தில் உள்ள ஒரு பிரபஞ்சப் பொருள் சூரியன் ஆகும். சூரியக் குடும்பம் என்பது கோள்கள், குறுங்கோள்கள், நிலாக்கள், மற்றும் பல்லாயிரம் கோடி நட்சத்திரங்கள் கொண்ட ஒரு மிகப் பெரிய தொகுப்பு ஆகும். சூரியனை மையமாக வைத்து 8 கோள்கள், 6 குறுங்கோள்கள், அஸ்டிராய்டுகள் என்று சொல்லப்படுகிற பெரும் பாறை கற்கள், சுற்றி வருகின்றன. இதுவே சூரிய மையக் கொள்கை ஆகும். சூரியன் என்படும் நட்சத்திரம் பூமியிலிருந்து 15 கோடி கி.மீ தூரத்தில் (ஒரு AU-Astronomical Unit) உள்ளது. சூரியன் என்பது எரிந்து கொண்டு இருக்கும் நெருப்பு பந்து, சூரியன் என்பது 92% ஹைட்ரஜன், 7.8% ஹீலியம், மற்றும் சிறிய அளவில் ஆக்சிஜன், கார்பன், நியான், ஹைட்ரஜன், மெக்னீசியம் இரும்பு மற்றும் சிலிகான் போன்ற மூலங்களை தன்னகத்தே கொண்டது, எல்லா மூலகங்களும் வாயு நிலையில் உள்ளன. ஹைட்ரஜன் மற்றும் ஹீலியம் மூலகங்கள் எரிபொருளாக பயன்படுகின்றன. சூரியனில் உள்ள எரிபொருட்கள் 500 முதல் 800 கோடி ஆண்டுகளுக்கு போதுமானதாக இருக்கும் என்று கருதப்படுகிறது. மேற்கண்ட காலத்திற்குப் பிறகு அதாவது சூரியனில் உள்ள எரிபொருட்கள் தீர்ந்துவிட்டால், சூரியனின் அளவு 250 மடங்கு பெரிதாகி, அதன் அருகில் உள்ள கோள்களான, புதன், வெள்ளி, பூமி மற்றும் செவ்வாய் கிரகங்களை தன்னுள்ளே இழுத்துக்கொண்டு, ஒளியிழந்து கருத்துளையாக (Black Hole) மாறிவிடும் என்ற கருத்து அறிவியல் வல்லுநர்களால் முன்வைக்கப்படுகிறது. சூரியனின் விட்டம் 14 லட்சம் கி.மீ. ஆகும். பூமியின் விட்டம் 12,742 கி.மீ. அதாவது சூரியன், பூமியைப் போன்று 109 மடங்கு பெரியது. சூரியன் திடப்பொருளாக இல்லாமல், வாயுக்கள் நிறைந்ததாக இருப்பதால், சூரியனின் நடுப்பகுதி (Equator) 26.8 நாட்களுக்கு ஒருமுறை தன்னைத்தானே சுற்றிக்கொள்கிறது. அதே சமயம் சூரியனின் துருவப்பகுதிகள், தன்னைத்தானே ஒருமுறை சுற்றிக்கொள்ள எடுத்துக்கொள்ளும் கால அளவு 36 நாட்களாகும்.

**சூரியன் – காலையில் சிகப்பு, மஞ்சள் நிறம் மதியத்தில் வெள்ளை நிறம் :**

சூரிய ஒளி என்பது நிறமாலை நிறங்களின் கலவை, காற்றில் ஒளி பரவும்பொழுது, காற்று மூலக்கூறுகளால் ஒளி சிதறடிக்கப்படும், மேற்கண்ட ஒளிச்சிதறல் ஒளியின் அலை நீளத்தைப் பொறுத்து மாறுபடும். சிவப்பு நிறத்தைவிட ஊதா நிறம் 16 மடங்கு ஒளிப்பரவல் அடைகிறது. எனவே, கூடுதலான காற்று அடுக்கின் வழியே ஊடுருவி, அடிவானத்திலிருந்து வரும் சூரிய ஒளியில் முற்றிலும் ஊதா நிறம் சிதறடிக்கப்பட்டுவிடும். ஒப்பீட்டு அளவில், சிவப்பு நிறம் குறைவாகத்தான் சிதறியிருக்கும். எனவே தான் அடிவானச் சூரியனில் கூடுதல் சிவப்பு நிறம் மிஞ்சி இருக்கும். இதனால்தான் சூரியன் ஆரஞ்சு நிறம் கலந்த சிவப்பாக அடிவானத்தில் தென்படுகிறது. மதியத்தில் நம் தலைக்கு மேலே சூரியன் உள்ள பொழுது வளிமண்டலத்தின் தடிமன் ஒப்பீட்டளவில் குறைவு. அதாவது குறைவான காற்று அடுக்கில் புகுந்து, ஒளி நம்மை வந்தடைகிறது. எனவே, ஒப்பீட்டளவில், அடிவானத்தைவிட மிக்க குறைவாகவே ஊதா நிறம் சிதறடிக்கப்படுகிறது. எனவே அனைத்து நிறங்களும் அதே கலவை விகிதத்தில் நம் கண்களை வந்தடைகிறது. இதனால் வெள்ளை நிறத்தில் உச்சி வெயில் சூரியன் நம் கண்களுக்குத் தெரிகிறது.

ஆதாரம் மற்றும் நன்றி

1. Basic Features of Astronomy By Er.V. Sambandam
2. விக்கிபீடியோ இணையதளம்.

---

## ஜோக்ஸ்

1. தலைவருக்கு, எதுக்குத்தான் ஜோசியம் பார்க்கறதுன்னு விவஸ்தையே இல்லாம போச்சு...! என்னாச்சு ?
   வருகிற தேர்தலில் தனக்கு எத்தனை கள்ள ஓட்டு விழும்ன்னு கேக்குராரே!.
2. உங்களுக்கு ஜோசியத்துல நம்பிக்கை இருக்கா ?
   கண்டிப்பா இருக்கே.
   அப்ப ஒரு ஆயிரம் ரூபா கடன் கொடுங்க.
   அதுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம் ?
   அடுத்தவாரம் லாட்டரில எனக்கு லட்ச ரூபா பரிசு விழும்னு ஜோசியர் சொல்லி இருக்காரே !
3. அந்த தலைவர் எப்பவும் நான்தான் கட்சி,கட்சிதான்நான்னு சொல்றாரே !
   கட்சியில் அந்த அளவுக்கா அவருக்கு மதிப்பு ?
   நீ வேற.அவர் கட்சியில இப்ப இருக்கிறது அவரு ஒருத்தர்தான் !
4. ஆசிரியர்களுக்குப் பிடிக்காத பதில் என்ன ?
   தெரியாது சார் !
   மிகச் சரியான பதில் !
5. என்னது டாக்டர் ஆஸ்பத்திரிக்கு நடந்தே போறாரு !
   அவரு கால்நடை டாக்டராச்சே !

## நீலிக் கண்ணீர் வடிக்காதே!

இச்சொற்றொடரைபலவீடுகளில்பல அம்மாக்கள் கூற கேட்டிருப்போம். பொய்யான கண்ணீருக்கு பேர் போன நீலியின் கதையை அறிவோமா!!

தமிழ்நாட்டில் சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு நடந்த இக்கதைக்கு, சில ஏடுகளில் ஆதாரமும் இருக்கின்றது. 2500 ஆண்டுகளுக்கு முன், திருவாலங்காடு என்னும் சிவஸ்தலம் தற்போதைய மெட்ராஸ் மாகாணத்திற்கு அருகில் இருந்தது. ஆலமரங்களால் சூழப்பட்ட அக்கிராமம் செழிப்புடன் இருந்தது.

அதில் வாழ்ந்த வணிகன் ஒருவன், கடவுளின் ஆசி பெற காசி நோக்கி செல்கிறான். பாஷைகள் மாறுபட்ட அவ்வூரில் ஓர் அந்தணனின் உதவி அவனுக்கு கிட்டுகிறது. அவ்வந்தணன் வீட்டிற்கு சென்று தங்குகிறான். அவ்வந்தணனின் பெண்ணைப் பார்த்து அவளது அழகில் மயங்கி, தமிழ்நாட்டில் தனக்கு திருமணமானதை மறைத்து, அவளை மணக்கிறான்.

தன் சொந்த ஊர் செல்ல அவன் யத்தனிக்க, அவனது புது மனைவியும், மைத்துனனும் அவனோடு வரத் தயாராகின்றனர். பல நாட்கள் பயணம் செய்து, பழையனூர் என்ற ஊரை அடையும்போது வணிகனுக்கு பதற்றமாகிறது. தனது சுற்றார் முன்பு ஏற்றுக்கொண்ட முதல் மனைவியை ஏதும் செய்ய இயலாது என்பதை உணர்கிறான்.

எனவே தன் புதுமனைவியைக் கொல்லத் திட்டமிடுகிறான் அவளது சகோதரன் இல்லாத சமயம் பார்த்து, அவளைக் கொன்றுவிட்டு தப்பி செல்கிறான். சிறிது நேரம் கழித்து வீடு திரும்பும் அவளது சகோதரன் கோரமான முறையில் தன் தங்கை இறந்திருப்பது கண்டு அதிர்ச்சியில் உயிரை விடுகிறான். வணிகன் அடுத்த பிறவியில் தரிசனன் என்ற பெயரில் பிறக்கிறான். பிறந்த பொழுதே அவனது ஜாதகத்தை கணிக்கும் வல்லுநர்கள், அவனது முன்பிறவி பயனாக அவனுக்கு ஆபத்து இருப்பதை உணர்கின்றனர். தரிசனன் தன்னை தற்காத்துக் கொள்ள ஒரு மந்திர கத்தியை தயார் செய்து கொடுக்கின்றனர்.

நாட்கள் நகர்கிறது. கொல்லப்பட்ட அண்ணனும் தங்கையும் பழையனூரில் ஒரு தம்பதிக்கு இரட்டைக் குழந்தைகளாய் பிறக்கின்றனர். நீலி, நீலன் என்றப்பெயரும் பெறுகின்றனர். சிறு பிள்ளைகளாய் பகலில் கபடம் இல்லாமல் இருக்கும் அவர்கள், இரவில் ரத்தவெறி கொண்டு அலைகின்றனர்.

அதன் பலனாய் ஊரில் பல ஆடுகள் இரவில் காணாமல் போகிறது. ஊரே நடுங்கும் வண்ணம் அவ்வாடுகள்ரத்தம்உரியப்பட்டுஇறப்பதும்தொடர்கிறது. குழந்தைகளின் நடவடிக்கைகளை சிறிது சிறிதாக அறிந்த பெற்றோர் செய்வதறியாது திகைக்கின்றனர். குழந்தை இருவரையும் ஊர்க்கோடியில் இருக்கும் ஆலமரத்தில் கட்டிவிட்டு வீடு திரும்புகின்றனர்.

நீலியும் நீலனும் அங்கேயே பேய்களாய் உருமாறி வாழ்ந்து வருகின்றனர். அவ்வாலமரத்தைக் கண்டு நடுங்கும் ஊர் மக்கள், அதனை பெரும்பாடுபட்டு வெட்டி விடுகின்றனர். ஏற்கனவே கொலைவெறியுடன் சுற்றும் நீலிக்கு இது இன்னும் வெறியை அதிகப்படுத்தியது.

வணிக சம்பந்தமாக அப்போது பழையனூரை அடையும் தரிசனன் அவளது கண்ணில் படுகிறான். ஆனால் அவனைக் கொல்லவிடாமல் அவனது மந்திர சக்தி தடுக்கிறது.

நீலி தன் சக்தியால் பொண்ணாய் மாறி, வெட்டப்பட்ட மரக்கிளை ஒன்றை தன் பிள்ளையாய் மாற்றி அழுத வண்ணம் ஊருக்குள் செல்கிறாள். தரிசனன் தன்னை ஏமாற்றியதாகவும், தன்னை விட்டுவிட்டு வேறொரு பெண் தேடி இங்கு வந்திருப்பதாய் கூறி அழுகிறாள்.

தரிசனன் அதிர்ச்சியடைந்து மறுக்கவே, நீலி தன் கண்ணீரால் மக்களின் மனதை மாற்றுகிறாள். ஊரார் தரிசனனை நீலியோடு செல்ல பணிக்கின்றனர். நீலியின் உண்மை நிலை உணர்ந்து, அவள் பேய் என்றும் அவளால் தன் உயிருக்கு ஆபத்து என்றும் அஞ்சுகிறான்.

அவனை சமாதானப்படுத்த, "இவ்வூரில் உன்னைக் காப்பது எம் கடமை!! எங்களின் கடமையில் இருந்து தவறினால் இதே இடத்தில் தீக்குளிப்போம்!! இது சிவன் மீது ஆணை!!" என்று அங்கிருந்த எழுபது வேளாளர்களும் உறுதியளிக்கின்றனர். தரிசனனின் கத்தியைக் கண்டு நீலி அஞ்சவே அவனது கத்தியை வாங்கிக் கொண்டு அனுப்புகின்றனர்.

அன்றிரவே தரிசனனை நீலி பழி வாங்குகிறாள். தான் வாழ்ந்த ஆலமரத்தை அழித்த ஊரார்களை பழிவாங்க எண்ணி, தரிசனனின் தாய் வடிவெடுத்து அவ்வூரில் நியாயம் கேட்கிறாள். சொன்ன சொல் தவறாத அவ்வேளாளர்களில் 69 பேர் அதே இடத்தில் தீக்குளிக்கின்றனர். கடைசி வேளாளர் தன் உயிரை தனது வயலில் இழக்கிறார்.

கோபம் தணிந்த நீலி, கடைசி கொலையாக தன்னால் உருவாக்கப்பட்ட குழந்தையை காலால் மித்து கொல்கிறாள்.

சொன்ன சொல் தவறாமல் நடந்த வேளாளர்களுக்கு அவர்கள் தீக்குளித்த இடத்தில் மண்டபம் ஒன்றை அமைத்துள்ளனர். நீலி தன் குழந்தையைக் கொன்ற இடமும் இன்று வரை பாதுகாக்கப்பட்டு வருகிறது. சாந்த ஸ்வரூபினியாய் உலகில் மறைந்திருக்க வேண்டிய நீலி, தன் கோபத்தால் இன்றளவிலும் மக்களிடத்தில் பேசப்படுகிறாள்.

தனக்கிழைக்கப்பட்ட அநீதியை எதிர்த்து, போராடிய கண்ணகியை போற்றும் நாம், நீலியை மறந்தது பெரும்புதிர்தான்".

– பா. லெட்சுமி,
மேற்கு தாம்பரம்.

## நட்சத்திரங்களும் மரங்களும்

(தொடர்ச்சி)

அக்ா. கு. சேதுசுப்பிரமணியன், சிதம்பரம்
அலைபேசி : 94436 65642

### 7. புனர்பூசம்

நட்சத்திர வரிசைகளில் ஏழாவதாக வரும் புனர்பூச நட்சத்திரத்தின் முதல் மூன்று பாதங்கள் மிதுனஇராசியிலும், நான்காவது பாதம் கடக இராசியிலும் அமைந்துள்ளன. இந்த நட்சத்திரத்தின் கிரகாதிபதி குருவாகும். எனவே இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்களும் ஆரம்ப திசை குருதிசையாக அமையப் பெறும். இந்த நட்சத்திரத்தின் அதிதேவதை அதிதியாகும். அதிதி என்பது பெண் வடிவமாகும். கணத்தில் தேவகணம், குணத்தில் சாத்வீகம், பறவையில் அன்னம், மிருகத்தில் பூனை, விருட்சத்தில் மூங்கில், ஆகியவை புனர்பூச நட்சத்திரத்தின் அம்சங்களாகும். அவதார மூர்த்தியான இராமபிரானின் திருநட்சத்திரம் புனர்பூசம் ஆகும். வான மண்டலத்தில் நீல நிறத்தில் காணப்படும். இதற்கு கழை என்றொரு பெயரும் உண்டு. கழை என்றால் மூங்கில் என்பது பொருளாகும்.

புனர்பூச நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் தெய்வபக்தி கொண்டவர்களாக இருப்பார்கள். இரக்க சிந்தனை உடையவர்கள். சுகபோகத்தை விரும்புபவர்கள். நெடுந்தூரப் பயணம் மேற்கொள்வதில் விருப்பம் அதிகம். சுறுசுறுப்பில் உழைக்கும் மனப்பான்மை கொண்டவர்களாதலால் செல்வம் சேரும். சாதுர்யம் உள்ளவர்கள். சில சமயம் வஞ்சக எண்ணத்தோடு செயல்படுபவர்கள்.

**தலவரலாறு :**

இமவான் மகளான உமையம்மைக்கும், சிவபெருமானுக்கும் கயிலையில் திருமணம் நிகழ இருந்த நிலையில், மக்கள், தேவர், நாகர் எல்லோரும் கூடிடவே, பாரம் தாங்காது வடக்கு தாழ்ந்து தெற்கு உயர்ந்தது. அதனைச் சமன் செய்ய, இறைவன் அகத்தியரை அனுப்ப, அவரோ திருமணக் காட்சியைக் காண விழைந்தார். சிவபெருமான் தானே தென்திசை வந்து திருமணக் கோலக் காட்சியைத் தருவதாக வாக்களித்தார். அகத்தியர் பொதிகை மலை வந்து தங்கவும், தெற்கும் வடக்கும் சமநிலைக்கு வந்தது. மணம் முடிந்த நிலையில் அம்பாள், விளையாட்டாக சிவபெருமானின் இரு கண்களையும் தமது கைகளால் மூடவே, அகில உலகமும் இருளில் ஆழ்ந்தது. இந்தப் பழிஅகல, அம்மை, கம்பை நதிக்கரையில் தவம் புரிந்து இறைவனை அடைகிறார். திருநெல்வேலித் தலவரலாறு இதுவேயாகும்.

முன்னொரு காலத்தில் தற்போது கோயில் இருக்கும் இடம் மூங்கில் காடாக இருந்துள்ளது. இராமக் கோன் என்னும் அன்பன் தினமும் மாட்டுப்பட்டிக்குச் சென்று பால் சுரந்து பாற்குடத்தினை மூங்கிற் காட்டின் ஊடே எடுத்துச் செல்வது வழக்கம். அவ்வாறு ஏந்திச் செல்லும்போது ஒரு குறிப்பிட்ட மூங்கில் புதரில் கால் இடறி பால் சிந்துவது வழக்கம். ஒரு முறை அந்தப் புதரை வெட்டிப் பார்க்கும்போது அங்கு சுயம்புவான சிவலிங்கமாய் இறைவன் காட்சியளித்தார். இன்றைக்கும் வெட்டுண்ட வடுவோடு கூடிய சிவலிங்கத்தை நாம் தரிசிக்கலாம். மூங்கிலில் தோற்றம் அளித்த காரணத்தினால் வேணுவன நாதர் எனப் பெயர் பெற்றார். தலமும் வேறு வனம் எனப்பட்டது. வேணு என்றால் மூங்கில் எனப் பொருள்படும்.

வேத சர்மா என்ற அர்ச்சகர் கோயில் பூசைக்கு வேண்டிய நெல்லை எடுத்து முற்றத்தில் உலர்த்திவிட்டு ஆற்றுக்குக் குளிக்கச் சென்றார். அந்த நேரத்தில் பெரிய மழை பெய்துள்ளது. எனவே அர்ச்சகர், நெல் என்ன ஆகுமோ என்று அஞ்சி ஓடி வந்து பார்க்கையில் அந்த நெல்லில் துளி மழை கூடபடாமல் இருந்துள்ளது. அர்ச்சகரின் அன்பினை உணர்ந்து இறைவன் நெல்லைக் காத்தினினால் நெல்வேலி நாதர் எனப்பெயர் பெற்றார்.

திருவேட்களத்து இறைவன் பாசுபதேசுவரரைக் கன்வமக ரிஷி வணங்கித் தவம் செய்யும்போது காலப்போக்கில் அவரை கரையான் புற்று மூடிக் கொண்டது. அதில் ஒரு மூங்கில் புதரும் வளர்ந்தது. இதனைப் பிரம்மா பிளந்து மூன்று அம்புகளாக ஆக்கி, சிவன், திருமால், சந்திரன் ஆகியோருக்கு அளித்தார். திருவேட் களத்தில்தான் அர்ச்சுனன் இறைவனிடமிருந்து பாசுபதத்தைப் பெற்றான்.

மூங்கில் காட்டிலிருந்து வேடுவர்களால் வெளிப்படுத்தப்பட்ட இறைவன் வீற்றிருக்கும் மற்றுமொரு தலம் தொண்டை நாட்டுத்தலமான திருப்பாசூர் ஆகும். சுந்தரரைத் தடுத்தாட்கொண்ட தலமான திருவெண்ணெய் நல்லூர் தலமும் மூங்கிலைத் தல விருட்சமாகக் கொண்ட தலமாகும்.

**மூங்கில் :**

காடுகளின் பசுமைத் தங்கம் எனப் பெயரெடுத்த மூங்கில் புல்லினத்தைச் சேர்ந்தது. 30 பேரினங்களில் 550 சிற்றினங்களைக் கொண்டது. நம் இந்திய நாட்டில் மட்டும் 100 இனங்கள் உள்ளன. தமிழ்நாட்டில் மட்டும் முக்கியமாக இனங்கள் குறிப்பிடப்படுகின்றன. அவை

கெட்டி மூங்கில் அல்லது கல் மூங்கில், மற்றும் பொந்து மூங்கில் அல்லது கூட்டு மூங்கில் என்பவையாகும்.

தாவரவியல் பெயர் : 1. Dendrocalamus strictus (ROX6) (கல் மூங்கில்)

**2. Bamboosa bambos**

**(பொந்து மூங்கில்)**

புல்வகைகளில் சிலவற்றுக்கு கிழங்கு (Rhizime) இருப்பது போன்று மூங்கிலுக்கும் கிழங்கு உண்டு; விதையும் உண்டு விதை முளைத்து கிழங்கை உருவாக்கிக் கொள்ளும் கிழங்கிலிருந்து முளைகள் தோன்றி வளரும். பக்கத்தில் வேர்கள் அடர்த்தியாகத் தோன்றி மண்ணினைப் பிணைத்துக் கொள்ளும். வளர்ந்த மூங்கில் தண்டுடன் காணப்படும். இதற்கு Culm என்று பெயர். ஒரு நாளில் 7.5 செ.மீ உயரம் என்ற வேகத்தில் வளரும் 30–32 வருடங்களில் மூங்கில் பூக்கும். பூங்கொத்துக்கள் தோன்றிய நிலையில் அதன் ஆயுள் முடிவடைந்து விடும். பூங்கொத்துக்களில் விதைகள் உருவாகும்.

**மருத்துவப் பண்புகள் :**

மூங்கில் குழாயில் நீர்வற்றிய நிலையில் 2.5 செ.மீ. கனத்தில் உப்பு படிந்து கட்டியாக இருக்கும். இந்த உப்பை ‘‘டபசீர்’’ (Tabasheer) அல்லது மூங்கில் மன்னா என்றழைப்பர். இதில் 96A% சிலிகன்–டை ஆக்சைடு என்ற பொருளும், இரும்பு, கால்சியம், ஆலம் போன்ற தாது உப்புக்களும் உள்ளன. சுரம், இருமல், மூட்டுவலி, ஊட்டச்சத்துக் குறைவு, சயநோய் (Pulmonary Tuberculosis) ஆகியவற்றுக்கு நல்லது. டபசீர் 1 பங்குடன் திப்பிலி ½ பங்கு, ஏலம் ¼ பங்கு, லவங்கம் 1/8 பங்கு, கற்கண்டு 2 பங்கு சேர்த்துப் பொடித்து 3 கிராம் அளவில் பால் சேர்த்து அருந்த மேற்சொன்ன குறைபாடுகளுக்கு மருந்தாகும். மூச்சிரைப்பு, மனச்சோர்வு நீங்கும்.

மூங்கிலரிசி நீரிழிவு (Diabetis) நோய்க்குத் தகுந்த உணவாகும். மூங்கிலரிசி நல்ல சத்துள்ள உணவுப் பொருளாகும்.

சத்துக்களின் அளவு (100 கிராமில்)

| | | | |
|---|---|---|---|
| நீர் | = 7.8 கிராம் | கால்சியம் | = 37 மி.கிராம் |
| புரதம் | = 10.1 கிராம் | பாஸ்பரஸ் | = 0.162 கிராம் |
| கொழுப்பு | = 1.2 கிராம் | இரும்பு | = 6 மி.கிராம் |
| நார்ச்சத்து | = 0.9 கிராம் | தயாமின் | = 0.17 கிராம் |
| மாவுச்சத்து | = 75.9 கிராம் | ரிபோஃபிளேவின் | = 0.12 கிராம் |
| தாது உப்புக்கள் | – 1.1 கிராம் | நியாசின் | = 0.12 கிராம் |

புனர்பூசம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு திருநெல்வேலி, திருவேட்களம், திருப்பாசூர், திருவெண்ணெய் நல்லூர் ஆகிய தலங்கள் பரிகாரத் தலங்களாக விளங்குகின்றன. இராமபிரான் எழுந்தருளியுள்ள திருக்கோயில்களுக்கும் சென்று வணங்கலாம். திருநெல்வேலியில் விசேடமாகத் தம்பதிகள் ஒற்றுமைக்கும், அங்கு எழுந்தருளியுள் புதபகவான் மாணவர்கள் கல்விச் செல்வத்திற்கும், வளமான வாழ்க்கைக்கும் வழிபாடு செய்ய நன்மைகள் உண்டாகும்.

விருட்சமான மூங்கிலைத் தகுந்த இடங்களில் நடுவதும், நீர் ஊற்றுவதும், வணங்குவதும் நல்ல பரிகாரமாக அமையும்.

அடுத்த இதழில் பூசம் நட்சத்திரம் பற்றித் தெரிந்து கொள்வோம்.

(பயணிப்போம்)


# ஜெயஸ்ரீ திருமண தகவல் மையம்

**19/2, வள்ளலார் கோயில் சன்னதி தெரு, மயிலாடுதுறை. அலைபேசி : 94434 88125**

கார்குல பெரியோர்கள் தங்கள் வரன் பற்றிய விபரங்களை பதிவு செய்து ஏற்ற வரன்களை எங்கள் ஆலோசனையுடன் பெற்றுச் செல்லலாம். தாங்கள் ஜாதகம் கொடுத்தால் தங்கள் அனுமதியுடன் மட்டும் தரப்படும். நிர்வாக செலவிற்கு பதிவுக்கட்டணம் ரூ. 200/– மட்டும் பெறப்படும். திருமணம் முடிந்த பின் பதிவு நீக்கப்படும். பதிவு ஓர் ஆண்டிற்கு பிறகு புதுபிக்க வேண்டும். திருமணம் முடிந்த தகவல் தெரிவிக்க வேண்டும்.

**அலுவலக நேரம் :** மாலை 4.30 மணி முதல் 7.30 வரை ஞாயிறு விடுமுறை

நிறுவனர் **எஸ். ஜெயம்** வாழ்த்துக்களுடன் **எம். சத்தியபால்**

கடித தொடர்புமுகவரி : **எஸ். ஜெயம்,** 10, மயூரநாதர் மேல வீதி, மயிலாடுதுறை – 609 001.

## வினைகள் எத்தனை வகைகள்?

தி. கபீர்தாஸ், சிதம்பரம். 9445473386

அனைத்து உயிருக்குள்ளும் இறைவன் இருக்கிறான். உயிரின் உடன் இருக்கும் உடலிலும் பரவி நின்று உயிருக்கு உடனாக இருக்கிறான். உயிர், உடல் மற்றுமின்றி உயிரின் வேறாக வெளியேயும் உள்ளான் என்பது சைவசித்தாந்தத்தின் அத்துவிதக் கொள்கை.

இறைவன் அருளும்போது உயிரின் விருப்பப்படி இயங்கவில்லை. உயிரின் முந்தைய விருப்பு, வெறுப்பு, செயல்பாடு, சிந்தனை இவற்றின் அடிப்படையில் தான் செயல்படுகின்றான். ஏனென்றால் வினைகள் நுகர்ந்து கழிக்கப்பட்டால்தான் ஆன்மா அவலச் சூழலிலிருந்து விடுபட முடியும்.

உயிருக்கு நன்மை ஏற்பட்டால் என் திறமையால் தான் நடந்தது என்கிறது உயிர். துன்பம் நேர்ந்தால் கடவுளே! எனக்கு ஏன் இந்த துன்பத்தைத் தந்தாய் என வசைபாடுகிறது. உயிர்கள் நுகரவேண்டிய இன்ப துன்பப் பயனும் வினைக்கு சம அளவு ஆற்றல் உடையதாகவே இருக்கும். இது தான் ''ஊழின் பெருவலி''.

வினை, அதன் வகை, அது ஆன்மாவை பற்றுதல், அதன் விளைவுகள் எத்தன்மை, அதிலிருந்து தப்பித்தல் இவற்றைப் பற்றி வினைக் கோட்பாடு தெளிவாக கூறுகிறது. அவற்றைப் பற்றி சிந்திப்பது, மன அமைதியும் பண்பாடும், மெய்ப்பொருள் அறிவும் வளர பெரிதும் துணை நிற்கிறது. ஆன்மாவை அவலத்திற்கு இழுத்து செல்வது மும்மலங்களே. அவை ஆணவம், கன்மம், மாயை உயிர்களிடமிருந்து மும்மலங்களும் நீங்கும் வரை சிவசக்தி மறைந்து நின்றே உயிர்களுக்கு வினைகளை ஊட்டுகிறாள். அப்போது அவளுக்கு ''திரோதாயி'' என்று பெயர். திரோதாயி என்றால் மறைப்பாற்றல்.

வினைகள் இருவகைப்படும். இறைவனை மனதில் கொண்டு, அவனின் ஒளி வட்டத்தில் இருந்து கொண்டு, திருவருள் துணை கொண்டு செய்யப்படும் வினைகள். ''அருள் வினை'' ஆகும். மும்மலங்களில் கட்டுண்டு, அறிவு விளங்காத நிலையில் நிலையற்ற உலக சிற்றின்பங்களை நாடி செய்யும் வினைகள் ''இருள்சேர் இருவினை'' என்பர். வினைகள் இரண்டாக இருப்பினும் அவற்றின் செயல்முறை பயனளிக்கும் பாங்கின் அடிப்படையில் நோக்க அவை இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட வகைகளாக வினைகள் விரிந்து கிடைக்கிறது.

நாம் இன்றைக்கு பணம் சம்பாதிக்கிறோம். இன்றைய தேவைக்கு செலவு செய்கிறோம். மீதி பணத்தை வங்கியில் செலுத்துகிறோம். முந்தைய இருப்பில் இப்பணம் சேர்க்கப்படுகிறது. மறுநாள் தேவைக்கு இந்த இருப்பிலிருந்து எடுத்துக்கொள்கிறோம். அதுபோல, இப்பிறவியில் நாம் வினைகளை செய்கிறோம். இந்தப் புது வினைக்கு ''ஆகாமியம்'' என்று பெயர். முற்பிறப்புகளில் வினைப்பயனை அனுபவித்துப் பின் அனுபவிக்காத பாக்கியிருக்கும் வினைக்கு ''சஞ்சிதம்'' என்று பெயர். இப்பிறப்பில் மீதியிருக்கும் வினையை முன்பிருக்கும் சஞ்சித வினையில் சேர்த்துவிடும். அடுத்த பிறவிக்கு அந்த சஞ்சித குவியலிருந்து எடுக்கப்படும் வினைக்கு ''பிராரத்தம்'' என்று பெயர். அதாவது இன்றைய சம்பாதிப்பு ஆகாமியம். பழைய இருப்பு சஞ்சிதம். இன்றைய தேவைக்கு எடுப்பது பிராரத்தம்.

அவரவர் செய்த வினைப்பயனை அவரவரே உரிய காலத்தில் உரிய அளவில் அனுபவிக்க வேண்டியது நியதி. தீயசெயல் செய்தவர்க்குதான் பிறப்பு, நற்செயல் செய்தவர்க்கு பிறப்பில்லை என முடிவு செய்ய முடியாது. புண்ணியவான்களும் மீண்டும் பிறப்பெடுக்க வேண்டும். அவர் பிறக்கும் போது இன்பத்தை மட்டும் நுகர்ந்து மேல்வினை செய்யாது இருப்பின் அவர் வாழ்வு சிறக்கும். ஆனால் அப்படி நிகழ்வதில்லை. அவர் மும்மலங்களினால் உந்தப்பட்டு பதவி, பணம், படைபலம் போன்றவற்றில் தன்னை உட்படுத்திக்கொண்டு மாயையில் மயங்கி அவர் அறியாமலே பல தீவினைகளைச் செய்யும் வாய்ப்புக்கு ஆளாகிறார். பலன் மறுபிறப்பு.

ஆகவே வினை என்னும் அச்சினை மையமாகக்கொண்ட பிறப்பு இறப்பு என்ற சக்கரத்தில் நன்மை செய்தவர்களும் தீமை செய்தவர்களும் சுழல்கிறார்கள். இது காலம் காலமாக தொடர்வட்டமாகிவிட்டது. அதனால் தீவினையை ''இரும்பு விலங்கு'' என்றும் நல்வினையை ''பொன் விலங்கு'' என்றும் ஆன்றோர் உருவகப்படுத்தி உள்ளனர். இன்பமும் துன்பமும் பிறப்புக்கு காரணம். ஆதலால் இவற்றை ''இருள்சேர் இரு வினை'' என்றும் கூறிகிறார்கள்.

உயிர்கள் இறைவனை சாரவேண்டுமானால் அவை ஆணவப்பற்றை விட வேண்டும். சிவபுண்ணியம் தேட வேண்டும். சிவஞானத்தை உணர வேண்டும். கோயில் திருப்பணி செய்தல், நந்தவனம் அமைத்தல், குருமார்களுக்கும் சிவனடியார்களுக்கும் தொண்டு செய்தல், அவர்கள் அறிவுறுத்திய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நால்வகை சைவ ஆகம நெறியில் நின்று மெய்தவம் இயற்றல் போன்றவற்றை வாழ்நாளில் கடைபிடிக்க வேண்டும். அதுதான் சிவபுண்ணியம் அதன் ஆற்றலால் விளையும் சிவஞான விரிவுக்கு ஓர் அளவேயில்லை.

# திருவிளையாடற்புராணம்

## 34- விடை இலச்சினையிட்ட படலம்

'சிவகாமியின் செல்வன்'

டாக்டர். தி. பாலசுப்பிரமணியன்.

**காடு வெட்டிய சோழன் தன்மை :**



உமையவள் தழுவக்குழைந்த குறியினைக் கொண்டவர் ஏகம்பநாதர். இவர் எழுந்தருளியுள்ள நகர் காஞ்சிபுரம் இங்கு "காடு வெட்டிய சோழன்" என்னும் மன்னன் ஒருவன் இருந்தான். அவன் காஞ்சியிலுள்ள காடு முழுதும் வெட்டி நகராகத் திருத்தியமையால் இப்பெயர் பெற்றான். இவன் உன்னத சிவபத்தன். சிவனியச் செல்வன். திருநீறும் உத்திராக்கமுமே உறுதிப்பொருள் என உணர்ந்து அவற்றை அணிந்த திருமேனியன். சிவமே மெய்ப்பொருள் என்பதை நன்கு அறிந்தவன். மதுரைச் சொக்கலிங்கப் பெருமானின் திருவிளையாடற் செய்திகளைக் கற்று செவியுற்று களிப்பவன்.

**கனவில் தோன்றிய கடவுள் :**

காடு வெட்டிய சோழன் மதுரை அங்கையற்கண்ணி அம்மையுடன் எழுந்தருளியுள்ள சொக்கநாதக் கடவுளின் திருவடிகளைக் கண்டு தொழ விரும்பினான். அதற்காக ஏங்கினான். பாண்டியனுக்கும் சிவனுக்கும் பகை. எப்படிச் செல்வது என்று தவித்தான். தவித்தவன் கனவில் ஆலவாய் அண்ணலான சோமசுந்தரக் கடவுள் தோன்றினார். "சோழ மன்னா! அஞ்சற்க! இன்றே துணையின்றி மதுரைக்குப் புறப்படு. நம்மைத் தரிசித்துக் கொண்டு போகலாம்"! என்றார்.

**சோழன் மதுரை நோக்கித் தனியே குதிரையில் புறப்படுதல் :**

தன் கனவில் வந்து அருளிய கடவுளின் அருட்திறத்தை எண்ணி வியந்தான். மகிழ்ந்தான். உடனே திருவருள் துணையுடன் புறப்பட்டான். காடு, மலை, ஆறுகளைக் கடந்து வையையாற்றின் கரையை அடைந்தான்.

**வெள்ளம் கண்டு உள்ளம் தளர்தல் :**

வையையில் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. ஆற்றைக் கடக்க முடியாது என்பதை உணர்ந்தான். சோமசுந்தரக்கடவுளை எண்ணினான். சூரியன் உதித்தால் பகைகொண்ட பாண்டியனிடம் சிக்குண்டு துன்புற வேண்டிவருமே என்று இரவில் வந்தால், இந்த வையையும் பகையானதே என்று பரிதவித்தான்.

**சிவன் சித்தராய் வந்து சோழனை அழைத்துச்செல்லல் :**

வையையின் வெள்ளங்கண்டு மனம் வருந்தும் சோழனின் மெலிவைப் போக்க எண்ணினார் சோமசுந்தரக் கடவுள். கனவில் வந்த சித்தர்போல் வந்தார். வையை வெள்ளத்தை வடியச் செய்தார். சோழனை அழைத்துக்கொண்டு ஆற்றைக் கடந்தார். வடக்கு மதில் வாயிலைத் திறந்தார். காவல் வீதிகளைக் கடந்தார். பொற்றாமறைத்தீர்த்தத்தை அடைந்தார்.

சோழனை நீராடச் சொன்னார். பின் தமது திருக்கோயிலுள் புகச் செய்தார். இந்திர விமானத்தில் எழுந்தருளியிருக்கும் தம்மை வணங்குவித்தார். பின் மீனாட்சியம்மையையும் வணங்குவித்தார். சோழனை பேரின்பப் பெருக்கில் மூழ்கச் செய்தருளினார்.

**சோழன் சோமசுந்தரரை வணங்கித் துதித்தல் :**

சோமசுந்தரரையும் மீனாட்சியையும் கண்டு வணங்கிய சோழன் திருவருள் வெள்ளத்தில் திளைத்தான்.

"எண்ணியதை எண்ணியவாறே யான் பெறச் செய்தவனே போற்றி!

பண் அமைந்த மறைகளால் அறியப்படாதவனே போற்றி!

அங்கயற்கண்ணி தன்னொடும் மர்ந்த ஆலவாயா போற்றி!

முனிவர்க்கும் மெய்ப்பொருளை வழங்கிய முக்கண்ணா போற்றி!

விண்ணின்று இறங்கிய விமானத்தில் எழுந்தருளிய இறைவா போற்றி!

பேரழகுடைய பெரும் பொருளான மெய்ப்பொருளே போற்றி!

எத்தனையே உடலெடுத்தும், இப்பிறவியில் பெற்ற இவ்வுடலே உன் திருவடிக்கு அடிமை பூண்டது! ஆதலின் ஐயனே! இவ்வுடலே எனக்கு உற்றதாய் நின்று பயனளித்தது. போற்றி செய்யும் அடியேனுக்கு நல்வரம் தருவாய் செம்பொருளே! உன் சேவடி போற்றி" என்றான்.

**சிவமூர்த்தி வடக்கு வாயிலில் இடபக் குறியிடுதல் :**

சோமசுந்தரக் கடவுளாகிய சித்தமூர்த்திகள் சோழனை நோக்கி "மன்னா! நீ இங்கு வந்த செய்தியைப் பாண்டியன் அறிந்தால் உனக்கு ஊறு செய்வான்" என்றவர் அவனை வடக்குவாசல் வழியாக அழைத்துக் கொண்டு வையையாற்றின் வடகரை வரை சென்றார். அங்கு அவன் நெற்றியிலே திரிபுண்டரமாக நீறு பூசினார். "உன் உள்ளத்திலே நிறைந்த கருத்திற்கேற்க

உனக்கு உற்றதுணை உண்டாகும். நன்றே நீ செல்க! என்று சொல்லி அனுப்பி வைத்தார். பின் திரும்பி வந்து தாம் முன் திறந்த வடக்கு மதில்வாயில் கதவினை மூடி, அதன் கண் இடபமுத்திரையை இட்டுத் தமது விண்ணிழி விமானத்தின்கண் எழுந்தருளினார்.

(இந்த வடக்கு மதில் வாயிலுக்கு "இலச்சினை வாயில்" என்று பெயர் வந்தது இதனால்தான்...)

**காவலர் வடக்கு வாயிலில் இடபக்குறியுள்ளதைக் கண்டு ஐயுறல்:**

காலை வந்தது. கதிர் எழுந்தது. வாயிற் காப்போர் வந்தனர். வடக்கு வாயிலில் கதவிலே இடபக்குறியினைக் கண்டனர். அதிர்ந்து ஐயுற்றனர். உடனே ஏனைய மூன்று வாயிற்கதவுகளையும், சென்று, கண்டு உற்று நோக்கினர். மூன்றிலும் தாம் முதல் நாள் வைத்த கயல் முத்திரை பிறழாமல் இருப்பதைக் கண்டனர். இது யாதாய் இருக்குமோ! இனி என்னாகுமோ! என்று அஞ்சினர். குல பூடண பாண்டியனிடம் விரைந்து சென்றனர். "அரசே போற்றி! நமது வடக்கு வாயிற் கதவில் இட்டிருந்த கயற்குறியை மாற்றி இடபக்குறி இடப்பட்டுள்ளது. இட்டவர் யார் எனத் தெரியவில்லை" என்றனர். பாண்டியனும் நேரில் சென்று கண்டான். "இது ஓர் அற்புதமே" என்றான். "இதனைச் செய்ய வல்லவர் யார்? ஒன்றும் அறிகிலேனே!" என்றான். ஐயமும் குழப்பமும் அவனை மிகுதியாய் ஆள, அரண்மனை சென்றான். அன்று பகல் முழுதும் உண்ணவில்லை. இரவிலும் அப்படியே! பஞ்சனையை வெறுத்தான். வெறுந்தரையில் படுத்தான். புரண்டான். பின் எப்படியோ கண்ணயர்ந்தான்.

**பாண்டியன் கனவில் இறைவன் தோன்றி அருள் புரிதல் :**

அன்றிரவில் சிவபெருமான் குலபூடணபாண்டியன் கனவில் தோன்றினார். "பாண்டியனே! ஆத்தி மாலையை அணிந்த சோழன் நம் பால் பத்தி கொண்டவன். காஞ்சியிலுள்ள காட்டை வெட்டி நம்மிடத்து அன்பெனும் விதையை விதைத்தவன். அவன் இங்கு வந்து நம்மை வணங்க விரும்பினான். நாம் தான் அவன்பொருட்டு வடக்கு வாயிலைத் திறந்து அவனை உள்ளே அழைத்து வந்து தரிசனம் செய்வித்தோம். பின் அவனை மீண்டும் அனுப்பிவிட்டு நமது இடபக்குறியை இட்டோம். நீ அஞ்சிடவோ, ஐயுறவோ தேவையில்லை!" என்று கூறி மறைந்தருளினார்.

**குலபூடணபாண்டியன் இறைவன் செயலையறிந்து மகிழ்தல்:**

கனாக்கண்ட பாண்டியன் கண் விழித்தான். ஐயம் அகன்றது. உள்ளம் உவந்தது. உடல் பூரித்தது. இறைவனை எண்ணித் துதித்தான். அவனுள்ள சுரந்தெழுந்தது ஓர் அற்புத வெள்ளம் (இங்கு இதற்குச் சிவஞானப் பெருக்கம் என்பதாகும்). இவை இரண்டும் அவனைக் கொள்ளை கொள்ளத் தன் அரண்மனையினின்று நீங்கிச் சோமசுந்தரக் கடவுளின் திருவிளையாடலை யாவர்க்கும் அறிவித்தான். அதனால் அவர்களும் தன்னைப்போல் பேரின்ப வெள்ளத்துள் மூழ்கிடக் கண்டு இன்புற்றான்.

**குலபூடண பாண்டியன் சிவபதம் அடைதல் :**

அதன் பின்னர், குலபூடண பாண்டியன் தன் மகன் இராசேந்திர பாண்டியனிடம் அரசுரிமையை அளித்தான். அவனை வாழ்த்தினான். பின் கொன்றைமாலை அணிந்த சிவபெருமானின் திருவடி மலரைத் தன் முடியில் அணிந்து விண்ணுலகை ஆளும் அரசுரிமையைப் பெற்றான்.


## K K R நகரில் பிளாட் விற்பனைக்கு

**சென்னை – பொத்தேரி இரயில் நிலையத்திலிருந்து**
**(SRM University Opposite)**

**3 கி.மீ தொலைவில் (காவனூர் VAO ஆபிஸிலிருந்து 1 கி.மீ) படப்பை மெயின் ரோட்டில்**

## K K R நகரில்

**1800 (30x60) சதுர அடி கிழக்கு பார்த்த மனை விற்பனைக்கு உள்ளது**

**மனைக்கு அருகில் வீடுகள் உள்ளன.**

தொடர்பிற்கு – **9488139928, 8778018628**

## வள்ளலார் 200
## 1823 - 2022

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் மணிதத்தன்மை என்னும் ஜோதி உள்ளது. ஆனால் ஆசை, கோபம், சுயநலம், பொய்மை போன்ற தீய குணங்கள் மனிதத்தன்மையை மறைத்து விடுகிறது. இந்த குணங்களை விலக்கி நல்ல நெறியை அடையும் போது மனிதன் தனக்குள் இருக்கும் தெய்வத்தை தரிசிக்கிறான். கறுப்பு, நீலம், பச்சை, சிவப்பு, ஆரஞ்சு, மஞ்சள், ஊதா என்னும் ஏழு வண்ணத்திரைகளை நீக்கி மாயாசக்தி, கிரியாசக்தி, பராசக்தி, இச்சாசக்தி, ஞானசக்தி, ஆதிசக்தி, சித்சக்தி என்று ஏழு சக்திகளைக் கடந்தால் ஜோதி வடிவான இறைவனை அடையலாம். பிற உயிர்களின் பசியைப் போக்கும் ''ஜீவகாருண்ய'' ஒழுக்கத்தை வள்ளலார் வலியுறுத்தினார். பசிப்பிணி தாக்கினால் அறிவு மயங்கும்; கடவுள் பற்றிய நினைப்பு அடியோடு அழியும்; சித்தம் கலங்கும்; நம்பிக்கை குலையும்; நாக்கு உலரும்; கை, கால்கள் சோர்ந்து போகும் என்று கூறிய வள்ளலார் மக்கள் பசியைப் போக்க 3 வேளையும் உணவு அளித்தார். அவரின் 200 ஆவது ஆண்டு விழா தற்போது கொண்டாடப்படுகிறது. இதை உணர்ந்த ஆட்சியாளர்கள் பள்ளிக்குழந்தைகளுக்கான உணவுத்திட்டங்கள் பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களுக்கான உணவகங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.



சிதம்பரத்திற்கு அருகில் மருதூர் என்ற கிராமத்தில் கணக்குப் பிள்ளையாகவும், குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியராகவும் வாழ்ந்த ராமையா பிள்ளை – சின்னம்மை தம்பதியருக்கு 5–வது குழந்தையாக 5.10.1823–ல் ராமலிங்கம் பிறந்தார். 6 மாதத்திலேயே தந்தைஇறந்துவிடதாய்சின்னம்மை5குழந்தைகளுடன் தன் சொந்த ஊரான பொன்னேரியிலும் பின் சென்னை ஏழுகிணறு பகுதிக்கும் குடி பெயர்ந்தார். மூத்த மகன் சபாபதி காஞ்சிபுரம் மகாவித்துவான் சபாபதி முதலியாரிடம் கல்வி பயின்று, சமயச் சொற்பொழிவுகள் நடத்தி குடும்பச் செலவுகளை சமாளித்தான். சிறு வயதில் ராமலிங்கத்துக்கு சபாபதி முதலியாரே கல்வி கற்பித்தார். ஆனால் ராமலிங்கம் கல்வியில் ஈடுபாடு காட்டாமல், ஆன்மீகத்தில் நாட்டம் கொண்டு நேரம் கிடைக்கும் போது கந்தகோட்டத்து முருகனை வழிபடச் சென்றார். ஒரு நாள் ராமலிங்கத்தைப் பின் தொடர்ந்து சென்ற சபாபதி முதலியார், ராமலிங்கம் முருகன் சன்னதியில்

''ஒருமையுடன் நினது திருமலரடி
நினைக்கின்ற உத்தமர் தம் உறவு
வேண்டும், உள்ளொன்று வைத்து
புறமொன்று பேசுவார் உறவு
கலவாமை வேண்டும்''

என்று மனமுருகப் பாடிக்கொண்டிருந்ததைக் கேட்ட சபாபதி முதலியார் மெய்மறந்து கண்ணீர் வடித்தார். அண்ணன் சபாபதியை அழைத்து, உன் தம்பி தெய்வப்பிறவி, அவனுக்கு உலகியல் கல்வி தேவையில்லை, அவனுக்குக் கற்பிக்க தன்னால் இயலாது என்று சொல்லிவிட்டார்.

ஒரு முறை அண்ணன் சபாபதிக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டு, ஒப்புக்கொண்ட சொற்பொழிவுக்குப் போக முடியவில்லை. தம்பிராமலிங்கத்திடம் சொற்பொழிவு நடக்கவுள்ள இடத்துக்குச் சென்று சில பாடல்களைப்பாடி தான் வரமுடியாத குறையைத் தீர்த்துவிட்டு வா என்றார். ராமலிங்கம் கூட்டத்தினரிடம் பாடல்களை மனமுருகப் பாடினார். கூட்டத்தினர் சொற்பொழிவையும் நிகழ்த்தும்படிக் கூறவே நீண்ட நேரம் சொற்பொழிவையும்நிகழ்த்தினார்.ஒன்பதுவயதே ஆன ராமலிங்கத்தின் திறமை கண்டு அனைவரும் வியந்து போற்றினர். பலரது வற்புறுத்தலுக்கு இணங்க சகோதரி உண்ணாமுலையின் மகள் தனக்கோடியை மணமுடித்தார். கடவுள் என்றால் என்ன என்ற உண்மையை அறியவிரும்பிய ராமலிங்கம் இல்வாழ்வில் ஈடுபாடு காட்டவில்லை.

கருங்குழி கிராமத்து மணியக்காரர் திருவேங்கடம் அவர்கள் இல்லத்தில் 9 ஆண்டுகள் தங்கியிருந்தார். ராமலிங்கம் தங்கியிருந்த அறையில் விளக்குக்கு எண்ணை வைக்கும் மண் கலயம் உடைந்துவிட மணியக்காரர் மனைவி புதுக்கலயம் வாங்கி, கலயம் பழக்கப்பட தண்ணீர் ஊற்றி வைத்தார். பின் கலயத்தை சுத்தப்படுத்தி எண்ணெய் வைக்க மறந்துவிட்டார். இரவில் ராமலிங்கம் எழுதும் போது, விளக்கு மங்கலாகும் போது கலயத்தில் இருந்த நீரை

ஊற்றி, விளக்கை எரியவிட்டுக் கொண்டிருந்தார். விடியும் வரை நீரில் விளக்கு எரிந்த அதிசயம் கருங்குழியில் தான் நிகழ்ந்தது. அங்குதான் 1865–ம் ஆண்டு ''சமரச வேத சன்மார்க்க சங்கம்'' என்ற அமைப்பை நிறுவினார். பின் அது ''சுத்த சன்மார்க்க சத்தியசங்கம்'' என்று மாற்றப்பட்டது. மக்கள் எளிதில் பின்பற்றக் கூடிய அந்த சங்கத்தின் கொள்கைகளை ராமலிங்கம் அறிவித்தார். அவை கடவுள் ஒருவரே; கடவுளை உண்மையான அன்புடன் ஒளி வடிவில் வழிபட வேண்டும். சிறு தெய்வங்களின் பெயரால் உயிர்ப்பலி கொடுக்கக்கூடாது; ஜீவகாருண்ய ஒழுக்கத்தைக் கடைபிடிக்க வேண்டும்; ஒழுக்கமே பேரின்ப வீட்டின் (சொர்க்கம்) திறவு கோல், சாதி, மத வேறுபாடு கூடாது. பிற உயிர்களையும் தன்னுயிர் போல் கருத வேண்டும்; பசித்த உயிர்களுக்கு உணவளிப்பது எல்லாப் புண்ணியங்களுக்கும் மேலானது என்பதே ஆகும்.

கருங்குழிக்கு அருகில் வடலூரில் பார்வதிபுரம் என்னும் கிராமத்து மக்களிடம் 80 காணி நிலத்தைத் தானமாகப் பெற்று 23–5–1867–ல் ''சமரச வேத தருமச்சாலையைத் தொடங்கினார். பின் அது ''சமரச சுத்த சன்மார்க்க சத்திய தருமச்சாலை'' என மாற்றப்பட்டது. இங்கு, மக்கள் வழங்கும் அரசு மானிய விலையில் வழங்கும் பொருட்களைக் கொண்டு சாதி, மத, மொழி, இன பாகுபாடின்றி மூன்று வேளையும் பசித்தவர்க்கு உணவளிக்கும் பணி இன்று வரை தொடர்து.

''வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்'' என்று பாடிய ராமலிங்கத்தை ''வள்ளலார்'', ''அருட்பிரகாச வள்ளலார்'', ''ராமலிங்க அடிகளார்'' என்ற பல பெயர்களில் மக்கள் அழைத்தனர். அவர் புகழ் நாடெங்கும் பரவியது. அவரைச்சுற்றிக் கூட்டம் பெருகியது. ஆனால் தனிமையை விரும்பிய வள்ளலார் வடலூருக்கு அருகிலுள்ள மேட்டுக்குப்பத்தில், சில ஆண்டுகளாகப் பயன்பாட்டில் இல்லாத வைணவ மதத்திருக்கூடத்தில் தங்கினார். அந்த இடத்துக்கு ''சித்திவளாகத் திருமாளிகை'' எனப் பெயர் சூட்டினார். அங்கு ஓர் அறையில் இருபுறமும் இரும்புச் சட்டிகளில் நிலக்கரி கனன்று எரிய, நடுவில் அமர்ந்து ''பிரமதண்டிகா யோகம்'' என்னும் தியானத்தில் அடிக்கடி இருந்து வந்தார். அகச்சூடு நிறைந்த உடலை வள்ளலார் புறத்தே இப்படி சூடேற்றி தன் தேகத்தை அக்னி தேகமாக்கினார்.

இறைவனை ஒளிவடிவாகப்போற்றிய வள்ளலார் சத்திய தருமசாலைக்கு அருகில் 1871–ம் வருடம் ஓர் ஒளித்திருக்கோயிலை 6 மாதங்களில் கட்டி முடித்தார். அத்திருக்கோயிலுக்கு ''சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானசபை'' எனப்பெயர் சூட்டினார். இது சாதி, மதம், இனம், மொழி, தேசம் என்ற வேறுபாடுகளைக் கடந்து அனைவரும் பிரார்த்தனை செய்யும் இடம். எண்கோண வடிவில், மையத்தில் நான்கு தூண்களைக் கொண்ட மண்டபம், அதன் மீது பன்னிருகால் மண்டபமும் ஒன்றுக்குள் ஒன்றாக உள்ளது நாலுகால் மண்டபத்தின் நடுவில்தான் ஆண்டவர் ஜோதி வடிவில் இருக்கிறார். பக்தர்கள் உட்கார்ந்து தியானிக்க வழிபாட்டுக் கூடமும் உள்ளது. வடலூருக்கு அருகில் மேட்டுக்குப்பத்தில் ''சித்தி வளாகம்'' உள்ளது. 25.1.1872 தைமாதம் 13–ம் நாள் தைப்பூசத்தன்று முதல் ஒளிபாட்டு விழா நடைபெற்றது. 20–10–1873 காலை 8 மணிக்கு சித்திவளாகத் திருமாளிகை முன் வள்ளலார் கூடியிருந்தவர்களுக்கு அருளுரை வழங்கினார். அடுத்து வந்த திருவண்ணாமலை தீபத்திருநாளில் அறையில் எரிந்த தீபத்தை சித்திவளாகத் திருமாளிகை முன் வைத்து மக்களை வழிபடச் சொன்னார். நான் இப்போது இந்த உடம்பில் இருக்கிறேன், இனி எல்லோர் உடம்பிலும் இருப்பேன் என்றார். 1874–ம் ஆண்டு தை மாதம் 19–ம் நாள் புனர்பூசமும் பூசமும் கூடும் நன்னாளில் வள்ளலார் அனைவருக்கும் அருளாசி வழங்கிவிட்டு இரவு 12 மணிக்கு அந்த மாளிகையின் திருஅறைக்குள் புகுந்தார். அவரது பிரதம சீடர்கள் கல்பட்டு ஐயாவும், தொழுவூர் வேலாயுதமும் அறையின் கதவை வெளிப்புறத்தில் பூட்டினர். அன்று முதல் வள்ளலார் உருவமாக இல்லாமல் அருவமாக நிறைந்து அருட்பெருஞ்சோதியாக விளங்குகிறார். பௌர்ணமி முழு நிலவும், பூச நட்சத்திரமும் ஒன்று சேரும் நாள் தான் ''தைப்பூசம்'' அந்நாளில் நம் ஆன்ம சக்தியும், ஆழ் மனமும் உயர் நிலையை அடையும்போது அருட்பெருஞ்சோதி தரிசனத்தை பெற வேண்டும். தைப்பூசத்திற்கு 3–வது நாள் அந்த அறையை சன்னல் வழியாகப் பார்க்க அனுமதிக்கப்படுகிறது.

சித்தி வளாகத்தின் கிழக்கில் ஒரு நீரோடை உள்ளது வள்ளலாரை தரிசிக்க வருபவர்கள் அதில் நீராடுவது வழக்கம். ஒரு முறை நீர் வற்றிவிட வள்ளலார் தமது கரத்தால் நீரோடையைத் தொட தீஞ்சுவை ஊற்று உருவாகி இன்று வரை ஒடிக்கொண்டிருக்கிறது. வள்ளலார் உயிர்ப்பலிக்கு எதிராகப் பேசி வரும் போது தாவரங்கள், விதைகள், காய்கனிகளுக்கும் உயிர் இருக்கிறதே அதைச் சாப்பிடலாமா ? என மக்கள் கேட்டனர். அதற்கு அவர் இவைகள் சடப்பொருளான விதையிலிருந்து உருவானவை. ஆனால் பிராணிகள் உயிருள்ள அணுக்கள்/ குட்டிகளிலிருந்து

உருவாவதால் அவைகளைக் கொல்வது பாவம் என்றார். மண்ணைப் பொன்னாக்கும் ரசவாத வித்தையையும், மூலிகைகளின் பயன்களையும், சித்த மருத்துவராகவும், காலை எழுவது முதல் இரவு உறக்கம் வரை மனிதனின் செயல்பாடுகள் பற்றியும் அறிந்தவராகவும் அதைப்பற்றி நூல்களையும் எழுதியுள்ளார். 6000 பாடல்கள் கொண்ட ''திருவருட்பாவை'' எழுதினார்.

வள்ளலார் அன்பு வழியில் ஆன்மீகத்தை அடையலாம் என்று உறுதியாக நம்பினார். மனிதர்களிடத்து மட்டுமின்றி விலங்குகள், பறவைகள், புழு, பூச்சிகள் போன்ற அனைத்து உயிர்களிடத்தும் அன்பு செலுத்தும் ''ஜீவகாருண்யம்'' பற்றிக் கூறினார். இதழாசிரியர், இறையன்பர், உரையாசிரியர், சமூக சீர்திருத்தவாதி, சித்த மருத்துவர், சொற்பொழிவாளர், ஞானாசிரியர், தீர்க்கதரிசி, பசிப்பிணி போக்கும் அருளாளர், பதிப்பாளர், தமிழ்மொழி ஆய்வாளர், பண்பாளர் என பன்முக ஆற்றல் கொண்டவராக வள்ளலார் விளங்கினார். 17–8–2007–ல் இந்திய அரசு வள்ளலாரின் சேவையைப் பாராட்டும் வகையில் அஞ்சல் தலையை வெளியிட்டது. ஒருவர் பிரார்த்தனை செய்யும் போது தனக்கு மட்டும் வேண்டாமல் இந்த உலகமெல்லாம் வாழ பிரார்த்தனை செய்ய வேண்டும் என்பதை

''நீதி நடஞ்செய் பேரின்ப நிதி நான் பெற்ற நெடும் பேற்றை
ஒதி முடியாது என்போல் இவ்வுலகம் பெறுதல் வேண்டுவனே''

என்று வள்ளலார் குறிப்பிட்டுள்ளார்.

– ப. சுவாமிநாதன்,
மயிலாடுதுறை. 9360185457

## பரிசளிக்க விரும்பினால்

பகைவனுக்கு மன்னிப்பு பரிசளி
உன் குழந்தைக்கு நல்ல நடத்தையைப் பரிசளி
உன் மனைவிக்கு நல்ல தன்மையைப் பரிசளி
உன் தந்தைக்கு மரியாதையைப் பரிசளி
உன் தாய்க்கு பெருமையைப் பரிசளி
உன் நண்பனுக்கு உன் உள்ளத்தை பரிசளி
உன் மனசாட்சிக்கு நம்பிக்கையை பரிசளி
உன் உணர்வுகளுக்கு உன் உணர்வை பரிசளி
உன் சகோதரனுக்கு நேசத்தை பரிசளி
எல்லா மனிதரிடமும் தாராள குணத்தை பரிசளி

பாபு (எ) ராமசெல்வம், விசலூர்.
9750806991


SRI ANJANYAR THUNAI

GSTIN : 33AAKFC0941L1ZI
TAN No. : CMBC05827D

C. CHITRASEKAR, B.Sc., (M.D.)
Cell : 93645 65546

Office : **CS TEXTILE PROCESS**
NO. 208, PUTHUNAGAR 7TH STREET,
NALLUR, KANGEYAM ROAD,
TIRUPUR - 641 606.

Website : www.cstextiles.in
Email : chitra@cstextiles.in
Factory : Kasipalayam, Tirupur
Our Buyers : 1. FILA (UK)
2. RELIANCE (INDIA)
3. ADIDAS (GERMANY)
4. LIFESTYLE (INDIA)



"QUALITY IS OUR LIFE"

## நகர கார்காத்த வேளாளர் சங்கம், மயிலாடுதுறை.

2022 – 2023 ஆம் ஆண்டிற்கு கல்வி உதவித்தொகை வழங்கிய புரவலர்கள்.

| பெயர் – முகவரி | ரூபாய் |
|---|---|
| ஸ்ரீ பில்டர்ஸ், சென்னை, இளங்கோவன் மணக்குடி | 25000 |
| N. இராமதாஸ் Agri, சின்ன கண்ணாரத்தெரு | 15000 |
| A. கிருஷ்ணன், ஆக்கூர் பைனான்ஸ் | 15000 |
| Dr. R. ராஜசேகரன், வைரம் கிளினிக் | 10000 |
| Dr.V. முத்து, ராம் மருத்துவமனை | 10000 |
| செந்தில் பைப்ஸ் | 10000 |
| N. சம்பந்தம் பெட்ரோல் பங்க் | 10000 |
| குரு சம்பத்குமார் | 10000 |
| R. கார்த்திகேயன் அட்வகேட், பாரத் நகர் | 10000 |
| மகளிரணி, பொறுப்பாளர்கள், (6 பேர்) | 6000 |
| A. கோவிந்தராஜ், சீனுவாசபுரம் | 5000 |
| R. செல்வநாயகம் மதுராநகர் | 5000 |
| R. தனராஜ், சித்ரா கேப்ஸ், திருவிழந்தூர் | 5000 |
| G. திருநாவுக்கரசு, A.V.C. ஓய்வு | 5000 |
| ஆ. திருநாவுக்கரசு, தருமபுரம்காலேஜ் | 5000 |
| S. முத்துக்குமார் E.B. (Retd.,) காந்தி நகர் | 5000 |
| P. ராமலிங்கம் சித்தர்காடு | 5000 |
| P. செந்தில்குமார், கீழமடவிளாகம் | 5000 |
| V. தியாகராஜன், B.A.B.L., அருண்நகர் | 5000 |
| M. கருணாநிதி, காந்திநகர் | 5000 |
| S. குலோத்துங்கன், SBI, K.K. நகர் | 5000 |
| D. பாஸ்கரன், சீனிவாசபுரம் | 5000 |
| A. வளவன், அண்ணாநகர் | 5000 |
| G. சிங்காரவேலு, சித்தர்காடு | 5000 |
| M.S. முருகேசன், செயலாளர் | 5000 |
| G. ரவிசெல்வம் ஒத்த தெரு, | 5000 |
| S. கார்த்திகேயன் சரோஜினிநகர், நாஞ்சில்நாடு | 5000 |
| செல்வி ஹரிணிபாலாஜி சிங்கப்பூர் | 5000 |
| சந்திரசேகரன், பொருளாளர் | 5000 |
| G. அசோக்குமார், SBI (Rtd) குமரன் தெரு, மயிலை | 3000 |
| ஜெகநாதன் சேந்தங்குடி | 3000 |
| K. செல்வகுமார், சின்ன கண்ணாரத்தெரு | 3000 |
| R. பாலசுப்பிரமணியன், திருவிழந்தூர், வடக்குவீதி | 2500 |
| S. ராதாகிருஷ்ணன் கம்பர் தெரு, சீனுவாசபுரம் | 2500 |
| S. அன்பழகன், தலைவர் | 2500 |
| A. ராஜேந்திரன், இணைச்செயலாளர் | 2500 |
| முருகானந்தம், துணைச்செயலாளர் | 2500 |
| P. ராமச்சந்திரன், LIC | 2000 |
| R. ஜெயக்குமார் IB, சீனிவாசபுரம் | 2000 |
| M. பாலசுப்பிரமணியம், BSNL (Retd) சீனிவாசபுரம் | 2000 |
| T. பன்னீர்செல்வம், கம்பன் பிரஸ், கூறைநாடு | 2000 |
| P. இளங்கோவன், கூட்டுறவு நகர் | 2000 |
| K. வரதராஜன், வலம்புரிநகர் | 2000 |
| C. மோகன்குமார், கேசிங்கன் | 2000 |
| S. அன்பழகன், திருவிழந்தூர் | 2000 |
| R. ராம்குமார், இளைஞரணி, அருண்நகர் | 2000 |
| G. பாலச்சந்திரன், சீனுவாசபுரம் | 2000 |
| T. பாஸ்கரன் IOB, சீனுவாசபுரம் | 2000 |
| S. திருஞானசம்பந்தம், சீனுவாசபுரம் | 2000 |
| G. சுரேஷ்குமார், பேராசிரியர் ஓய்வு | 2000 |
| சேரன், செங்குட்டுவன், தலைஞாயிறு | 2000 |
| G. திருநாவுக்கரசு, சுப்ரமணியபுரம் | 2000 |
| M. ராஜசேகர், மங்கை அப்பார்ட்மெண்ட் | 2000 |
| M. சத்தியபால் Ex-தலைவர் | 2000 |
| வன்மீக வெங்கடாசலம், சீனுவாசபுரம், | 2000 |
| T. பாண்டியன், H.M, காந்திஜிதெரு | 2000 |
| G. கணேசன், கீரப்பாக்கம், சென்னை | 2000 |
| S. ஞானசேகரன், இணை செயலாளர் | 2000 |
| M. ஞானவேல், கரையாந்தோப்பு | 1700 |
| R. அருணா, நவீன் மருந்துகடை | 1000 |
| P. சுவாமிநாதன், சீனிவாசபுரம் | 1000 |
| சுகன்யா, சுவாமிநாதன், சென்னை | 1000 |
| இரா. செல்வகுமார், புதுத்தெரு | 1000 |
| G. முருகையன், மயூரநாதர் கீழவீதி | 1000 |
| தங்கபிரகாசம், கூட்டுறவு நகர் | 1000 |
| R. தியாகராஜன், காந்திநகர் | 1000 |
| T. கனகசபை, A.V.C (Rtd) காந்திநகர் | 1000 |
| S. சோமசுந்தரம், சீனுவாசபுரம் | 1000 |
| S. பொன்னுசாமி SBI (Rtd) | 1000 |
| G.V. மனோகரன், மாயூரநாதர் தெற்குவீதி | 1000 |
| ராஜாமணி, கரையாந்தோப்பு | 1000 |
| G. மனோகரன், பாரதியார் தெரு, சீனுவாசபுரம் | 1000 |
| S. பிரபாகரன், மணிக்கிராமம் | 1000 |
| S. கந்தவேல் பிள்ளை, கூட்டுறவு நகர் | 1000 |
| A. அரங்கநாதன், சீனுவாசபுரம் | 1000 |
| க. சொக்கலிங்கம், கூட்டுறவு நகர் | 1000 |
| S. பானுமூர்த்தி, மயூரநாதர் வீதி LVB | 1000 |
| R. ஆனந்தன், திருவள்ளுவர் நகர் | 500 |
| N. விஸ்வநாதன், LB நகர் | 500 |
| V. கல்யாணசுந்தரம், சீனுவாசபுரம் | 500 |
| P.S. சிவப்பிரகாசம், காந்திநகர் | 500 |
| வரதராஜன், மதுரா நகர் | 500 |
| T. இளங்கோவன், ஆசிரியர், பூம்புகார் ரோடு | 200 |

– கூடுதல் 3,01,900

## நகர கார்காத்த வேளாளர் சங்கம், மயிலாடுதுறை.

2022 – 2023 ஆம் ஆண்டிற்கு கல்வி உதவித்தொகை பெற்றவர்கள்

| வ.எண் | மாணவ/மாணவியர் பெயர் | பெற்றோர் பெயர் | படிக்கும் வகுப்பு | கல்வி உதவித்தொகை ரூபாய் |
|---|---|---|---|---|
| 1 | M. அக்ஷதா | B. முருகன் | 1–ஆம் வகுப்பு | 2500 |
| 2 | V. கவிநயா | K. வேல்முருகன் | 1–ஆம் வகுப்பு | 2500 |
| 3 | M. ஜெகன் ஆனந்தன் | M. ஜெகதாம்பாள் | 3–ஆம் வகுப்பு | 3500 |
| 4 | M. பிரசன்னா | M. மனோகரி | 4–ஆம் வகுப்பு | 4500 |
| 5 | R. விஸ்வநாதன் | A. இராமநாதன் | 4–ஆம் வகுப்பு | 4500 |
| 6 | J. சுபஸ்ரீ | M. ஜோதிராஜன் | 4–ஆம் வகுப்பு | 4500 |
| 7 | R. சஞ்சனா | T. ராஜீவ் | 4–ஆம் வகுப்பு | 4500 |
| 8 | S. பாலாஜி | G. சிவக்குமார் | 4–ஆம் வகுப்பு | 4500 |
| 9 | A. தக்சேஷ் | R. அரவிந்தன் | 4–ஆம் வகுப்பு | 4500 |
| 10 | V. வர்ஷன் | V. வெங்கடேஷ் | 5–ஆம் வகுப்பு | 4500 |
| 11 | R. ஹரிஹரன் | D.R. லிங்கம் | 4–ஆம் வகுப்பு | 4500 |
| 12 | M. மகாலெட்சுமி | G. முத்துகுமார் | 4–ஆம் வகுப்பு | 4500 |
| 13 | செ. மணிஜெயம் | D. ஆனந்தி | 6–ஆம் வகுப்பு | 5000 |
| 14 | K.S. அர்ஜுன் | T. சரவணன் | 5–ஆம் வகுப்பு | 4500 |
| 15 | M. மோகனஸ்ரீ | S. முத்தையன் | 5–ஆம் வகுப்பு | 4500 |
| 16 | S. தர்ஷிணி | G. சிவசங்கர் | 6–ஆம் வகுப்பு | 5000 |
| 17 | S. அக்ஷயா | A. செந்தமிழ்செல்வன் | 6–ஆம் வகுப்பு | 5000 |
| 18 | S. மணிகண்டன் | G.சிவக்குமார் | 6–ஆம் வகுப்பு | 5000 |
| 19 | M. தாரணிகா | M. மனோகரி | 6–ஆம் வகுப்பு | 5000 |
| 20 | பா. ஹரிஷ் | சா. பாலமுருகன் | 7–ஆம் வகுப்பு | 5000 |
| 21 | S. கார்த்திக் | M. சுரேஷ் | 7–ஆம் வகுப்பு | 5000 |
| 22 | B. பரசுராமன் | M. பாஸ்கரன் | 7–ஆம் வகுப்பு | 5000 |
| 23 | V. ரித்தீஸ் | K. வேல்முருகன் | 7–ஆம் வகுப்பு | 5000 |
| 24 | K. தர்ஷா | R. கார்த்திகேயன் | 8–ஆம் வகுப்பு | 5000 |
| 25 | R. ரிஷிநாத் | M. ரமேஷ் | 8–ஆம் வகுப்பு | 5000 |
| 26 | N.P. சமிக்ஷா | N. பிரகாஷ் | 8–ஆம் வகுப்பு | 5000 |
| 27 | B. பவதாரணி | G. பாலமுருகன் | 8–ஆம் வகுப்பு | 5000 |
| 28 | R. பவீத்ரன் | M. ராமநாதன் | 8–ஆம் வகுப்பு | 5000 |
| 29 | S. யாழினி | J. சுதாகர் | 8–ஆம் வகுப்பு | 5000 |
| 30 | M. யோகபாலா | B. முருகன் | 8–ஆம் வகுப்பு | 5000 |
| 31 | V. ரட்சிதா | V. தெய்வானை | 8–ஆம் வகுப்பு | 5000 |
| 32 | S. அபிஷேக் | S. சிவசண்முகம் | 9–ஆம் வகுப்பு | 6000 |
| 33 | M.A. காஜல் | A. முத்துகுமரசாமி | 9–ஆம் வகுப்பு | 6000 |
| 34 | R.S. விஷால் | R. சங்கர் | 9–ஆம் வகுப்பு | 6000 |
| 35 | S. சுப்ரஜா | K. சுந்திரமூர்த்தி | 9–ஆம் வகுப்பு | 6000 |
| 36 | M. கார்த்திகா | M. மணிகண்டன் | 9–ஆம் வகுப்பு | 6000 |
| 37 | M. கமலவதி | M. ஜெகதாம்பாள் | 9–ஆம் வகுப்பு | 6000 |
| 38 | C. நித்யஸ்ரீ | M. வெங்கடேசன் | 9–ஆம் வகுப்பு | 6000 |
| 39 | K. ஹரிஷ் | S. கண்ணன் | 9–ஆம் வகுப்பு | 6000 |
| 40 | G. விஷ்ணுபிரியா | M. குணசேகரன் | 9–ஆம் வகுப்பு | 6000 |
| 41 | S. பிரவின்குமார் | S. ஷண்முகசுந்தரம் | 9–ஆம் வகுப்பு | 6000 |
| 42 | R. கவிப்பிரியா | T. இராமலிங்கம் | 10–ஆம் வகுப்பு | 6000 |
| 43 | S. பிரதீப் | K. சோமசுந்தரம் | 10–ஆம் வகுப்பு | 6000 |
| 44 | G. சிவப்பிரியா | K. குணசேகரன் | 10–ஆம் வகுப்பு | 6000 |
| 45 | M. கார்த்திகேயன் | S. மதியழகன் | 10–ஆம் வகுப்பு | 6000 |
| 46 | S. பிரியதர்ஷினி | K. செந்தில்நாதன் | 10–ஆம் வகுப்பு | 6000 |

| | | | | |
|---|---|---|---|---|
| 47 | S. அரவிந்து | சரவணன் (E.B) | 10–ஆம் வகுப்பு | 6000 |
| 48 | S. அபிராமி | கோ. சுவாமிநாதன் | 10–ஆம் வகுப்பு | 6000 |
| 49 | S. வைஷ்ணவி | N. சரவணன் | 10–ஆம் வகுப்பு | 6000 |
| 50 | M. மகாலெட்சுமி | M. மோகன் | 10–ஆம் வகுப்பு | 6000 |
| 51 | S. தைலா | ப. செந்தில்குமார் | 10–ஆம் வகுப்பு | 6000 |
| 52 | K. நவின் | சு. குமார் | 10–ஆம் வகுப்பு | 6000 |
| 53 | S. சர்மி | G. செந்தில்முருகன் | 11–ஆம் வகுப்பு | 6500 |
| 54 | V. வைஷ்ணவி | B. விஸ்வநாதன் | 11–ஆம் வகுப்பு | 6500 |
| 55 | தா. தி. ஞானபிரகாஷ் | T. புவனேஸ்வரி | 11–ஆம் வகுப்பு | 6500 |
| 56 | S. திவ்யதர்ஷினி | J. சுதாகர் | 11–ஆம் வகுப்பு | 6500 |
| 57 | S. ஹேத்தீஸ்பாலசுதன் | S. சுதாகர் | 11–ஆம் வகுப்பு | 6500 |
| 58 | B. கனிமொழி | M. பாஸ்கரன் | 11–ஆம் வகுப்பு | 6500 |
| 59 | A. கௌசிக் | S. அறிவழகன் | 11–ஆம் வகுப்பு | 6500 |
| 60 | S. வருண் | S. சங்கீதா | 12–ஆம் வகுப்பு | 7000 |
| 61 | P. விக்னேஷ்வரன் | G. பிரபாகர் DME | 12–ஆம் வகுப்பு | 7000 |
| 62 | N.R. அபிசேக் | N. ராம்மோகன் | 12–ஆம் வகுப்பு | 7000 |
| 63 | M. ஜெய்குமார் | K. மோகன் | 12–ஆம் வகுப்பு | 7000 |
| 64 | T. பிரியதர்ஷினி | M. திருமலைராஜன் | 12–ஆம் வகுப்பு | 7000 |
| 65 | M. சகானா | N. முத்துகுமரசாமி (அருண்) | 12–ஆம் வகுப்பு | 7000 |
| 66 | R. அபிராமி | E. இரவிச்சந்திரன் | 12–ஆம் வகுப்பு | 7000 |
| 67 | M. அருள்பிரகாசம் | M. மாணிக்கவாசகம் | 12–ஆம் வகுப்பு | 7000 |
| 68 | R. ஆதித்தியன் | S. ராஜேந்திரன் | 12–ஆம் வகுப்பு | 7000 |
| 69 | S. ஜெயபிரியா | J. செந்தில்குமார் | 12–ஆம் வகுப்பு | 7000 |
| 70 | M. திரிஷா | B. முத்துகோபால் | 12–ஆம் வகுப்பு | 7000 |
| | | | கூடுதல் | ரூ. 3,91,500/– |

## சீர்காழி நகர கார்காத்தார் சங்கம்

**இந்த ஆண்டு கல்வி உதவித்தொகை 17 மாணவச்செல்வங்களுக்கு வழங்கப்பட்டது.**

| | | | |
|---|---|---|---|
| 1) | திரு. P. மௌளவன் S/o பரமநாதன் – சேந்தங்குடி | III Std | 2500 |
| 2) | திரு. A. ஆனந்த ஸ்ரீ கோகுலகிருஷ்ணன் S/o ஆனந்தன் – திருப்பங்கூர் | VI Std | 3000 |
| 3) | செல்வி. S. ஸ்ரீவதி D/o J. சுந்தர் – வைத்தீஸ்வரன் கோயில் | VII Std | 3500 |
| 4) | செல்வி. S. பிரித்திகா D/o சக்திவேல் – வரவுகுடி | VII Std | 3500 |
| 5) | செல்வி. N. ஹேமதர்ஷினி D/o நடராஜன் – திருப்பங்கூர் | VII Std | 3500 |
| 6) | திரு. G. சர்வேஸ்வரன் S/o கணேஷ் – சீர்காழி | VII Std | 3500 |
| 7) | திரு. M. ரித்தீஸ் S/o மணிராஜா – கன்னியாகுடி | VIII Std | 3500 |
| 8) | செல்வி. A. கிருத்திகா D/o அசோகன் – திருப்பங்கூர் | VIII Std | 3500 |
| 9) | திரு. R. நடராஜன் S/o ராஜரத்தினம் – V. கோயில் | IX Std | 4000 |
| 10) | திரு. S. ஷர்மித் S/o சரவணன், தில்லைவிடங்கள் | IX Std | 4000 |
| 11) | திரு. S. பாலமுருகன் S/o சரவணன் – மானாந்திருவாசல் | X | 4000 |
| 12) | செல்வி. B. நிஷாந்தி D/o பாலசுப்பிரமணியன் – பெரியகொப்பியம் | XII | 5000 |
| 13) | செல்வி. N. கமலி D/o நடராஜன் – சீர்காழி | XII | 5000 |
| 14) | திரு. E. சுப்பிரமணி S/o இளங்கோவன் – சேந்தங்குடி | XII | 5000 |
| 15) | திரு. M. ஸ்ரீ முகுந்தன் S/o மணிகண்டன் – வரவுகுடி | VIII Std | 3500 |
| 16) | திரு. S. கிஷோர் S/o ஸ்ரீகாந்த் – சீர்காழி | XII | 5000 |
| 17) | திரு. S. தினேஷ்ராஜ் S/o செந்தில்குமார் – சீர்காழி | X | 4000 |
| | | மொத்தம் | 66000 |

- G. அமுதன், செயலாளர்.

## சங்கச் செய்திகள் அனுப்புவோர் கவனத்திற்கு

100க்கும் மேற்பட்ட சங்கங்கள் செயல்படுவதை நாம் அறிவோம். அனைத்து சங்கங்களும் ஒவ்வொரு மாதமும் சங்கச் செய்திகள் அனுப்புவதில்லை என்றாலும் அனுப்பப்படும் சங்கச் செய்திகள் அனைத்தையும் வெளியிட முயற்சிக்கிறோம். அதற்கு உதவிகரமாக சங்கச் செய்திகள் அனுப்புபவர்கள் தாங்கள் அனுப்பும் செய்திகளை சுருக்கமாகவும், முக்கிய தீர்மானங்களையும் மட்டும் அனுப்பி அதிகமான சங்கங்களுக்கு வாய்ப்பளிக்க உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். நிர்வாகத் தேவை காரணமாக அனுப்பப்படும் செய்திகளை நிராகரிக்கவோ சுருக்கித் தொகுக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு.

### நங்கநல்லூர்

செயற்குழு கூட்டம் 26.9.2022 மற்றும் 29.10.22 தேதிகளில் தலைவரது இல்லத்தில் நடைபெற்றது. செப்டம்பர் மாத கூட்டத்தில், மகாபலிபுரம் சுற்றுலா செல்வது பற்றியும், ஆண்டு விழா மூவரசன்பேட்டை வியாபாரிச் சங்க கட்டிடத்தில் நடத்தவும், சென்னை சங்க நூற்றாண்டு விழா மலரில் B/W முழு பக்க விளம்பரம் தருவதற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டது. திரு. S. வீரராஜ்குமாரின் ''செல்வசெழுமை'' பற்றி சிறப்புரை பாராட்டப்பட்டது. இணைசெயலாளர் திரு. V. கண்ணன் ரூ. 5000/– சங்க வளர்ச்சி நிதிக்கு வழங்கியதற்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது. இணைசெயலாளர் S. மதிவாணன் நன்றி கூறினார். திரு. கண்ணன் குடும்பத்தினர் இரவு உணவு அளித்தனர்.

அக்டோபர் மாத கூட்டத்தில் திரு. B. தரணிதரன் தந்தையார் பாஸ்கர சேது அவர்களின் மறைவுக்கும் வேளச்சேரி Dr. கல்யாணி அவர்களது மருமகன் செந்தில்குமார்–கொத்தட்டைஅவர்களதுமறைவுக்கும் கூட்டத்தில் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

செப்டம்பர் – அக்டோபர் – இது நாள் வரை நடைபெற்ற சங்க நிகழ்வுகள் செயலரால் விவரிக்கப்பட்டது.

மகாபலிபுரம் ஒரு நாள் சுற்றுலா சிறப்பாக அமைந்ததற்கு ஒத்துழைத்த சங்க செயலர் உள்ளிட்ட சுற்றுலா குழுவுக்கு பாராட்டும், ஆண்டு விழா சிறப்பாக நடந்திட நிர்வாகிகள் செயற்குழு உறுப்பினர்கள், மகளிரணியினர் முழு ஒத்துழைப்பு நல்கிடவும், ஆண்டு விழா அழைப்பிதழ் அச்சிட திரு. ஏ. கண்ணன், இணைச்செயலாளர் நன்கொடை வழங்கியதற்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

சங்க பொருளாளர் அளித்த நிதி நிலை விவரம் குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் சங்க ஆலோசகர் திரு. T. இராஜசேகரன் அவர்களால் நடத்தப்படும் தொழில் நிறுவனம், இந்த ஆண்டுக்கான மாவட்ட அளவிலான சிறந்த தொழில் நிறுவனமாக தேர்வு செய்யப்பட்டு தமிழக அரசின் ''சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள்'' என்ற ''விருது'' வழங்கப்பட்டதற்கு திரு. T. இராஜசேகரன் அவர்களுக்கு சங்கத்தின் சார்பில் பொன்னாடை அணிவித்து பாராட்டும் வாழ்த்தும் தெரிவிக்கப்பட்டது.

செயற்குழு உறுப்பினர் திரு. E. இளையராஜா நன்றி நவில கூட்டம் இனிது நிறைவடைந்தது.

– க. சரவணன்,

தலைவர்.

### குரோம்பேட்டை :

சங்கத்தின் 15–ஆம் ஆண்டு மங்கல சந்திப்பு விழா 02–10–2022 ஞாயிற்றுக்கிழமை அன்று சென்னை குரோம்பேட்டை நேரு நகர் R.P. ரோட்டில் உள்ள ஸ்ரீ விநாயகாஸ், ஸ்ரீ கணபதி ஹால் A/c-ல் வெகு விமர்சையாக நடைபெற்றது. சங்கத்தலைவர் திரு. R.S. அகோரம் அவர்கள் தலைமையில், திருமதிகள் குத்துவிளக்கு ஏற்ற, கடவுள் வாழ்த்துடன் விழா துவங்கியது. அனைவரையும் தலைவர் அவர்கள் வரவேற்று விழாவை துவக்கி வைத்தார்கள்.

மணமகன் மற்றும் மணமகள் வீட்டார் சார்பாக 272 பேர் பதிவு செய்து கொண்டு விழாவில் கலந்து கொண்டனர். மங்கல சந்திப்பு புத்தக பிரதியை சங்க ஆலோசகர்கள் டாக்டர் S. முத்துக்குமார் அவர்கள் மற்றும் திரு. சபா சிவகுமார் அவர்கள் வெளியிட Dr. KKR. சுரேஷ் தலைவர் தமிழ்நாடு கார்காத்தார் சங்க கூட்டமைப்பு அவர்கள் மற்றும் மனிதநேயம் T.N. முத்துக்குமாரசாமி அவர்கள் பெற்றுக்கொண்டு, இந்த மங்கல சந்திப்பின் மூலம் நிறைய திருமணங்கள் நடைபெற தங்கள் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டார்கள்.

மங்கல சந்திப்பு அமைப்பாளர் திரு. R.M. சத்தியமூர்த்தி அவர்கள் மங்கல சந்திப்பில் பதிவு செய்த அனைவரது தகவல்களையும் Whatsapp மூலம் கடந்த மூன்று மாத காலமாக பெற்றுதான் எடுத்த

காரியத்தை இரவு பகல் பாராமல் செவ்வனே செய்து அனைவரது பாராட்டையும் பெற்றார்கள். இவரது வெற்றிக்கு உறுதுணையாக இருந்த அவரது மனைவி திருமதி. அருணா சத்தியமூர்த்தி அவர்களுக்கும் சங்கம் சார்பாக பாராட்டை தெரிவித்து பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டார்கள்.

மங்கல சந்திப்பு அமைப்பாளர் பேசுகையில் இச்சங்கம் சார்பாக, மணமகன் / மணமகள் விபரங்கள் அடங்கிய செயலி (Mobile App.) ஒன்று "CKKSMS" என்ற பெயரில் நிறுவப்பட்டுள்ளது என்றும் இந்த APP-ஐ, உபயோகித்து மங்கல சந்திப்பிற்கு பிறகு இந்த App–ல் பதிவு செய்தவர்களின் விபரங்களையும் தெரிந்துகொண்டு பயன்பெறலாம் என்றும் கூறினார்கள்.

மங்கல சந்திப்பு புத்தகத்தில் தொகுக்கப்பட்டுள்ள மணமகன் மற்றும் மணமகள் வீட்டார் பற்றிய விபரங்களை சங்க முன்னாள் தலைவரும் இந்நாள் ஆலோசர்களுமான திரு. D. திருஞானசம்பந்தம் அவர்கள் மற்றும் திரு. T. முருகேஷ் அவர்கள் அறிமுகம் செய்து வைத்தார்கள்.

விழாவில் பங்கு கொண்டு விழாவை சிறப்பித்த அனைவருக்கும் சங்கத்தின் சார்பாக அறுசுவை உணவு வழங்கப்பட்டு விழா 1.30 மணியளவில் இனிதே நிறைவுற்றது.

J. தீபன், செயலர்.9659632577

## காட்டுமன்னார்கோயில்

25–09–2022 ஞாயிறு அன்று துணைத்தலைவர் திருமதி. S. லலிதா அம்மையார் இல்லத்தில் செயற்குழு உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது.

14–08–2022–ல் நடைபெற்ற பொதுக்குழு கூட்டம் மற்றும் ஆண்டு விழா வரவு செலவு அறிக்கையினை பொருளாளர் சமர்ப்பிக்க ஒரு மனதாக ஏற்றுக்கொள்ளவும், செயற்குழுக்கூட்டம் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை நடத்துவதெனவும், பொதுக்குழு மற்றும் ஆண்டு விழாவிற்கு சிதம்பரம் மண்டல மாநில துணைத்தலைவர் திரு. V. சிவராஜன் மற்றும் மண்டல செயலாளர் திரு. S. சிவகுருநாதன் இவருவரையும் அழைப்பதெனவும், நமது சங்கத்திற்கு உறுப்பினர்களை அதிக அளவில் சேர்க்க ஒவ்வொரு செயற்குழு உறுப்பினரும் முயல வேண்டும் என கேட்டுக்கொண்டு தீர்மானிக்கப்பட்டது.

இணைச்செயலர் திரு. K. ராஜீ நன்றியுரை ஆற்றினார். துணைத் தலைவர் அளித்த சிறப்பு சிற்றுண்டிக்குப் பின் இரவு 8 மணி அளவில் கூட்டம் நிறைவு பெற்றது.

V.R. ஞானம்,
Cell : 9444876164

## சீர்காழி :

சங்க செயற்குழு கூட்டம் 01.10.2022 அன்று சங்க கட்டிடத்தில் தலைவர் திரு. K. சுகுந்தவனநாதன் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் 2023–ஆம் ஆண்டு நாட்காட்டி அச்சிடுவதற்கு ஒப்புதல் பெறப்பட்டது. கல்வி உதவித்தொகை மாணவச் செல்வங்களுக்கு 21.10.2022 அன்று வழங்குவது என தீர்மானிக்கப்பட்டது. புதிய உறுப்பினர் சேர்ப்பதற்கு சங்க கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டது.

- G. அமுதன்,
செயலாளர்.

## மயிலாடுதுறை

சங்கத்தின் செயற்குழு கூட்டம் 02–10–22 அன்று தலைவர் திரு. S. அன்பழகன் தலைமையேற்க மகளிர் அணி இறைவாழ்த்து பாட இளைஞர் அணி பொறுப்பாளர் வரவேற்புரையுடன் தொடங்கியது.

செயலாளர் திரு. M.S. முருகேசன் அவர்கள் மாதாந்திர அறிக்கை வாசிக்கவும், பொருளாளர் செப்டம்பர் மாதத்திற்கான வரவு செலவினையும், சங்கக் கட்டிடம் புனரமைப்பு செய்த வரவு – செலவினையும் தாக்கல் செய்து ஒப்புதலும் பெற்றார்.

சங்கத் தலைவர் திரு. S. அன்பழகன் அவர்கள் சங்கத்தின் செயல்பாடுகள் குறித்து பேசினார். திரு. சா.தி. இராமலிங்கம் அவர்கள் நம்குல மக்கள் தமிழ்வழி திருமணம் செய்து கொள்ள வேண்டும் என வலியுறுத்தி பேசினார்.

சங்க செயற்குழு கூட்டம் ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிறு காலை என்பதை மாற்றி உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க மாலை நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

இளைஞர் அணி பொறுப்பாளர் திரு. G.V. கவாஸ்கர் நன்றியுரை நல்க சென்ற மாதத்தில் இறைவனடி சேர்ந்த நம் கார்குல உறவுகளுக்கு இரங்கல் தெரிவித்து ஒரு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

- N.S. முருகேசன்,
செயலர்.

## செம்பொன்னார்கோவில்

சங்க கூட்டம் 06–10–2022 அன்று சிறப்புத்தலைவர் திரு. மு. சபாநாயகம் பிள்ளை இல்லத்தில் அவரே இறைவணக்கம் பாடிட, சங்கத்தலைவர் திரு. கி. ராமநாதன் பிள்ளை தலைமையில் செயலாளர் திரு. ச. நெடுஞ்செழியன் பிள்ளை வரவேற்புரையும் சென்ற மாத அறிக்கையும் வாசிக்கவும், பொருளாளர் திரு. M.C. செல்வராஜ் பிள்ளை வரவு, செலவு அறிக்கை வாசிக்கவும் கூட்டம் அதனை ஏற்றது. கல்லூரியில் பயிலும் ஏழ்மையான மாணவர் திரு. பிரவீன் த/பெ. சங்கர், ராகுல்ராஜ் த/பெ செல்வம் இருவருக்கும் தலா 2500 ரூ. வீதம் ரூ 5000 வழங்கிய செம்பொன்னார்கோவில் திருமதி. Dr. மலர்விழி மாதவன் அவர்களுக்கு நன்றி தெரிவித்து கூட்டத்தில் தீர்மானமும் அவர்களை பாராட்டியும் திரு. கணபதி நடனம் பிள்ளை சபா. வரதராஜன் பிள்ளை பேசினார்கள். மு. சபாநாயகம் பிள்ளை இளைஞர்கள் நீச்சல் தெரியாமல் நீர் நிலைகளில் இறங்கும்போது உயிரிழப்பு ஏற்படுகிறது. அவர்கள் நீச்சல் கற்றுக்கொள்ள ஒவ்வொரு ஊராட்சியிலும், நீச்சல்குளம் அரசு அமைத்து தந்தால் உயிரிழப்பை தவிர்க்கலாம் என்றார்கள். நமது சங்க உறுப்பினர் முன்னாள் மண்டலச் செயலாளர் திரு. கோ. வடிவேல் பிள்ளை பூரண நலம்பெற வேண்டி சுவாமி திருநாவுக்கரசர் பாடிய பதிகத்தை பாடி கூட்டுப்பிரார்த்தனை செய்யப்பெற்றது. ச. ஆனந்தன் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுபெற்றது.

S. நெடுஞ்செழியன்

செயலாளர்

## பரசலூர் :

02–10–22 அன்று நக்கீரன் தெரு தலைவர் திரு. க.கோவிந்தராஜன் அவர்கள் இல்லத்தில் தலைவர் தலைமையில் இறைவணக்கம் P. விக்னேஷ்வரன் பாட வரவேற்புரையை திருமதி. பானுமதி கோவிந்தராஜன் நிகழ்த்த கூட்டம் துவங்கியது.

செயலர் வீ. கண்ணன் சென்ற மாத அறிக்கையையும் பொருளர் S.M. விஜய் நிதிய அறிக்கையையும் வாசித்தார். வரவு செலவு பதிவேடுகள் அனைத்தும் உறுப்பினர்களுக்கு பார்வைக்கு விடப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது.

2022–23–ம் கல்வி ஆண்டிற்கான CREW யில் மாணவ மாணவிகள் விரைவில் உதவித்தொகை பெறுவதற்கு முறையான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை உடன் அனுப்ப வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது.

ஐப்பசி 1–ம் தேதி பரசலூர் ஸ்ரீ தட்ச சம்ஹார மூர்த்தி மகா அபிஷேகத்தில் பெருமளவில் கார்குல சொந்தங்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பரிசு குலுக்கலில் ஆண்களுக்கான பரிசை B. சிவக்குமார், பெண்களுக்கான பரிசை R. ஈஸ்வரிக்கும் முறையே K. கோவிந்தராஜன் – பானுமதி கோவிந்தராஜன் கொடுத்தனர்.

விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் இல்லத்தார் சார்பில் இனிப்பு, காரம், காப்பி வழங்கப்பட்டது. திருமதி. லதா மதிவாணன் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவேறியது.

– வீ. கண்ணன், செயலர்.

Cell: 9894960438

## மேலையூர் (பூம்புகார்)

02–10–22 பூம்புகார் V.M.S. திருமண மண்டபத்தில் ஆண்டு விழா நடைபெற்றது. மாநில மண்டல இளைஞர் அணி பொதுக்குழு உறுப்பினர் திரு. S. பிரபாகரன் விளையாட்டுகளை ஒருங்கிணைத்துப் போட்டிகளை நடத்தி தந்தார். 30 ஆடவர், 15 மகளிர் மற்றும் 20 சிறுவர்கள் பங்கேற்றனர். மகளிர் குத்துவிளக்கேற்ற விழா தொடங்கியது. மூத்த உறுப்பினர் திரு. ஞானப்பிரகாசம் அவர்களின் இறைவணக்கத்துடன் நிகழ்ச்சிகள் தொடங்கின விழா நிகழ்ச்சிகளைப் பொருளாளர் திரு. T. ஜெயபாலன் தொகுத்து வழங்கினார். தலைவர் திரு. R.S. வரதராஜன் அனைவரையும் வரவேற்றார். இணைச்செயலர் பொறியாளர் திரு. S. அகோரம் முன்னிலை வகித்தார். கௌரவத் தலைவர் திரு. K.P.M. சங்கர் தலைமையுரை நிகழ்த்தினார். செயலர் திரு. M. பரணீதரன் ஆண்டறிக்கை படித்தார். அதைத் தொடர்ந்து மாநில கார்காத்தார் கூட்டமைப்பு பொறுப்பாளர்கள் திரு. S. சண்முகம் பிள்ளை, திரு. M. சிங்காரவேலன், திரு. N. சிதம்பரநாதம் பிள்ளை, திரு. B.T.R. சிவக்குமார், செம்பொன் ஒன்றியச் சங்கத் தலைவர் திரு. B. லெட்சுமணன், மேலையூர் சங்க உறுப்பினர்கள் திரு. V.S. சந்தானம் மற்றும் திரு. M. சிவநேசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கிப் பேசினர். பிறகு நல்லாசிரியர், நகைச்சுவை நாயகர் திரு. இராம. செல்வகுமார் சிறப்புப் பேருரை ஆற்றினார்.

அதன் பிறகு மாணவர்களுடைய பேச்சுப் போட்டி, மற்றும் பாட்டுப் போட்டி நடைபெற்றன. மேலும் மாணவர்க்கு வண்ணந்தீட்டும் போட்டி திரு. V.S. சந்தானம் சார்பில் அவருடைய மைந்தர் திரு. S. பாலாஜியால் நடத்தப்பெற்றுப் பரிசளிக்கப்பட்டது.

மற்ற போட்டிகளில் வென்றவர்களுக்குப் பரிசளிக்கப்பட்டது. பரிசுப் பொருட்களைத் திரு. B.T.R. சிவக்குமார் வழங்கினார். விழாவை நன்முறையில் நடத்த உதவி செய்த உறுப்பினர்கட்கும், விழாவிற்கு நிதியளித்த உறுப்பினர்கட்கும் நெஞ்சார்ந்த நன்றி.

சென்ற ஆண்டு 10–ஆம் வகுப்புப் பொதுத்தேர்வில் செம்பொன் கலைமகள் பள்ளியில் பயின்று முதல் மதிப்பெண் (475) பெற்ற நம் சங்க உறுப்பினர் திரு. சௌந்தரராஜனின் மகள் நித்யஸ்ரீயைப் பாராட்டி நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. CREW அறக்கட்டளை மூலம் கல்வி உதவித்தொகை பெற்று வேலைக்குச் சென்று பெற்ற முதல் மாத ஊதியத்தை CREW அறக்கட்டளைக்கு வழங்கிய நவீனின் தந்தை திரு. க. சௌந்தராஜன் பாராட்டப்பட்டார்.

உறுப்பினர் திரு. S. இராஜேந்திரனின் குடும்பத்தினர் காளான் சூப் வழங்கினர். அவரது மருமகள் திருமதி. துர்கா நூலாடை அணிவித்துப் பாராட்டப்பட்டார். மதியம் 2 மணியளவில் அனைவர்க்கும் சுவையான உணவு வழங்கப்பட்டது. திரு. K.P.M. சங்கர், திரு. G. சௌந்தரராஜன், திரு. S. அகோரம் செலவைப் பகிர்ந்தனர். திரு. M. பரணிதரனுடைய நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவு பெற்றது.

– ஆ. பரணீதரன்

## இராதாநல்லூர்

மாதாந்திரக் கூட்டம் 9–10–2022 அன்று இணைச்செயலர் காதி. G. சந்தோஷ்குமார் அவர்கள் இல்லத்தில் தலைவர் T. முத்துக்குமாரசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இணைச்செயலர் G. சந்தோஷ்குமார் அவர்கள் வரவேற்றார்.

பொருளாளர் மு. சீனிவாசன் அவர்கள் சங்க வரவு – செலவு கணக்கு வாசித்து முன்னிலைப்படுத்தியதை ஏற்பளிக்கவும், மாநில கூட்டமைப்பிற்கு நமது சங்க உறுப்பினர்கள் ஆண், பெண் எண்ணிக்கை விபரம் மற்றும் பொறுப்பாளர்களின் பெயர், முகவரி, கைபேசி எண்ணுடன் அனுப்பி வைக்க தலைவர் அவர்களை கேட்டுக்கொள்ளவும், 2023 ஆண்டிற்கான மாதாந்திர நாட்காட்டி அச்சிடுவது குறித்து அடுத்த கூட்டத்தில் பேசி முடிவு செய்யவும், மாநில சங்கத்திற்கு சந்தாதொகை செலுத்திட தலைவர் அவர்களை கேட்டுக்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது. பொருளாளர் மு. சீனிவாசன் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

- T. முத்துக்குமரசாமி, 9443645646

## மணிக்கிராமம்

சங்க கூட்டம் 7–10–22–ம் அன்று சிவன்கோவிலில் சங்க தலைவர் திரு. சிங்காரவேலன் தலைமையில் நடைபெற்றது. செயலர் இறைவணக்கமும் சிவபுராணமும் பாடினார். செயலர் திரு. G. அன்பழகன் சென்ற மாத அறிக்கை வாசிக்கவும் பொருளர் திரு. T. கபிலன் வரவு செலவு கணக்குகளை படித்தார். சங்கம் அதை ஏற்றுக்கொண்டது. சங்க தலைவரும், பொருளாளரும் இயற்கை விவசாயத்தைப்பற்றி எடுத்துரைத்தார்கள். மணிக்கிராமம் தெற்கு தெருவை சார்ந்த திருமதி. காந்திமதி அவர்களின் கணவரும், சுந்தரி வடிவேல், சுதா ஜெயக்குமார் அவர்களின் தந்தையுமாகிய திரு. G. பரமசிவம் பிள்ளை இயற்கை எய்தியதற்கு இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. திரு. தருமதுரை (துணை தலைவர்) நன்றி கூற கூட்டம் இனிதே முடிந்தது.

– கோ. அன்பழகன்,
செயலர்.

## திருவாரூர்

மாதக் கூட்டம் 21–8–2022 அன்று ஓய்வு பெற்ற பொறியாளர் திரு. ரவி அவர்கள் தலைமையிலும் திரு. கண்ணபிரான் அவர்களின் முன்னிலையிலும் கடவுள் வணக்கமாக திருமுறை பாராயணம் அனைவராலும் பாட நடைபெற்றது. தலைவர் அனைவரையும் வரவேற்று திருவாரூர் நகரில் வகிக்கும் சொந்தங்கள் அனைவரும் கூட்டங்களில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். திரு. குஞ்சிதபாதம் பிள்ளை தம்பதியர்க்கு சங்கத்தின் சார்பில் தலைவர் அவர்கள் பொன்னாடை போர்த்தி சிறப்பித்தார்கள். சங்கத்தின் சென்ற கூட்ட அறிக்கையை திரு. முத்துக்குமாரசாமி அவர்கள் சமர்ப்பித்தார். செயலர் திரு. சோமசுந்தரம் அவர்களும் துணைத்தலைவரை வாழ்த்திய பின்னர் ஆன்மீக சொற்பொழிவாக உள்ளம் கவர் கள்வன் என்ற தலைப்பில் குருவாயூரப்பன் பக்தர் பூந்தானம் என்பவரின் கதையை சிறப்புடன் கூறினார்கள். பனங்காடி திரு. பொன்னுசாமி அவர்கள் சங்க நிதி நிலை அறிக்கை வாசித்து அனைவரின் ஒப்புதல் பெற்றார்கள். நிறைவாக மாநில சங்க துணைத்தலைவர் குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள் திருவாரூர் சங்கத்தை திறமையுடனும், சிறப்புடன் நடத்தி வரும் தலைவர், செயலாளர், பொருளாளர், இணை செயலாளர்கள், துணைத்தலைவர்கள் அனைவரையும் பாராட்டி புகழ்ந்து கவிதை ஒன்றையும் வாசித்தார்கள்.

மற்றும் மாநில சங்க நிகழ்ச்சிகளையும் விரிவாக எடுத்து கூறினார்கள். பின்னர் கலந்து கொண்ட அனைவருக்கும் தேநீர் சிற்றுண்டி செயலாளர் குடும்பத்தினரால் வழங்கப்பட்டது. துணைத்தலைவர் கண்ணபிரான் பிள்ளை நன்றி கூறி கூட்டத்தை இனிதாக முடித்து வைத்தார்கள்.

– அ. சோமசுந்தரம், செயலாளர்.

## நெடுங்காடு

மாதக்கூட்டம் 2–10–2022 அன்று வரிச்சிக்குடி பெருமாள் கோயில் தெரு திரு. S. சந்திரசேகரன் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. முனைவர். திரு. S. ராஜேஸ்வரன் இறைவணக்கம் பாடினார். 33 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

CREW அறக்கட்டளை மூலம் கல்வி நிதி உதவி கேட்டு விண்ணப்பித்த சங்க உறுப்பினர்கள் 13 பேருக்கு கல்வி நிதி உதவியாக ரூ. 3,00,000 மொத்தம் விடுவித்த திரு. S. வெங்கடேசம் பிள்ளை அவர்களுக்கும் ஒருங்கிணைப்பாளர் திரு. T.N. முத்துக்குமரசாமி அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சென்னை கார்காத்தார் சங்க நூற்றாண்டு விழா மலருக்கு விளம்பரம் அளித்து செலவிடப்பட்ட தொகைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

கல்வி நிதி உதவி பெற்ற உறுப்பினர்கள் CREW அறக்கட்டளைக்கு தனித்தனியே நன்றி கடிதம் அளித்தனர்.

- G. செல்வகுமார்,
செயலர்.

## கும்பகோணம்

மாதாந்திர கூட்டம் தலைவர் T.M. வைத்தியநாதன் அவர்கள் இல்லத்தில் அவரது தலைமையில் 03–10–2022 அன்று மாநில தலைவர் S. விஜயகுமார் முன்னிலையில் துணைத்தலைவர் திரு. M. பாலகுரு அவர்களின் இறைவணக்கம் பாட திரு. A.S. பழனி அவர்கள் அனைவரையும் வரவேற்றார்கள். தலைமை உரைக்கு பிறகு செயலாளர் S. விஜயகுமார் அவர்கள் ஆகஸ்ட் மாதம் நடந்த விளக்கு பூஜை மற்றும் சங்க உறுப்பினர்களின் திருமணத்தில் கலந்து கொண்ட நிகழ்வுகளை அறிக்கையாக அளித்தார்கள். நிதி நிலை அறிக்கை பொருளாளர் திரு. V. சிவகுமார் அவர்களும் கல்வி சுழல் நிதி அறிக்கை திரு. .S. பழனி அவர்களும், புரவலர் நிதி அறிக்கை திரு. C. வைத்தியநாதன் அவர்களும், பசிப்போர் புசிக்க அறிக்கையை திரு. S. குணசீலன் அவர்களும் அளித்தார்கள். கல்லூரியில் Burser ஆக பதவி உயர்வு பெற்ற திரு. A. முருகபாலாஜி அவர்களுக்கும் DEO நேர்முக உதவியாளர் பதவி ஏற்கும் J. தமிழ்ச்செல்வன் அவர்களுக்கும் வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

தீபாவளியை முன்னிட்டு முதியோர் இல்லத்திற்கு உணவு மற்றும் உடை 22–10–2022 சனிக்கிழமை வழங்குவது எனவும், பொங்கல் விழா வரும் டிசம்பர் 31–12–2022 அன்று பரட்டை திரு. ஸ்ரீராம் அவர்கள் இல்ல வளாகத்தில் கொண்டாடுவது எனவும், மங்கலசந்திப்பு வழக்கம் போல் ஏப்ரல் 2023 முதல் வாரம் நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

சங்க உறுப்பினர் திரு. M. இராமநாதன், சங்க முன்னாள் பொருளாளர் GN. சிங்காரம் அவர்களின் மனைவி திருமதி. இராஜேஸ்வரி சிங்காரம் மற்றும் சங்க உறுப்பினர் கீரந்தகுடி T. இராமதாஸ் அவர்கள் மறைவிற்கும் இரங்கல் தெரிவித்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. திரு. R. சுகுமார் அவர்கள் கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார்கள்.

S. விஜயகுமார்,
செயலாளர்.

## மதுரை

செயற்குழு கூட்டம் 09–10–2022 அன்று மதுரை தருமை ஆதீன கட்டிடத்தில் சங்கத்தலைவர் Dr. K. சிவசங்கரன் பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

ஆலோசகர் திரு. இரா. கணேசன் அவர்களையும், தலைவர் திரு. இரா. மாரியப்ப பிள்ளை அவர்களையும் சங்கத்திற்கு அதிகமாக நன்கொடை வசூல் செய்தமைக்கு, பொருளாளர் திரு. S. முருகன் அவர்கள் பொன்னாடை போர்த்தி வாழ்த்துக்களை தெரிவித்தார்.

2021–22 ஆண்டுக்கான வரவு – செலவு அறிக்கையினை பொருளாளர் வாசிக்க அதனை அனைவரும் ஏற்றுக்கொண்டு ஒப்புதல் அளித்தனர். திரு. S. பாலசுப்பிரமணியம் CREW அறக்கட்டளை மூலம் அதிகப்படியான கல்வி உதவித்தொகை பெற்றுத்தந்ததற்கு சங்க நிர்வாகிகளை வாழ்த்தினார். நம் குலத்தாரின் திருமண நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் போது மணமக்களை வாழ்த்தி வாழ்த்துமடல் சங்கம் சார்பாக வழங்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

16–10–22 அன்று நமது சங்க துணைத்தலைவர் Dr. S.G. பாலமுருகன் அவர்கள் அவரது குரு மருத்துவமனை சார்பாக, புற்றுநோய் விழிப்புணர்ச்சி நிகழ்ச்சியாக ''மினி மாரத்தான் ஓட்டம்'' மதுரையில் குரு மருத்துவமனையிலிருந்து காந்தி மியூசியம் வரை நடைபெற ஏற்பாடு செய்திருந்தார். மதுரையின் பிரபல மருத்துவர்கள் கலந்து கொண்டனர். அந்நிகழ்ச்சியில் சங்கம் சார்பாக திரு. இரா. மாரியப்ப பிள்ளை, Dr. S. சிவசுப்பிரமணியன், திரு. S. முருகன், திரு. C.M. சொக்கலிங்கம், திரு. பசுங்கிளி ஆகியோர் கலந்து கொண்டனர்.

மகளிரணி செயற்குழு உறுப்பினர் திருமதி. மயிலம்மாள் 26–08–2022 மறைவிற்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது. செயலாளர் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

## இராஜவல்லிபுரம்

சங்கத்தின் ஏழாம் ஆண்டு விழா மற்றும் பொதுக்குழு 09–10–2022 செப்பறை பொன்னம்பலம் தேசிகர் மடாலயத்தில் தலைவர் A. திருஞானசம்பந்தன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

சங்க உறுப்பினர் V. வனபார்வதி, T. பார்வதபாஞ்சாலி அவர்களின் இறைவணக்கத்துடன் கூட்டம் துவங்கியது. சங்க துணைத்தலைவர் வரவேற்றார். கூட்டத்திற்கு திரு. C. இராமசுப்பிரமணியன் பிள்ளை மாநில மண்டல செயலாளர் முன்னிலை வகித்தார். கௌரவ ஆலோசகர் திரு. A. சக்திவேலு பிள்ளை அவர்களும் திரு. Ln.Er. S. செல்வகுமார் பிள்ளை அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.

திருநெல்வேலி சங்க தலைவர் C. சண்முகசுந்தரம் பிள்ளை, செயலாளர் S. கூடலரசன் பிள்ளை, பொருளாளர் M. மாரியப்பன் பிள்ளை, இணைச்செயலாளர் S. மாரியப்பன் பிள்ளை அவர்களும் நமது சங்க ஆண்டுவிழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள். சிறப்பு அழைப்பாளர்கள் அனைவருக்கும் பொன்னாடை அணிவித்து கவுரவிக்கப்பட்டது.

2021–2022 ஆண்டு அறிக்கை மற்றும் 2021–2022 ஆன வரவு செலவு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது.

நமது சங்க ஆண்டு விழாவுக்கு நடத்துவதற்கு முழு ஒத்துழைப்பும் நன்கொடையும் வாரி வழங்கிய நமது உறுப்பினர் மற்றும் கார்குல சொந்தங்களுக்கு நன்றி தெரிவித்தும், நமது சங்கத்திற்கான 2021–2022–ம் ஆண்டுக்கான வரவு செலவு அறிக்கை தணிக்கையாளர் வைரவநாதன் அவர்களிடம் ஒப்படைப்பது எனவும், திருநெல்வேலி சங்க புதிய பொறுப்பாளர்களுக்கும், மாநில பொறுப்பாளர்களாக தேர்வு பெற்றவர்களும், கல்வி உதவி வழங்கிய CREW உயர் திரு. வெங்கடேசம் பிள்ளை மற்றும் T.N. முத்துகுமாரசாமி பிள்ளை அவர்களுக்கும், கார்காத்தார் ஒப்புரவு ஆசிரியர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்தும், 18 வயதுக்கு மேற்பட்ட ஆண் பெண் இருபாலரையும் சங்கத்தின் உறுப்பினராக சேர்க்கவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

செயலாளர் R.S. முருகன் பிள்ளை நன்றியுரையுடன் மதியம் சொதி சாப்பாடு அனைவருக்கும் வழங்கப்பட்டு கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

R.S. முருகன்,
செயலாளர்.

## போரூர்

18–9–22 அன்று செயற்குழு கூட்டம், செயற்குழு உறுப்பினர் திரு. இராஜரெத்தினம் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. அதில் அனைத்து கார்குல சொந்தங்களுக்கும் தீபாவளி நல்வாழ்த்துகள் தெரிவித்துக்கொள்ளப்பட்டது. சங்கத்தலைவர் திரு. இராமலிங்கம் வரவேற்புரை ஆற்ற, சங்கச் செயலாளர் திரு. சந்திரமோகன் நிகழ்ச்சியினை தொகுத்து வழங்க, சங்க பொருளாளர் திரு. பரமசிவம் அவர்கள் அனுப்பிய வரவு செலவு அறிக்கை சமர்ப்பிக்க, சங்க முன்னேற்றத்தைப் பற்றி செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் அவர்களின் கருத்தை கூற, செயற்குழு உறுப்பினர் மயூர் பிரிண்டர்ஸ் திரு. நடராஜன் அவர்கள் நன்றியரை வழங்கியதுடன், இனிய மாலை விருந்தளித்த திரு. இராஜரெத்தினம் குடும்பத்தாருக்கு நன்றியையும் கூற, கூட்டம் இனிதே நிறைவுற்றது.

– S. சந்திரமோகன், செயலாளர்.

## வருந்துகிறோம்

சங்க உறுப்பினர் ஓய்வு பெற்ற காவல் துறை ஆய்வாளர் திரு. சந்திரசேகரன் அவர்களின் தாயார் திருமதி. விசாலாட்சி அம்மாள் மறைவிற்கு திருவாரூர் கார்காத்தார் சங்கம் சார்பில் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம்.

## 16ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் : 18-8-1944 மறைவு : 20-11-2006

திருமதி. **K. கஸ்தூரி அம்மாள்**
(ஆசிரியை ஓய்வு)
கொத்தவாசல்

## 18ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் : 20-1-1924 மறைவு : 20-11-2004

திருமதி. **கு. ஞானம் அம்மாள்**
குணமங்கலம்

தங்களின் பிரிவால் வாடும் குடும்பத்தினர்
கொத்தவாசல், காட்டுமன்னார்குடி (Tk), கடலூர் மாவட்டம்

# கண்ணீர் அஞ்சலி



மலர்ந்தது:
01–01–1937

உதிர்ந்தது:
22–09–2022

## திருமதி. S. ராஜலட்சுமி அவர்கள்

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தாலுக்கா மணிக்கிராமம் கீழத்தெரு தெய்வத்திரு **A.R. சாம்பசிவம் பிள்ளை** அவர்களின் மனைவியும் தெய்வத்திரு. S. சுந்தரராஜன் பிள்ளை தெய்வத்திரு. S. ரத்தினம் பிள்ளை மற்றும் நலமுடன் திரு. S. மணி பிள்ளை ஆகியோர்களின் தாயாருமான திருமதி. **S. ராஜலட்சுமி அம்மாள்** (வயது 85) அவர்கள் சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 5–ஆம் தேதி (22–09–2022) வியாழக்கிழமை காலை 10.50 மணியளவில் சிவலோகபதவி அடைந்தார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரது ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தனை செய்கிறோம்.

தங்கள் நினைவில் வாழும்

**மருமகள் : S. கலா சுந்தரராஜன்**
மயிலாடுதுறை.

**மகன் : S. மணி**

**மருமகள் : M. அருணா**
சென்னை–33.

**பேரன் மற்றும் பேத்திகள்**

| **M. பாலசுப்ரமணியன்** | **S. சுபா** | **R. ஜெனிதா** |
|---|---|---|
| நெதர்லாந்து | கனடா | குவைத் |

**நண்பர்கள் மற்றும் உறவினர்கள்**

# கண்ணீர் அஞ்சலி



மலர்ந்தது :
21–2–1958

உதிர்ந்தது :
12–10–2022

## கோ. இராஜேந்திரன் பிள்ளை அவர்கள்

மேனாள் நகர மன்ற உறுப்பினர், கண்ணா பேக்கரி & ஸ்விட்ஸ் நிறுவனர்
14வது வார்டு அ.இ.அ.தி.மு.க. செயலர், அ.இ.அ.தி.மு.க. மாவட்ட பிரதிநிதி, ஜெயங்கொண்டம்

அன்பின் அமைவிடமாய், பண்பில் பணிவிடமாய்!
பாசத்தின் உறைவிடமாய், பொதுவாழ்வில் நேர்மையாய்!
நேசத்தின் நிறைவிடமாய், நெஞ்சத்தில் நிகழ்விடமாய்!
நட்பின் இலக்கணமாய், நல் குடும்பத்தின் நம்பிக்கையாய்!
உள்ளத்தில் உயர்விடமாய், உறவுக்கு புகலிடமாய்!
இருந்த நீங்கள் 12–10–22 புதன் அன்று
மண்ணைவிட்டு மறைந்தாலும் எங்கள் மனதைவிட்டு
மறையவில்லை. நெஞ்சமெல்லாம் நீங்களிருக்க
நினைவலைகளில் வாழ்கின்றோம்.

இறுதி சடங்கில் கலந்து கொண்ட இன் நாள், மேன் நாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மேனாள் அரசு கொரடா, மற்றும் அனைத்து கட்சி பிரமுகர்கள், நண்பர்கள், உறவினர்கள் மற்றும் இரங்கல் செய்தி வெளியிட்ட மாண்புமிகு எதிர்கட்சி தலைவர் எடப்பாடி பழனிச்சாமி அவர்களுக்கும் மற்றும் கார்காத்த வேளாளர் சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

**செல்வி இராஜேந்திரன்,** மனைவி

**கோவி. சண்முகம்**
மேனாள் பொருளர் ந.கா.கா. சங்கம், மயிலாடுதுறை
NPKRRCSM பணி நிறைவு
**புலவர் சகுந்தலா சண்முகம்**
**சரவணன் கமலி,** ஒசூர்
**கோ. சேகர் இராணி**
**S. ராஜ்குமார்,** BE
**S. ராம்குமார்,** DCE
ஜெயங்கொண்டம்

**R. சரவணன்,** BE
**R. சிவசங்கரி சபரிநாதன்**
**M. கண்ணன் சரண்யா**
**M. சிவகாமசுந்தரி (பூங்கோதை)**
**M. கணேசன்**
**மணிவாசகன்-கல்பனா,** மன்னார்குடி
**செந்தில்வேலன்-மஞ்சுளா,** வாழ்க்கை

பேரன் பேத்திகள்
**S. ராஜாவேல், K. மாலினி, K. ஹாம்சினி,**
**S. ரூபலதா, S. பிரியதர்சினி, M. தீபசோபிகா, M. மனிஸ்கா**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



-:தோற்றம்:-
20-04-1948

-:மறைவு:-
13-12-2021

## திரு. M.பாலசந்திரன் அவர்கள்

(சிதம்பரம் கண்ணன்)

**"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பெல்லா**
**செய்தொழில் வேற்றமை யான்."** - குறள்

**(எல்லா மக்களும் பிறப்பால் சமமமே அவரவர் செய்யும் செயல் வேறுபாடுகளால் மட்டுமே பெருமை வரும்)**

**ஸ்ரீ வெங்கடரமணா ஹோட்டல் & ரெசிடென்ஸி**
**ரமணா'ஸ் ஹோம் ஸ்டே**
**ஹோட்டல் ஆதித்யா**
7,9 ராஜாபாண்டி நகர், கும்பகோணம். 612 001

என்றும் தங்கள் நினைவோடு வாழும்...

**B.புஷ்பவள்ளி**
**S.ராஜராஜேஸ்வரி**
**94421 30736**

**A.சுபாஷ்**
**S.ஐஸ்வர்யா**
**S.கிரிஷ்குமார்**

மற்றும்

**ஸ்ரீ வெங்கடரமணா குரூப்ஸ் பணியாளர்கள்**

**Posted at Pathrikachanel, Egmore**
**RNI No. TNTAM / 2009 / 30435 Regn. No. TN/CH( C) / 405 /2022 - 2024 & WPP. No. TN/PMG (CCR)/WPP-161/22-24**
**Date of Publication : 15th of Every Month** **15th / 16th November 2022**

CHOZHA HOTELS

Hotel Kanakabhishegam
First Hotel From The Temple




Means The Best Food

Amirtham A\C Veg Restaurant
Best Food @ Thirukadaiyur
Web : www.chozhahotels.com
Mob:7299078191

**Published by : K. SHANMUGAM,** on behalf of The Karkarthar Association (Madras), From 64, 10th Street, Sowrashtra Nagar, Choolaimedu, Chennai - 600 094 and **Printed by : M. NATARAJAN** at **Mayur Printers,** No. 1/7, Gopal Street, Saidapet Road, Vadapalani, Chennai - 600 026. **Editor : S. ANBALAGAN**